# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report

# 2016

ශ්‍රී ජයවර්ධනපුර රෝහල
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை
Sri Jayewardenepura General Hospital

# ஆண்டறிக்கை

2016

# ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

தயாரிப்பு:
திட்டமிடல் அலகு
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை
முழு பதிப்புரிமை பெற்றது © 2016

# பொருளடக்கம்


| | |
|---|---|
| **1. கூட்டிணைந்த தகவல்கள்** | |
| 1.1 வரலாற்று விடயங்கள் | 4 |
| 1.2 கூட்டிணைந்த நிர்வாகம் | 5 |
| 1.3 தொலைநோக்கு, செயற்பணி | 7 |
| 1.4 எமது பலங்கள் | 8 |
| 1.5 எமது எதிர்பார்ப்புக்கள் | 9 |
| 1.6 மருத்துவமனைப் பணிக்குழு | 10 |
| 1.7 நிபுணத்துவ மருத்துவர் பிரிவு | 11 |
| 1.8 எமது சேவைகள் | 12 |
| 1.9 எமது இணையத்தளம் | 13 |
| **2. முகாமைத்துவ குழு** | |
| 2.1 தலைவரின் செய்தி | 15 |
| 2.2 பணிப்பாளரின் செய்தி | 16 |
| 2.3 பணிப்பாளர் சபை | 17 |
| 2.4 முகாமைத்துவ குழு | 17 |
| 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள் | 18 |
| **3. தொழிற்பாட்டுத் தகவல்கள்** | |
| 3.1 செயலாற்றுகைப் பொழிப்பு | 22 |
| 3.2 முழுச் செயற்றிறன் | 26 |
| 3.3 துறைசார் மீள்நோக்கு | 27 |
| 3.4 பத்து வருடகாலப் பொழிப்பு | 45 |
| **4. நிதி அறிக்கைகள்** | |
| 4.1. நிதி நிலைமைக் கூற்று | 48 |
| 4.2. நிதி செயற்றிறன் கூற்று | 49 |
| 4.3 நிதி ஓட்டக் கூற்று | 50 |
| 4.4 கணக்குகளுக்கான குறிப்புக்கள் - 2016 | 52 |
| 4.5 முக்கிய கணக்கிடல் கொள்கை - 2016 | 60 |
| **5. கணக்காய்வு அறிக்கை** | |
| 5.1 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 65 |
| 5.2 கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிட்ட குறைகளை சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடுகள் | 89 |
| **6. எதிர்கால தொலைநோக்கு** | |
| 6.1 நிறுவனத்தின் செயலாற்றுகையை உயர்த்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய மத்திய காலச் செயற்பாடுகள். | 114 |

# 1. கூட்டிணைந்த தகவல்கள்



# 1.1 வரலாற்று விடயங்கள்



இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாகிய அதிமேதகைய ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களின் கோரிக்கையின் பேரில் ஜப்பான் குடியரசினால் இலங்கை பிரசைகளுக்காக வழங்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை, இலங்கை ஜனாதிபதியினாலும் ஜப்பான் குடியரசை பிரதிநிதித்துவப்படுத்தி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களினாலும் 1984 செப்டெம்பர் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டதுடன். ஏனைய அரசாங்க மருத்துவமனைகளுடன் ஒப்பிடும்போது, சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையில் மக்களுக்கு வழங்குவது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டதன் நோக்கமாகும். .

அப்போதைய மகளிர் விவகாரம் மற்றும் போதனா வைத்தியசாலைகள் அமைச்சர் கௌரவ சுனித்திரா ரணசிங்க அவர்களினால் 1985 பெப்ரவரி மாதம் 23 ஆந் திகதி நியமிக்கப்பட்ட மருத்துவமனையின் முதலாவது பணிப்பாளர் சபை, மருத்துவர் ஆர்.பீ.ஜே.பீரிஸ் (தலைவர்), மருத்துவர் டீ.டீ.சமரசிங்க (அமைச்சின் பிரதிநிதி), திரு.எஸ்.பி.சந்திரதாச (நிதி அமைச்சின் பிரதிநிதி), திரு,கே.என்.சொக்சி (ஜனாதிபதி சட்டத்தரணி), திரு.எம்.ரீ.பெர்ணான்டோ (பட்டயம் பெற்ற கணக்காளர்), மருத்துவர் எஸ்.கே.கப்ரால் (பணிப்பாளர் - மருத்துவ பட்டபின் படிப்பு நிறுவனம்), திரு.கே.டீ.எல்.ரத்னசேன (செயலாளர்) ஆகியோர்களைக் கொண்டிருந்ததோடு, முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டமானது 1985 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

1984 டிசெம்பர் 12 ஆம் திகதியன்று உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவின் பொறுப்பின்கீழ் மருத்துவமனைக்கு முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டதோடு, நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர் திரு.கே.யோகேஸ்வரன், நிபுணத்துவ உணர்விழப்பு மருத்துவர் கே.பெரேராவின் ஒத்தாசையுடன் 1985 ஜனவரி மாதம் 12 ஆம் திகதியன்று முதலாவது அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. 1985 ஜனவரி 18 ஆம் திகதியன்று மருத்துவமனையில் முதலாவது மகப்பேறு நிபுணத்துவ பெண் நோயியல், மகப்பேறு மருத்துவர் கிங்ஸ்லி த சில்வாவின் மேற்பார்வையில் நிகழ்ந்தது.

இலங்கையில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துதல், மருத்துவ பட்டம், பட்டப்பின் படிப்பு உட்பட பிற சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கான பயிற்சி நிலையமொன்றாக செயற்படும் நோக்கத்தைக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டது. மருத்துவமனை செயற்பாடுகளின் கட்டுப்பாடு முகாமைத்துவ குழுவுக்கு கையளிக்கப் பட்டுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மருத்துவமனையின் செயற்பாட்டுப் பணிகள், மூலதனச் செலவுகள் என்பவற்றுக்கு பொது திறைசேரியின் மானியம் மற்றும் மருத்துவமனையின் வருமானம் என்பன உபயோகப்படுத்தப்படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை, இவ்வேளையில் 32 வருடங்களுக்கு மேலாக சிகிச்சை சேவையையும், நவீன மருத்துவ வசதிகளையும் வழங்கி தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்துள்ளது

# 1.2 கூட்டிணைந்த நிர்வாகம்

பொது திறைசேரியின் பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "பகிரங்க தொழில் முயற்சிகளுக்கான கூட்டிணைந்த நிர்வாகத்தின் சிறந்த தொழில் முயற்சி சேவை" என்னும் கைநூல் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டுகின்றது. மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை நியமிக்கப்பட்ட சபைகள் இந்த கோவையிலுள்ள கோட்பாடுகளை செயற்படுத்தியுள்ளன.

## மருத்துவமனையின் பணிப்பாளர் சபையும் உறுப்பினர்களும்




முகாமைத்துவ சபை நிறைவேற்று தரமற்ற சுதந்திரமான மூன்று பணிப்பாளர்களையும், நிறைவேற்று தரமற்ற சுதந்திரமற்ற பணிப்பாளர்கள் ஐந்துபேரினையும் , தவிசாளரையும்,முகாமைத்துவப் பணிப்பாளரையும் கொண்டது.முகாமைத்துவப் பணிப்பாளர் பணிப்பாளர் சபையின் முடிவினை நடைமுறைப்படுத்துவதுடன் முகாமைத்துவ குழுவின் மூலம் நாளாந்த நிர்வாகப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படுகின்றது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்தின் ஒன்பதாம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மருத்துவமனையின் நாளாந்த நிர்வாக பணிகளில் ஈடுபடாதுவிட்டாலும், மருத்துவமனையின் தொழிற்பாடு தொடர்பில் கிட்டிய மேற்பார்வை மற்றும் மீள்நோக்கு பணிகளில் ஈடுபடுவர். பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் இருவர் பொருள் மற்றும் சேவை கொள்வனவு சபை உறுப்பினர்களாகவும் ஒருவர் வரவுசெலவுத் திட்ட மற்றும் நடைமுறைப்படுத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவராகவும் செயலாற்றுகின்றனர். கணக்காய்வு குழுவின் தலைவராக தலைமை வகிப்பது திறைசேரியின் பிரதிநிதியாவார்.

# 1.2 கூட்டிணைந்த நிர்வாகம் -தொடர்பானது

## சபை உறுப்பினர்களின் ஊதியம்

2003-01-01 ஆம் திகதியிடப்பட்டதும் PED 04 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பகிரங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தலைவரினதும் சபை உறுப்பினர்களினதும் ஊதியங்கள் வழங்கப்படுகின்றன.

## முகாமைத்துவ குழு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்துக்கு அமைவாக மருத்துவமனை பணிப்பாளரின் தலைமைத்துவத்தின் கீழ் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதோடு, இதன் ஊடாக மருத்துவமனையின் நாளாந்த பணிகளின் நிர்வாகமும் அதேபோன்று பணிப்பாளர் சபைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும் பணிகளும் நிறைவேற்றப்படுகின்றது.

## கணக்காய்வுக் குழு

பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள திறைசேரியின் பிரதிநிதியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த சபையின் நிறைவேற்று தரமல்லாத வேறு உறுப்பினர்கள் இருவரைக் கொண்டு கணக்காய்வு குழு செயற்படுகின்றது. குழு செயலாளராக மருத்துவமனையின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் செயலாற்றுவார். கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகரின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராக கலந்து கொள்வார்.

மருத்துவமனையின் நிதிப் பணிகளின் தொழிற்பாடு மற்றும் செயலாற்றுகை போன்ற விடயங்கள் சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உரிய ஊக்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த கணக்காய்வு குழுவுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

# 1.3 தொலைநோக்கு, செயற்பணி

## தொலைநோக்கு

2030 ஆம் ஆண்டளவில் தென் ஆசியாவின் சிறந்த முன்னுரிமை மூன்றாம் நிலை சுகாதார பாதுகாப்பு வழங்குனராக மாறுதல்

## செயற்பணி

"நவீன தொழில்நுட்பத்துடன்
உற்பத்தித்திறன் மிக்க செலவில் சுகாதார சிசிக்சைகளுக்குத் தீர்வுகளை வழங்க
அர்ப்பணிப்பானபன,
விசேடமான, பாதுகாப்பான, நெறிமுறை மற்றும் தரமான தர நிலைகளைப் பேணி
சுகாதாரம் மற்றும் சங்கங்கள் பற்றி
பட்ட மற்றும் பட்டப்பின் படிப்புக் கல்வி வழங்குதல் "

# 1.4 எமது பலம்

- சிறந்த தகைமைகளைக் கொண்ட அனுபவம் மிக்க, செயலாற்றல் கொண்ட அர்ப்பணிப்புடனான மருத்துவ, தாதி மற்றும் தொழினுட்ப பதவியினர்களைக் கொண்ட எமக்கு சுகாதார துறையில் நீண்டகால நற்பெயர் உள்ளமை.

- பாராளுமன்ற சட்டமொன்றினால் எமக்கு அதிகாரமும் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளமை (1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டம்)

- சகல வசதிகளுடனும் சிறந்த வடிவமைப்புடனும் கூடிய மருத்துவமனைக் கட்டடத்தொகுதி.

- நவீன மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள், உயர் இரசாயனகூட வசதிகளினால் நோயாளிகளுக்கான சிகிச்சை, பதவியினர் பயிற்சி, மருத்துவ கல்வி, ஆராய்ச்சி போன்றவற்றுக்கு கிடைக்கும் அளப்பரிய வசதி.

- சுகாதார அமைச்சின் ஊடாக பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதிப்பலமும் சுயாதீனமாக நிதிசார் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமும்.

- விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ மாற்று அறுவைச் சிகிச்சை கவனிப்பு சேவை, தனியார் மருத்துவசாலைகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கும் ஆற்றல்.



# 1.5 எமது எதிர்பார்ப்புகள்



- கூட்டிணைந்த திட்டத்துக்கு அமைவாக உலகளாவிய தரங்களை நோக்கி விருத்தியாதல்.
- நவீன மருத்துவ விஞ்ஞான உபகரணங்களை கொண்டிருத்தல்.
- மருத்துவமனை கட்டணங்கள் மக்களுக்கு ஏற்ககூடிய விதத்தில் இருத்தல்.
- சர்வதேச தரம் வாய்ந்த நோயாளர் கவனிப்பு சேவைகளை வழங்குதல்.
- மருத்துவ பட்டம் மற்றும் மருத்துவ பட்டப்பின் படிப்பு, பயிற்சி நிலையமொன்றாக செயலாற்றுதல்.
- சகல தரங்களுக்கும் போதுமான வினைத்திறனுடைய பதவியணியை கொண்டிருத்தல்.
- மக்களுக்கு ஏற்கக்கூடிய தொகையை அறவிட்டு வருமானம் ஈட்டுதல்.
- சுகாதார அமைச்சின் கீழ் சேவையாற்றிய பதவியினர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு மதிப்பளித்தல்.

# 1.6 மருத்துவமனைப் பணிக்குழு

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையின் அனைத்து பணிக்குழு உறுப்பினர்களும் 2021 ஆகும். அதிக எண்ணிக்கையான தரங்களைச் சேர்ந்த மருத்துவமனைப் பணிக்குழு பற்றிய சாராம்சம் கீழே காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1)பதவி நிலைப் பணிக்குழு | | **19** |
| 2)மருத்துவப் பணிக்குழு | | **353** |
| நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள் | 43 | |
| இல்ல நிபுணத்துவ வைத்தியர்கள் | 1 | |
| மருத்துவ உத்தியோகத்தர்கள் | 191 | |
| எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 64 | |
| பட்டப்பின் எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 25 | |
| பட்டப்பின் படிப்புப் பயிற்சி மருத்துவ உத்தியோகத்தர்கள் | 29 | |
| 3)தாதிப் பணிக்குழு | | **778** |
| தாதி சகோதரிகள் | 21 | |
| தாதி உத்தியோகத்தர்கள் | 577 | |
| மாணவத் தாதிகள் | 180 | |
| 4)மருத்துவ உதவியாளர்கள் | | **71** |
| மருத்துவ இரசாயணவியலாளர்கள் | 35 | |
| கதிர்ப் படம் பிடிப்பாளர் | 09 | |
| உடற்பயிற்சி சிகிச்சையாளர்கள் | 08 | |
| மருந்தாளர்கள் | 19 | |
| 5)இடைக்கால மருத்துவப் பணியாளர்கள் | | **27** |
| மக்கள் சுகாதார பரிசோதகர்கள் | 02 | |
| ஈஜசி எடுப்பவர்கள் | 09 | |
| கேட்டல் பரிசோதனையாளர்கள் | 01 | |
| கண்தொழிநுட்ப வல்லுனர்கள் | 02 | |
| பேச்சுப் பயிற்சியாளர்கள் | 01 | |
| E.M.T | 09 | |
| பேரஃஸ்சினிஸ்ட் | 03 | |
| 6)பிற பணிக்குழுவினர் | | **269** |
| முகாமைத்துவ உதவியாளர்கள் (MN1,MN2) | 132 | |
| பயிற்சி பெறுபவர்கள் | 15 | |
| பிற | 122 | |
| 7)கனிஷ்ட பணிக்குழு | | **292** |
| ஓடலி மேற்பார்வை | 06 | |
| ஓடலி, | 286 | |
| தொழிலாளர்கள் | | **212** |
| நிரந்தரம் | 96 | |
| தற்காலிகம் | 83 | |
| பராமரிப்பு வழங்குபவர்கள் | 33 | |
| மொத்த சேவகர்களின் எண்ணிக்கை | | **2021** |

# 1.7 நிபுணத்துவ மருத்துவர் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினூடாக பரந்தளவில் நிபுணத்துவ வைத்திய சேவைகள் வழங்கப்படுகின்று.சகல நிபுணத்துவ பிரிவுக்கும் இலங்கையின் கீர்த்திமிகு மிகத் திறமைமிக்க நிபுணத்துவ மருத்துவர்களின் சேவை இங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினால் சேவைகள் வழங்குகின்ற விஷேட மருத்துவப் பிரிவுகள் கீழ் காட்டப்படுகின்றன

1.உடற் கூறு நோய்

2.சத்திர சிகிச்சை

3.பிரசவ மற்றும் நரம்பியல்

4.சிறுவர் நோய்

5.உணர்விழப்பு

6.மரபாய்வு நிபுணத்துவம்

7.கண் நோய்

8.தொண்டை, காது மற்றும் மூக்கு சம்பந்தமான

9.. நரம்பியல் நிபுணத்துவம்

10.தோல் நோய்ப் பிரிவு

11.கார்டியோ உடலியல்

12.நரம்பு சத்திர சிகிச்சை

13.இருதய நோய்

14.இருதய சத்திர சிகிச்சை

15.எலும்பு முறிவு

16.சிறுநீரக நோய்

17.பாலியல் நோய்கள் மற்றும் சிறுநீரகப்

18.மூட்டுவாத நோய் நிபுணத்துவம் பொருத்துகை

19.எண்டோகிறனோலஜி

20.நோயியல் நிபுணத்துவம்

21.நுண் உயிரின நிபுணத்துவ வைத்தியப் பிரிவு

22.இரத்தோட்ட நிபுணத்துவம்

23.இரசாயண வல்லுனர்கள்

24.இரத்த வங்கி இரத்தம் மாற்றும் மருத்துவம்

25.கதிர் இயக்க நிபுணத்துவம்

# 1.8 எமது சேவைகள்

பரந்தளவிலான சேவைகள் ஒரே கூரையின் கீழ் சிறந்த தரத்தில் மிகவும் சகாய விலையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களுக்கு வழங்குவதே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் முக்கிய குறிக்கோள் ஆகும். இதில் வழங்கப்படும் பிரதான சேவைகள் கீழே காட்டப்படுகின்றன.

## நோயாளர் கவனிப்புச்

1.பொது மருத்துவப் பிரிவு

2.சத்திர சிகிச்சை மருத்துவப்

3. வெளி நோயாளர் சிகிச்சை (8.00 மு.ப. –4.00 பி.ப.)

4. . எல்லா விசேட துறைகளுக்குமாக நிபுணத்துவச் சிகிச்சை

5. அவசர சிகிச்சைப் பிரிவு
- பிரதான அவசர சிகிச்சைப் பிரிவு
- நரம்பு சத்திர சிகிச்சை
- இருதய நோய்
- இருதய மார்பு சிகிச்சை

6. உயர் சார்பு அலகு
- சிறுவர் நோய்கள்
- நரம்பு நோய்கள்
- மார்பு நோய்கள்
- இருதய நோய்கள்
- பொது நோய்கள்
- பெண் நோய்கள்

7. மருத்துவ பரிசோதனைப் பிரிவு
எல்லா நோய்களுக்குமுரிய வைத்தியப் பரிசோதனை

8. . ஆய்வு கூடச்சேவைகள்
குருதியியல்
உயிர்வேதியல்
நுண்ணுயிரியல்
திசுத் துயிரியல்

9. கதிர் படம் பிடிக்கும் சேவை
- மெமோகிரபி
- எக்ஸ்றே சேவை
- அல்ட்ராசவுண்ட சேவை
- CT சேவை
- DSA Angiograms
- IVP
- Barium Studies.
- CT Guided Biopsy
- CT Angiograms.
- Doppler Scans.
- HSG.
- Special Examinations
- FNACUS Biopsy

10.மார்பு நோய் பரிசோதனை
- ECG சேவை
- உடற்பயிற்சி சேவை (ECG)
- ஹோல்டர் பரிசோதனை
- என்ஜியோகிரபி மற்றும் கார்டியாக் வடிக் குழாய்
- 2 D Echo

11.நரம்பியல் பரிசோதனைகள்
- EMG பரிசோதனை
- EEG பரிசோதனை

12. என்டோஸ் கொப்பிச் சேவை (UGIE,LGIE)

13. சிறுநீருடன் தொடர்புடைய சிகிச்சைச் சேவைகள்

14. மூக்கு வாய்,தொண்டையுடன் தொடர்புடைய பரிசோதனை

15. கண்ணுடன் தொடர்புடைய பரிசோதனை

16. போசாக்கு ஆலோசனைச் சேவை மற்றும் தகவல்கள்

17 பிசியோதெரபி சேவைகள்

18. உள ஆலோசனைச் சேவைகள்

19. பேச்சுப் பயிற்சிச் சேவைகள்

20. உதவிச் சேவைகள்
- இரத்த மாற்றுதல் சேவை
- நிபுணத்துவ மருத்துவ சேவை (செனல் சேவை)
- சுகாதாரக் கல்விச் சேவை
- ஏற்பு மருந்து வழங்கும் சேவை
- தொற்று நோய் கட்டுப்பாட்டுச் சேவை
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சேவை

## ஏனைய சேவைகள்
- **வங்கி** (BOC,HNB)
- தன்னியக்க ரெலர் இயந்திர சேவை ( BOC, HNB, Peoples ,Commercial )
- சிற்றுண்டிச்சாலை வசதிகள்
- தபாலக வசதிகள்
- வாகனத் தரிப்பிட வசதிகள்
- **வாணிபக் கூடம்**
- Paying Machines

# 1.9 எமது இணையத்தளம்

www.sjghsrilanka.org




"ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் உத்தியோகபூர்வ இணையத்தளம். "

# 2. முகாமைத்துவ கட்டுப்பாடு



# 2.1 தலைவரின் செய்தி



இன்னும் ஒரு சிறப்பான வருடம் ஒன்றின் முடிவில் ஸ்ரீ ஜயவர்தன புர பொது வைத்தியசாலையின் 2016 ஆம் ஆண்டிற்கான இந்த செய்தியை வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் , தற்போதைய பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் தரத்திலும் சேவை விஸ்தீரத்திலும் பாரிய முன்னேற்றம் ஒன்றினைக் காட்ட அந்த உத்தியோக பூர்வ காலத்தில் நிர்வாகத்திற்கு இயலுமாக இருந்தது.

பணிப்பாளரின் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் எதிர்காலத்தில் வைத்தியசாலையின் நிர்வாகத்திற்கு முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த பல பிரச்சினைகளைத் தீர்க்க சிரேஷ்ட நிர்வாகத்திற்கு இயலுமாக இருந்தது.

நோயாளிகளுக்குக் காட்டும் கவனிப்பு தொடர்பாக தொடர்ச்சியாக முன்னேற்றத்தினைக் காட்டுவதாக கடந்த வருடத்தில் சேவைகள் தொடர்பாக மேற்கொண்ட கணிப்புக்களின் போது வெளியாகி உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன அவர்கள் வழங்கும் தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பின் கீழ் வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகளை விஸ்தரிப்புடன் மக்களின் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எங்களுக்கு இயலுமாக இருந்தது.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அமைச்சருக்கு வழங்க முடியுமாக இருந்த மேலதிக ஏற்பாட்டின் மூலம் வைத்தியசாலையின உயர்ந்த மட்டத்தில் உயர்த்துவதற்காக அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் உபகரணங்கள் மற்றும் புதிய தொழிநுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கும் அதற்கு இயலுமாக இருந்தது ,. புதிய பிரிவு ஒன்றினை ஏற்படுத்தி சேவைகளின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைக்கு அதன் சேவகர்களின் எண்ணங்களை மாற்றுவதற்கும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் நோய் நிவாரணச் சேவைகள் யாவற்றினதும் தரத்தினை அதிகரிக்க இயலுமாக இருந்தது இந்த எல்லா மாற்றங்களும் தனியார் வைத்தியசாலைகளுக்கிடையே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை மிளிரும் நிலைக்கு மாறியுள்ளது.

இந் நிலைமையினை அண்மிப்பதற்காக வைத்திய நிபுணர்கள் மற்றும் பணிக்குழுவினர் நிர்வாகத்திற்கு வழங்கிய உதவி மற்றும் ஒத்துழைப்பு அளப்பெரியதாகும்.

வைத்தியசாலையினை மேம்படுத்துவதற்காக பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டல் வழங்கிய மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும் சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சருக்கும் செயலாளருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

வைத்தியசாலையின் சிறப்பான பரியாலனத்திற்காக வைத்திய சாலையின் நிர்வாகத்திற்கும் எனக்கும் தமது பலம் மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கினறேன்

வைத்தியசாலையின் மேம்பாட்டிற்காக எதிர்காலத்தில் நிர்வாகத்தினால் எடுக்கப்படும் எல்லா முயற்சிகளும் சிறப்பாக அமைய வேண்டும் என பிரார்த்தனை செய்கின்றேன

மருத்துவர் எச்.ஏ.பீ கஹந்தலியனகே
MBB; MSc( com.Med), MMHI(Boston) MCMA:FCMA
தலைவர்
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# 2.2 பணிப்பாளரின் செய்தி



இந்த புகழ் பெற்ற தாபனத்தின் பணிப்பாளராக 2016ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்கு இச் செய்தியை வழங்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை நான் மிகவும் கௌரவமாகவும், சிறப்புரிமையாகவும் கருதுகின்றேன். கட்டணம் அறவிடும் பொது வைத்தியசாலை, மற்றும் மருத்துவ பட்டப் பின்படிப்பு பயிற்சி நிலையம் ஒன்றாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பல சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த இணையற்ற தாபனத்தின் எதிர்காலப் பயணத்திற்கு இடையூறு விளைவிக்கும், மற்றும் அதற்குத் தடையினை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பாக தெளிவான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு இவ் வருடத்தினுள் எங்களுக்கு இயலுமாக இருந்தது. நவீன தொழனுட்பத்துடன், நாட்டின் மிகவும் உபசரணையுள்ள, மற்றும் முன்னோடி மூன்றாம் நிலை நோய்களின் சிகிச்சை நிலையமாக இந்த வைத்தியசாலையினை மாற்றும் எங்களது முயற்சிக்கு மேற்கொள்ள வேண்டியுள்ள விடயங்களை இனங்காணுவதற்கு எங்களுக்கு இடம் கிடைத்தது.

அந்த முயற்சியின் முக்கியமான மற்றும் அத்தியாவசியமான பகுதியாக 32 வருட பழைமையான இந்த வைத்தியசாலையினை, நாளாந்த நோய் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாரிய தடைகள் ஏற்படாத படியும், படிப்படியாக புனர்நிர்மாணம் செய்யும் திட்டமும் எங்களினால் ஆரம்பிக்கப்பட்டது . அத்துடன் பிற முக்கியமானவைகள் என இனங்காணப்பட்ட செயற்பாடுகளுக்காகவும், ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முயற்சியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நோய் நிவாரண சேவைகளின் தற்போதைய கொள்கைகள் மற்றும் வளர்ச்சி தொடர்பாகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சேவகர்களின் பங்களிப்பில் உள்ள முக்கியத்துவம், மற்றும் பங்குபற்றல் தொடர்பாகவும், அவர்களின் அறிவினை மேம்படுத்தும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை 1984 ஆம் ஆண்டில் அதன் சேவையினை மக்களுக்கு வழங்கியது, தொடக்கம் பல தசாப்தங்கள் பேணப்பட்டு வந்த கௌரவமான நிலைமையினை மறந்து விடாது அதனைப் பாதுகாத்து, தெளிவான நோக்குடன் , பாதுகாப்பான மற்றும் தரமான வைத்திய சிகிச்சைக் சேவையினை பெற்றுக் கொடுக்கும் முன்னோடியாக மாறும் எதிர்கால பயணத்தில் ஈடுபட்டுள்ளது.

கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன அவர்களுக்கும், கௌரவ பிரதி அமைச்சர் பைசால் காசிம் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் வைத்தியர் டி.எம். ஆர் .பி திசாநாயக்க அவர்களுக்கும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்திய பாலித்த மஹிபால அவர்களுக்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தவிசாளரான வைத்தியர் அதுல கஹந்தலியனகே அவர்களுக்கும், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும், முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுக்கும், பிரதிப் பணிபாளர் வைத்தியர் சந்துஷியா பெர்ணாந்து அவர்களுக்கும் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் எல்லாப் பணிக்குழுவினருக்கும் ,ஒவ்வொரு வேளையிலும் காட்டிய உற்சாகம், ,தொழிற் திறமை, மற்றும் அர்ப்பணிப்பிற்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைத்தியர் சுசித சேனாரத்ன
பணிப்பாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை

# 2.3 பணிப்பாளர் சபை

மருத்துவர் எச் .ஏ..பீ. கஹந்தலியனகே - தலைவர் , ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை.

மருத்துவர் என். எஸ்.ஏ.சேனாரத்ன - முகாமைத்தவப் பணிப்பாளர் , ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை

மருத்துவர் (திரு) பீ..ஜீ மஹீபால - சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்

அனுலா ஹரஸ்கம - திறைசேரியின் பிரதிநிதி

பேராசிரியர் ஜனக்க த சில்வா - பணிப்பாளர் –PGIM

எஸ். எம். நந்த லலித் சேனானாயக்க - சுகாதார அமைச்சர் நியமித்தவர்

சமத் த சில்வா – சுகாதார அமைச்சர் நியமித்தவர்

மருத்துவர் ஹர்ஷ சமரவீர - அமைச்சின் பிரதிநிதி

மருத்துவர் கே.பீ. இந்திரரத்ன - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி

மருத்துவர் மாதவ கருணாரத்ன - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி

மருத்துவர் பீ.ஜே.அம்பவத்த - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி

# 2.4 முகாமைத்துவக் குழு

மருத்துவர் என். எஸ்.ஏ.சேனாரத்ன - பணிப்பாளர்–குழு அங்கத்தவர்

மருத்துவர் எஸ்.பெர்ணாந்து - பதில் பிரதிப் பணிப்பாளர் ( பதில்) உறுப்பினர்

மருத்துவர் ரொஹான் அலோசியஷ் - சிறுவர் நோய் நிபுணத்துவ -உறுப்பினர்

மருத்துவர் ஹர்ஷ குணசேகர – நரம்பியல் நோய் நிபுணத்துவ மருத்துவர் - உறுப்பினர்

மருத்துவர் எஸ்.கே.ஜயதிலக்க - நுண்ணுயிர் நிபுணத்துவ மருத்துவர் உறுப்பினர்

டி.ஏ.பெரேரா—கணக்காளர் ( பதில்) - உறுப்பினர்

திலானி ராஜபக்ஷ– மருத்துவமனைச் செயலாளர்உறுப்பினர்

ஏ.என்.சப்புதன்திரி –தலைமைத் தாதி உத்தியோகத்தர் உறுப்பினர்

# 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள்

| | நிபுணத்துவ மருத்துவர்களின் பெயர் | விடயம் | பிரிவு |
|---|---|---|---|
| 1 | மருத்துவர் வீ.கே.பி.இந்திரரத்ன<br>*MBBS, MD, FFARCSI, FRCA* | உணர்விழப்பு | சத்திர சிகிச்சைக்கூடம், அதி தீவிர சத்திர சிசிக்சை கூடம் |
| 2 | மருத்துவர் ஜே.பி.ஹேரத்<br>*MBBS, MD,FRCP* | இருதய நோய் | வாட்டு இல 21 |
| 3 | மருத்துவர் ஏ.பீ.எஸ்.ஆனந்த பெரேரா<br>*MBBS, MS, FRCS,FCSLL* | எலும்பு முறிவு அறுவை | வாட்டு இல 10 |
| 4 | மருத்துவர் டீ.எச்.வாரியபொல<br>*MBBS,MSOPH, DO(COL), FRCS ,* | கண் | வாட்டு இல 16 |
| 5 | மருத்துவர் என்.எல். அமரசேன<br>*MBBS, MD (Colombo), FRCP (London),FCCP,FRACP (HON)* | இருதய நோய் | வாட்டு இல 19 |
| 6 | மருத்துவர் எச்.சீ.எச் ஹேமந்த பெரேரா *MBBS, MS (O&G)COL,FRCOG (UK),FSLCOG* | பெண் நோய் மற்றும் மகப்பேறு | வாட்டு இல 09 |
| 7 | மருத்துவர் மேதா வீரசேகர<br>*MBBS, DCH, MD (Pead.), MRCP (UK)* | மரபாய்வு நிபுணத்துவம் | குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரவு |
| 8 | மருத்துவர் சீ. ஈ.த சில்வா<br>*MBBS, MD, MRCP (UK),FCCP* | உடற் கூற்று | வாட்டு இல 12 |
| 9 | மருத்துவர் டி.எல்.பியசிறி<br>*MBBS, MS, FRCS (Ed.)* | சத்திர சிகிச்சை | வாட்டு இல 15 |
| 10 | பேராசிரியர் ர்.எல்.சத்தரசிங்க<br>MD,FRCP(Lond),FRCP,(ED)FRCP (Glas),FCCP,FRCPI,FRCPI, FACG,MASGE,IMBSG,CCST(uk) | உடற் கூற்று | வாட்டு இல 21 |
| 11 | மருத்துவர் கப்புருகே<br>*MBBS, MS, FRCS)* | இருதய அறுவை சிகிச்சை | வாட்டு இல 20 |
| 12 | மருத்துவர். டி.ஜே.விக்ரமரத்தன<br>*MBBS(Cey), MD* | கதிரியக்கம் | கதிரியக்கப் பிரிவு |
| 13 | மருத்துவர் கலீல் காசிம்<br>*MBBS, MD* | மூட்டுவாதம் | வாட்டு இல 16A |
| 14 | மருத்துவர் எம். விஜேரத்ன<br>*MBBS (Hons), Melb, FRCS (Ed.)* | நரம்பியல் அறுவை சிகிச்சை | வாட்டு இல 18 |
| 15 | மருத்துவர் எச்.எச்.குணசேக்கர *MBBS(Col), MD (Col), MRC(UK),FRCP* | நரம்பியல் வைத்தியர் | வாட்டு இல 16A |

| | Name of Consultant | Specialty | Unit |
|---|---|---|---|
| 16 | மருத்துவர் பீ ஜே.அம்பேவத<br>*MBBS,(Col). Path.(Col), MD Pathology(Col)* | நோயியல் | நோயியல் |
| 17 | மருத்துவர் ஆர்.ஏ.ஆர்.டீ.அலோசியஸ்<br>*MBBS, DCH, MD, MRCP* | சிறுவர் நோய் | வாட்டு இல 01 |
| 18 | மருத்துவர் ஏ.எஸ்.ரொற்றிகோ<br>*MBBS, MD (HistoPathology)* | நோயியல் | நோயியல் |
| 19 | மருத்துவர் சீ.எச் சமரக்கோன்<br>MBBS,MD,FRCA,(UK) | சத்திர சிகிச்சை | - |
| 20 | மருத்துவர் ஜே.எச்.கே.ராஜசிங்க<br>*MBBS, MD ,FRCA (UK)* | உணர்விழப்பு | சத்திர சிகிச்சைக்கூடம் |
| 21 | மருத்துவர் மாதவ கருணாரத்ன<br>*MBBS, MS(SL), FSLCOG(UK) , FRCOG,* | பெண் நோய் மற்றும் மகப்பேறு | வாட்டு இல 02 |
| 22 | மருத்துவர் ஜே.பி.ஹேரத்<br>*MBBS, MD* | இருதய நோய் | வாட்டு இல 19 |
| 23 | மருத்துவர் டீ ஆரியவங்ச<br>*MBBS, MD (Dermatology)* | தோல் நோய் | வாட்டு இல 07 |
| 24 | மருத்துவர் என்.எம்.பி.கே.அரம்பேபொல<br>*MBBS, MD (Radiology)* | கதிரியக்கம் | கதிரியக்கப் பிரிவு |
| 25 | மருத்துவர் சீ சீ.காரியவசம்<br>*MBBS, Dip. Path., MD (Haematology)* | குருதி | குருதியியல் |
| 26 | மருத்துவர் எஸ்.கே.ஜயதிலக்க<br>*MBBS, Dip. Medical Micro., MD (Medical Microbiology)* | நுண்ணுயிர் | நுண்ணுயிர்பிரிவு |
| 27 | மருத்துவர் ஆர்.பி.எஸ்.பலிஹவடன<br>*MBBS, MD ,FRCA (UK)* | உணர்விழப்பு | சத்திர சிகிச்சைக்கூடம் |
| 28 | மருத்துவர் ஆர்.எம்.எஸ்.ரீ.சமரவீர<br>*MBBS, MD (Radiology)* | கதிரியக்கம் | கதிரியக்கப் பிரிவு |
| 29 | மருத்துவர் எச்.ஆர்.வை.த.சில்வா<br>*MBBS, MS, MRCS (Eng), FRCS(Cardiothorasic)* | இருதய அறுவை சிகிச்சை | வாட்டு இல 20 |
| 30 | மருத்துவர் ஏ. எம். அபேவர்தன<br>*MBBS, DTM,MD (Transfution Medicien)* | கற்பிணி மருத்துவம் | இரத்த வங்கி |
| 31 | மருத்துவர் எஸ்.ஏ குணவர்தன<br>*MBBS, MS, MRCS (Eng.)FRCS(Glasy)* | சத்திர சிசிக்சை | வாட்டு இல 08 |
| 32 | மருத்துவர் சியாமா சூபசிங்ஹ<br>*MBBS(Col)Hons, MD (SL)* | உடற் கூற்று | வாட்டு இல 17 |
| 33 | மருத்துவர் எல். நிரோசன் செனிவிதரத்ன<br>*MBBS (Col), MS (SL), MRCS (UK)* | பாலியல் மற்றும் சிறுநீரகம் பொருத்துதல் | வாட்டு இல 14 A |

| | Name of Consultant | Specialty | Unit |
|---|---|---|---|
| 34 | மருத்துவர் சீ.ஆர். பிலிமத்தலாவ<br>*MBBS, MD (anaesthesiology)* | உணர்விழப்பு | இருதய அறுவை |
| 35 | மருத்துவர் பீ.பீ. சீ. பிரகீத்<br>*MBBS, MD (Anaesthesia), FRCA (UK* | உணர்விழப்பு | சத்திர சிகிச்சைக் கூடம் |
| 36 | மருத்துவர் கே.வீ.சீ. ஜனக<br>*MBBS, MD, MSC(Diabetis & Endocrinology)MRCP(Endo)* | உடற் கூற்று | வெளி நோயாளர் பிரிவு |
| 37 | மருத்துவர் கே.பீ.கருணாரத்தன<br>*MBBS.MD,MRCS(Engd)* | எலும்பு முறிவு நிபுணத்துவம் | வாட்டு இல 11 A |
| 38 | மருத்துவர் எப்.எஸ் மாலீன்<br>*MBBS India),MD(Obs & Gyn),* | மகப்பேறு | வாட்டு இல 07 A |
| 39 | மருத்துவர் என் விதானகே<br>*MBBS, Diploma in Pathology, MD (Chemical Pathology)* | நோயியல் நிபுணர் | நோயியல் |
| 30 | மருத்துவர் ஆர்.ஏ.எஸ்.ரீ. ரூபசிங்க<br>*MBBS(Col), MD ,ORL(Col), DOHNS(Edin)),MRCF( UK)* | தொண்டை மூக்கு காது தொடர்பானது. | வாட்டு இல 11 |
| 41 | மருத்துவர் எம்.சீ.வீ. கலஹிடியாவ<br>*MBBS, MD (Col), MRCP (UK)* | மூட்டு வாதம் | வாட்டு இல 21 |
| 42 | மருத்துவர் எஸ். ஆர்.பீ.கோட்டேகொட<br>*MBBS, MD* | கார்டியக் உடலியல் | வாட்டு இல 19 |

# 3. தொழிற்பாட்டுத் தகவல்கள்



# 3.1 செயலாற்றுகைப் பொழிப்பு



1983 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை 1984 செப்டெம்பர் மாதம் 17 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. கௌரவ சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிர்வாகம் செய்யும் பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை மருத்துவ நோயாளர் சிகிச்சைச் சேவைகள் வழங்குவதை விட, மேலதிகமாக பட்டதாரி எதிர்பார்ப்பாளர்களுக்கும் பட்டப்பின் படிப்பு பட்டதாரி எதிர்பார்ப்பாளர்களுக்கும் பயிற்சி வழங்கும் நிலையமுமாக விளங்குகிறது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2016 டிசம்பர் 31 ஆந் திகதியில் ( தற்போது உள்ள) |
|---|---|---|
| நிறைவேற்று பதவியினர்கள் | 22 | 19 |
| மருத்துவர்கள் தாதிப் பணிக்குழு | 240 | 353 |
| தாதிப் பணிக்குழு | 880 | 778 |
| எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 95 | 71 |
| இடைப்பட்ட மருத்துவர் பணிககுழு | 35 | 27 |
| ஏனையப் பணிக்குழுவினர் | 276 | 269 |
| ஏனைய கனிஷ்ட பணிக்குழுவினர் | 499 | 504 |
| மொத்தப் பணிக்குழுவினர் | 2047 | 2021 |

வைத்தியசாலை மூலம் வழங்கப்படும் உள்ளக மற்றும் வெளியக நோயாளர் சிகிச்சைச் சேவைகள் சம்பந்தமான சுட்டிகளின் ஒப்பு நோக்கும் சாராம்சம் கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

| சுட்டிகள் | 2016 | 2015 | அதிகரிப்பு/ இறக்கம் (%) |
|---|---|---|---|
| 1. நோயாளர் கட்டில்களின் எண்ணிக்கை | 1086 | 1076 | 0.93 |
| 2. சேர்க்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை | 59257 | 55143 | 7.46 |
| 3.நோயாளர் பொதுவாகத் தங்குதல் (நாட்கள்) | 4.5 | 4.5 | 0.00 |
| 4. மருத்துவமனைக் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் (%) | 68.80 | 63.04 | 9.14 |
| அ சாதாரண வாட்டுக்களில் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் (%) | 70.11 | 63.52 | 10.37 |
| ஆ. கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் (%) | 70.94 | 62.38 | 13.72 |
| 6. வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் எண்ணிக்கை | 21847 | 21377 | 2.20 |
| 4. தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 40792 | 36752 | 10.99 |
| 7. கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கை, | 165158 | 158453 | 4.23 |
| 8. . செய்யப்பட்ட முழு அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 15007 | 13915 | 7.85 |
| 9. செய்யப்பட்ட இருதய அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 558 | 407 | 37.10 |
| 10. செய்யப்பட்ட சிறுநீரகப் பொருத்துகைகளின் எண்ணிக்கை | 24 | 23 | 4.35 |
| 11. செய்யப்பட்ட இரத்தக் கசிவுகளின் எண்ணிக்கை | 6296 | 6171 | 2.03 |
| 12. செய்யப்பட்ட எக்கோ பரிசோதனைகளின் எண் | 14660 | 14303 | 2.50 |
| 13. செய்யப்பட் என்ஜியோகிறம்களின் எண்ணிக்கை | 966 | 688 | 40.41 |
| 14. மன அளுத்தம் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1740 | 1723 | 0.99 |
| 15. குழந்தை பிரசவங்களின் எண்ணிக்கை | 3592 | 3602 | -0.28 |
| 16. செய்யப்பட்ட எக்கோ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 45501 | 38858 | 17.10 |
| 17. செய்யப்பட்ட ஈஎம்ஜீ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1184 | 1363 | -13.13 |
| 18. செய்யப்பட்ட எக்ஸ் கதிர் பரிசோதனைகளின் எண்ணிக்கை. | 85027 | 65946 | 28.93 |
| 19. சீரீ கற்கைகளின் எண்ணிக்கை | 12278 | 6116 | 100.75 |
| 20.செய்யப்பட்ட மமோகிராம்களின் எண்ணிக்கை | 511 | 383 | 33.42 |
| 21. செய்யப்பட்ட பிசியோதெபிகளின் எண்ணிக்கை | 18591 | 7708 | 141.19 |
| 22. சனல் நோயாளிகளின் எண்ணிக்கை | 9902 | 9363 | 5.76 |
| 23. செய்யப்பட்ட கண் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 3944 | 4157 | -5.12 |
| 24. செய்யப்பட்ட போசணை ஆலோசனைகளின் எண்ணிக்கை | 2987 | 1098 | 172.04 |
| 25. . செய்யப்பட்ட பேச்சுப் பயிற்சிகளின் எண்ணிக்கை | 762 | 886 | -14.00 |
| 26. செய்யப்பட்ட வைத்திய பரிசோதகளின் எண்ணிக்கை | 3598 | 1250 | 187.84 |
| 27.செய்யப்பட்ட உள ஆலோசனைகளின் எண்ணிக்கை | 1899 | 1664 | 14.12 |
| 28.செய்யப்பட்டநோயியல் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1099002 | 922177 | 19.17 |
| 29.செய்யப்பட்ட மொத்த எண்டஸ்கொபிகளின் எண்ணிக்கை | 5147 | 4632 | 11.12 |
| 30. இரத்த சேகரிப்புக்களின் எண்ணிக்கை | 3778 | 4877 | -22.53 |
| 31. மொத்த இறப்புக்களின் எண்ணிக்கை | 805 | 740 | 8.78 |

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை மூலம் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வதிவிட நோய் சிகிச்சைச் சேவைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய சாராம்சம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் | | அதிகரிப்பு/ குறைவு (%) | படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | | அதிகரிப்பு/ குறைவு (%) |
|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2015 | | 2016 | 2015 | |
| உடற்கூறு மருத்துவப் பிரிவு | 17440 | 16557 | 5.33 | 107.75 | 103.6 | 4.15 |
| அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 7886 | 7712 | 2.26 | 63.1 | 56.78 | 6.32 |
| பெண்நோய், மகப்பேறு பிரிவு | 7729 | 7769 | -0.51 | 76.13 | 79.44 | -3.31 |
| சிறுவர் நோய் சிகிச்சைப் பிரிவு | 2984 | 2823 | 5.70 | 53.91 | 53.66 | 0.25 |
| தொண்டை, காது, மூக்கு சிகிச்சை (ENT) பிரிவு | 1150 | 1316 | -12.61 | 37.79 | 30.98 | 6.81 |
| எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு | 2526 | 2040 | 23.82 | 36.86 | 48.93 | -12.07 |
| கண் நோய் பிரிவு | 1640 | 1445 | 13.49 | 43.64 | 38.55 | 5.09 |
| இருதய நோய் பிரிவு | 2664 | 2234 | 19.25 | 76.79 | 63.5 | 13.29 |
| இருதய அறுவைச் சிகிச்சை பிரிவு | 881 | 823 | 7.05 | 77.8 | 64.54 | 13.26 |
| பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு | 1038 | 886 | 17.16 | 75.26 | 61.96 | 13.3 |
| நரம்பியல் நோய்ப் பிரிவு | 435 | 412 | 5.58 | 35.58 | 34.86 | 0.72 |
| நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 998 | 904 | 10.40 | 48.52 | 44.97 | 3.55 |
| சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு | 6584 | 6410 | 2.71 | 79.37 | 74.81 | 4.56 |
| பொது தீவிர சிகிச்சைப் பிரிவு | 744 | 695 | 7.05 | 108.48 | 92.3 | 12.03 |
| இருதய தீவிர அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 611 | 521 | 17.27 | 96.45 | 80.29 | 16.16 |
| கொடுப்பனவு வாட்டு தரம் - I | 1956 | 1805 | 8.37 | 110.69 | 101.81 | 8.88 |
| கொடுப்பனவு வாட்டு தரம் - II | 5754 | 5287 | 8.83 | 63.9 | 55.34 | 8.56 |

2016 ஆம் ஆண்டிற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையின் சுருக்கமான நிதிச் செயலாற்றுகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | நிதி (ரூபா. '000) | | அதிகரிப்பு / குறைவு | |
|---|---|---|---|---|
| | 2015 | 2016 | பெறுமதி (ரூபா. '000) | விகிதம் (%) |
| நடவடிக்கைகளுக்காகக் கிடைத்த வருமானம் | 1493892 | 1856261 | 362369 | 24.25 |
| அரச ஒதுக்கீடு - மீண்டெழும் செலவு | 920086 | 1300000 | 397914 | 43.24 |
| வேறு வருமானம் | 40089 | 47157 | 7068 | 17.63 |
| வேறு நடவடிக்கை வருமானம் (வட்டி) | 7163 | 7353 | 190 | 2.65 |
| மூலதன மானிய கிரமமாகக் குறைப்பு | 174691 | 243786 | 69095 | 39.55 |
| முழு வருமானம் | 2461230 | 3454557 | 993327 | 40.35 |
| | | | | |
| வழங்கல் பொருட்களுக்கான செலவு | 867508 | 1040740 | 173232 | 19.96 |
| சம்பளம் மற்றும் வேதனச் செலவு | 1572238 | 1904879 | 332641 | 21.15 |
| பெறுமானத் தேய்வுகளும் பதிலீடுகளும் | 174691 | 243786 | 69095 | 39.55 |
| வேறு நடைமுறைச் செலவு | 361807 | 423159 | 61352 | 16.95 |
| முழுச் செலவு | 2976244 | 3612564 | 636320 | 21.37 |
| | | | | |
| நடவடிக்கைகளினால் கிடைத்த இலாபம் / நட்டம் | (340000) | (158007) | -498007 | -146.47 |
| நிதிச் செலவு | 6462 | 8585 | 2123 | 32.85 |
| வேறு செலவு | 2330 | 4874 | 2544 | 109.18 |
| வரி செலுத்த முன் இலாபம் / நட்டம் | (349115) | (171466) | -520581 | -149.11 |
| வருமான வரி | 3503 | 4353 | 850 | 24.26 |
| வரி செலுத்தியதன் பின் இலாபம் / நட்டம் | (352618) | ( 175819) | -528437 | -149.86 |

# 3.2 முழுச் செயற்றிறன்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மருத்துவமனைப் படுக்கைகளின் | 1088 | 1078 | 1079 | 1076 | 1086 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் | 57119 | 54283 | 53424 | 55143 | 59257 |
| வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை | 16533 | 18843 | 18733 | 21377 | 21847 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட | 147757 | 151156 | 158174 | 158451 | 165158 |
| நடாத்தப்பட்ட அறுவைச் | 13613 | 13630 | 13683 | 14049 | 15007 |
| படுக்கைகள் உபயோகப்படுத்தும் | 70.47 | 64.07 | 64.1 | 63.04 | 68.80 |
| மருத்துவமனை வருமானம் (ரூபா. | 27 | 21 | 14 | 11 | 9 |
| சிசு மரண எண்ணிக்கை | 748 | 714 | 689 | 740 | 805 |
| மொத்த மரண எண்ணிக்கை | 1857 | 2157 | 3056 | 2461 | 3203 |

ஐந்து வருடப் பொழிப்பு












# 3.3 துறைசார் மீள்நோக்கு

## I. பொது மருத்துவப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகள் | 395 | 291 | 293 | 292 | 296 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 39638 | 38508 | 35965 | 34076 | 34139 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 19714 | 16496 | 16187 | 16557 | 17440 |
| படுக்கைகள் உபயோகப்படுத்திய விகிதாசாரம் (%) | 126.13 | 105.81 | 105.59 | 103.6 | 107.75 |

ஐந்து வருடப் பொழிப்பு












# II. சத்திர சிகிச்சை மருத்துவப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 450 | 381 | 391 | 392 | 393 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 13164 | 11716 | 11640 | 13263 | 15863 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7115 | 6927 | 7651 | 7712 | 7886 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை | 3923 | 3495 | 3174 | 3327 | 3659 |
| படுக்கைகளின் பயன்படுத்துகை விகிதாசாரம் (%) | 54.84 | 47.88 | 51.9 | 56.77 | 63.10 |

ஐந்து வருடப் பொழிப்பு












# III. பெண் நோய்,மகப் பேறு பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 335 | 327 | 296 | 338 | 342 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 23901 | 26464 | 28007 | 25314 | 24477 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 8706 | 8659 | 8214 | 7769 | 7729 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 93.42 | 88.48 | 83.75 | 79.44 | 76.13 |
| பிறப்புக்களின் எண்ணிக்கை | 4156 | 4016 | 3937 | 3602 | 3592 |
| Gyn சத்திர சிகிச்சை | 1444 | 1416 | 1256 | 1291 | 1331 |
| Obs சத்திர சிகிச்சை | 2276 | 2198 | 2118 | 1767 | 1900 |
| சிசேரியன் அறுவைச்சிகிச்சை | 2285 | 2180 | 2070 | 1863 | 1914 |

ஐந்து வருடப் பொழிப்பு












# IV. சிறுவர் நோய் சிகிச்சை பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 346 | 332 | 341 | 345 | 337 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6249 | 6594 | 7137 | 6188 | 6524 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3796 | 3091 | 2581 | 2823 | 2984 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 81.28 | 63.52 | 56.23 | 53.66 | 53.91 |

ஐந்து வருடப் பொழிப்பு







# V. தொண்டை,காது,மூக்கு சிகிச்சைப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 98 | 101 | 94 | 95 | 98 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6077 | 6504 | 6271 | 6321 | 6582 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1378 | 1331 | 1201 | 1316 | 1150 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 32.57 | 31.91 | 29.09 | 30.98 | 37.79 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 539 | 493 | 451 | 483 | 425 |

ஐந்து வருடப் பொழிப்பு






# VI. எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 102 | 96 | 95 | 99 | 137 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7639 | 7964 | 8145 | 8751 | 9226 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 2107 | 2174 | 1824 | 2040 | 2526 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 59.31 | 59.7 | 47.84 | 48.93 | 36.86 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 1624 | 1798 | 1366 | 1501 | 1630 |

ஐந்து வருடப் பொழிப்பு







# VII. கண் நோய்ப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 148 | 262 | 246 | 242 | 242 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 15356 | 15649 | 14845 | 15406 | 14725 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1690 | 1719 | 1540 | 1445 | 1640 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 56.40 | 58.51 | 41.36 | 38.55 | 43.64 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 3572 | 3560 | 3194 | 3481 | 3681 |

ஐந்து வருடப் பொழிப்பு






# VIII. இருதய நோய்ப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 100 | 95 | 95 | 99 | 96 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6123 | 5929 | 5741 | 5379 | 5063 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 2089 | 2042 | 2172 | 2234 | 2664 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 62.40 | 58.23 | 64.52 | 63.5 | 76.79 |
| என்ஜியோகிராம் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 579 | 560 | 689 | 688 | 966 |

ஐந்து வருடப் பொழிப்பு







# IX. இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 99 | 101 | 95 | 94 | 98 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3940 | 3536 | 3733 | 3709 | 4308 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 923 | 831 | 1312 | 823 | 881 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 56.40 | 47.40 | 71.03 | 64.54 | 77.8 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 216 | 199 | 385 | 442 | 594 |

ஐந்து வருடப் பொழிப்பு






# X. தோல் நோய்ப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்கு களின் எண்ணிக்கை | 207 | 217 | 207 | 193 | 193 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 4956 | 5518 | 6429 | 7450 | 8427 |

ஐந்து வருடப் பொழிப்பு




# XI. பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு(NICU)

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்கு களின் எண்ணிக்கை | 48 | 49 | 49 | 49 | 49 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1327 | 1281 | 1480 | 1678 | 2040 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 952 | 901 | 930 | 886 | 1038 |
| படுக்கைகளின் பயன்படுத் துகை விகிதாசாரம் (%) | 71.67 | 73.51 | 75.10 | 61.96 | 75.26 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XII. மூட்டுவாதம் மற்றும் புனர்வாழ்வுப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 141 | 155 | 197 | 193 | 194 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3806 | 3372 | 3871 | 3772 | 4127 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XIII. நரம்பு சார்ந்த நோய்ப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 93 | 96 | 100 | 98 | 98 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3245 | 2480 | 3950 | 4426 | 4597 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 340 | 429 | 311 | 412 | 435 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 52.05 | 67.05 | 30.52 | 34.86 | 35.58 |
| மேற்கொள்ளப்பட்ட EEG எண்ணிக்கை | 670 | 683 | 642 | 680 | 619 |
| மேற்கொள்ளப்பட்ட EMG எண்ணிக்கை | 1362 | 1235 | 1312 | 1363 | 1184 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XIV. நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 106 | 101 | 95 | 98 | 96 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 851 | 1465 | 848 | 754 | 981 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 1052 | 958 | 863 | 904 | 998 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 35.58 | 49.25 | 39.99 | 44.97 | 48.52 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 156 | 176 | 153 | 154 | 186 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XV. சிறு நீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 144 | 147 | 134 | 242 | 242 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 10351 | 11034 | 12395 | 12817 | 13414 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 4855 | 5737 | 6203 | 6410 | 6584 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 72.00 | 66.98 | 71.54 | 74.81 | 79.37 |
| மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை | 21 | 16 | 22 | 23 | 24 |
| மேற்கொள்ளப்பட்ட Dialysis எண்ணிக்கை | 4297 | 5228 | 6015 | 6171 | 6296 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XVI. உணர்விழப்புப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| உணர்விழப்பு செய்யப்பட்ட முழு அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 13795 | 13829 | 13628 | 14049 | 15631 |
| சிகிச்சை வழங்கப்பட்ட தீவிர சிகிச்சை நோயாளிகளின் எண்ணிக்கை | 992 | 1085 | 1324 | 1216 | 1355 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XVII. தீவிர சிகிச்சைப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 957 | 794 | 841 | 695 | 744 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 110.50 | 93.99 | 90.51 | 92.3 | 108.48 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XVIII. குருதி நோயியல் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 48 | 49 | 49 | 49 | 48 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 879 | 1271 | 1335 | 1487 | 1435 |
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 304421 | 272752 | 302781 | 287934 | 353377 |
| மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 57771 | 37210 | 44900 | 54487 | 31552 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XIX. நோயியல் வரலாற்றுப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை | 5345 | 5259 | 4971 | 5476 | 7242 |
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 23441 | 20118 | 20767 | 22215 | 21121 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XX. நுண் உயிரினப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட நுண்மத் தொகுதி பரிசோதனைகளின் எண்ணிக்கை | 27341 | 30507 | 20537 | 26028 | 31612 |
| மேற்கொள்ளப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி பரிசோ தனைகளின் எண்ணிக்கை | 4512 | 4016 | 4685 | 4935 | 6069 |
| மேற்கொள்ளப்பட்ட Serological பரிசோதனைகளின் எண்ணிக்கை | 37054 | 27841 | 23255 | 21659 | 40795 |
| மேற்கொள்ளப்பட்ட சயரோக பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2,358 | 1537 | 1189 | 2553 | 3312 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XXI. உயிரின இரசாயனவியல் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட சாதாரண பரிசோதனைகளின் எண்ணிக்கை | 463134 | 411595 | 401073 | 428968 | 515940 |
| மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 24015 | 25430 | 26029 | 30409 | 51909 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XXII. கதிரியல் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ஊடுகதிர் பிடிப்பு பரிசோதனைகளின் எண்ணிக்கை | 41895 | 43284 | 44607 | 47051 | 59214 |
| மேற்கொள்ளப்பட்ட Ultra Sound ஸ்கான் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 9240 | 9780 | 8871 | 9541 | 10830 |
| மேற்கொள்ளப்பட்ட CT ஸ்கான் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 6406 | 7649 | 6721 | 6116 | 12278 |
| மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2160 | 2321 | 2301 | 3238 | 2705 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XXIII. இரத்த வங்கி

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்ட குருதி மாதிரிகளின் எண்ணிக்கை | 5273 | 4504 | 4414 | 4877 | 3778 |
| வழங்கப்பட்ட செங்குருதி சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கை | 6161 | 5070 | 5274 | 4441 | 5077 |
| மேற்கொள்ளப்பட்ட ABO மற்றும் Rh grouping பரிசோதனைகளின் எண்ணிக்கை | 25754 | 30715 | 29680 | 34924 | 39115 |
| Grouping & cross matching | 14214 | 17552 | 17068 | 16025 | 20899 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XXIV. மருத்துவ பரிசோதனைப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை (FEB) | 2723 | 3733 | 2719 | 661 | 2595 |
| மருத்துவ பரிசோதனைகளின் எண்ணிக்கை (நிறைவேற்றுத் தரம்) | 716 | 637 | 372 | 589 | 1003 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XXV. கட்டணம் செலுத்தும் காவறை

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6543 | 7022 | 6769 | 7092 | 7710 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 64.64 | 67.54 | 69.69 | 70.82 | 79.5 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XXVI. எண்டொஸ் கொபி பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட Bronchoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 27 | 26 | 17 | 39 | 24 |
| Upper GI Endoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1897 | 1931 | 2191 | 1837 | 2172 |
| Colonoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 648 | 649 | 495 | 693 | 853 |
| Fibre-Optic Laryngoscopy பரிசோதனைகளின் எண்ணிக்கை | 407 | 422 | 432 | 526 | 607 |
| Oesophageal Variceal Banding சிகிச்சை | 228 | 253 | 322 | 313 | 337 |
| ERCP பரிசோதனைகளின் எண்ணிக்கை | 13 | 8 | 4 | 21 | 16 |
| மொத்தம் | 3220 | 3289 | 3461 | 3429 | 5147 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XXVII. ECG பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ECG பரிசோதனைகளின் எண்ணிக்கை | 38431 | 35300 | 34502 | 38858 | 45501 |
| மேற்கொள்ளப்பட்ட EEG உடற் பயிற்சி பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1842 | 1707 | 1538 | 1723 | 1740 |
| மேற்கொள்ளப்பட்ட EMG பரிசோதனைகளின் எண்ணிக்கை | 462 | 514 | 533 | 643 | 924 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XXVIII. வெளிநோயாளர் பிரிவும் அவசர சிகிச்சைப் பிரிவும்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 16532 | 18843 | 18733 | 21377 | 21847 |
| அவசர சிகிச்சைப் பிரிவிற்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 42883 | 38323 | 35060 | 36752 | 40792 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XXIX. சுகாதாரக் கல்வியும் தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவும்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| பணிக் குழு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 27 | 27 | 20 | 48 | 38 |
| வெளி நோயாளர் பிரிவு விரிவுரைகள் | 204 | 290 | 302 | 242 | 267 |
| வைத்தியசாலைச் சுற்றாடலில் தொற்றுநோய் பரவும் சதவிதம் | 0.31 | 0.42 | 0.62 | 0.56 | 0.9 |

ஐந்து வருடப் பொழிப்பு






# XXX. போசாக்குப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| தொடர்புபடுத்தப்பட்ட காவறைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை | 973 | 1094 | 1125 | 1230 | 1538 |
| தொடர்புபடுத்தப்பட்ட வெளி நோயாளிகளின் எண்ணிக்கை | 931 | 1035 | 1371 | 1098 | 1449 |

ஐந்து வருடப் பொழிப்பு







# XXXI. உளவியல் ஆலோசனைப் பிரிவு

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| பணிகொள்வோர் எண்ணிக்கை | 789 | 884 | 1204 | 1664 | 1899 |
| உளவியல் மருத்துவ மற்றும் , ஔடத சிகிச்சைக்காக வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை | 113 | 137 | 316 | 238 | 278 |
| சட்ட ரீதியான ஆலோசனைக்காக ஈடுபடுத்தப்பட்ட எண்ணிக்கை | 41 | 57 | 86 | 79 | 68 |
| | கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள்/பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | 2006 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு | கணணி முறைமையில் உள்ளடங்கிய கையிருப்புப் பேரேடு | 243,908,511 | 945,610,170 | 701,701,659 |

 විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | வைத்தியசாலைக் கட்டண வருமானம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கணணி முறைமையில் உள்ளடங்கியிருந்த வைத்தியசாலைக் கட்டண வருமானத்தை வகைப்படுத்தல் | 1,782,161,942 | 1,716,661,796 | 65,500,146 |
| (இ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்பட செய்ய வேண்டிய இடர்க் கடன் | கணனி முறைமையில் உள்ளடங்கிய விரிவான இடர்க் கடன் அறிக்கை | 154,018,179 | 145,639,273 | 8,378,906 |
| (ஈ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் | வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 101,254,073 | 101,242,256 | 11,817 |
| (உ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை | 199,061,610 | 202,343,292 | 3,281,682 |
| | | | | | ----------------- |
| | | | | | 778,874,210 |
| | | | | | ======== |

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாகப் பரீசீலிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ முடியவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கணணி முறைமைக்கேற்ப வைத்தியசாலையின் 5 பிரிவுகளது ஆண்டின் இறுதியிலான கையிருப்பு | (1,137,150,035) | கணணி முறைமைக்கேற்ப கையிருப்பில் எதிர்மறைப் பெறுமதி ஏற்பட்ட விதம் மற்றும் கணனி முறைமைத் தகவல்களை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்றுகள். |

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடன் கொடுத்தோர் | (22,139,133) | கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் மீதிகளில் எதிர்மறைப் பெறுமதியேற்பட்ட விதம் மற்றும் கணணி முறைமையில் உள்ள தகவல்களது பிழையற்ற தன்மையை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்று |
| | வைத்தியசாலைக்கட்டணக் கடன்பட்டோர் | (29,157,006) | |
| (இ) | சத்திர சிகிச்சைப் பொருட்கள் | 199,116,129 | கணணி முறைமையில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கணக்கிலிருந்து சத்திர சிகிச்சைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கணக்கிற்கு மாற்றஞ்செய்யப்பட்ட பொருட்களை இனங்காண்பதற்கான ஆவணச்சான்று |
| (ஈ) | உள்ளவாறான கையிருப்பு (Virtual stock) | - | கையிருப்பில் உள்ளடங்கிய உள்ளவாறான கையிருப்பு வகைகள், அவற்றினளவு மற்றும் பெறுமதி என்பவற்றை இனங்காண்பதற்கான ஆவணச்சான்று. |

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை இராணுவத்திடமிருந்தும் இலங்கை கடற்படையிடமிருந்தும் 07 ஆண்டுகளாகப் பெற வேண்டியதாகவுள்ள வைத்தியசாலைக் கட்டணமாகிய ரூபா 4,137,333 அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணமாகிய ரூபா 3,616,142 தீர்த்து வைக்கப்படுவதற்கோ அல்லது வருமானமாக இனங்

காணப்பட்டுக் கணக்கிலிடப்படுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | கட்டணம் செலுத்தப்படும் வார்ட்டுக்களில் உள்ள நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு நோயாளிகளிடமிருந்து அறவிடப்படும் தொழில்சார் கட்டணத்தின் மீதான உழைக்கும்போதே செலுத்தும் வரியை அறவிட்டு அதனை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாயினும், 2016 சனவரி முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 45,954,202 மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய உழைக்கும்போதே செலுத்தும் வரி அறவிடப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நிதிப்பிரமாணம் 756(2) (ஆ) | மெய்மையாய்வு செய்யப்படும் பொருட்கள் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் மெய்மையாய்வுச் சபையில் நியமிக்கப்பட வேண்டுமாயினும் 2015, 2016 ஆம் ஆண்டுகளின் போது சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையில் அவ்வுபகரணங்கள் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. மேலும், வைத்தியசாலைக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டு செயற்பட்டவாறிருந்த 5 மின்தூக்கிகளில் குறைபாடுகள் நிலவியதும் தொடர்ந்து பயன்படுத்த முடியாதிருப்பதும் அவ்வாறு |

AGDSL Auditor General's Department

| | | |
|---|---|---|
| | | பயன்படுத்துவது அபாயகரமானது என்பதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் அடங்கிய மெய்மையாய்வுச் சபையால் சிபார்சு செய்யப்படாதும் பெறுமதி கணிக்கப்படாததும் அம்மின்தூக்கிகள் அகற்றப்பட்டு அவை ரூபா 737,220 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 757(2) | நேரடிச் சரி, பிழை பார்த்தலின்போது இனங்காணப்பட்ட கையிருப்புக் குறைவு, மிகை, இணக்கமின்மை, இழப்புகள் என்பன தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து விசாரித்தறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன், அது தொடர்பாகக் கணக்களி உத்தியோகத்தர் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும். எவ்வாறாயினும், கணணி முறைமையிலுள்ள கையிருப்புப் பேரேடுகளில் உள்ளவாறான கையிருப்புகள் (Virtual stock) உள்ளடக்கப்பட்டிருப்பதால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்புக் குறைவு, மிகை, இணக்கமின்மை, இழப்புகள் என்பவற்றை இனங்காண முடியாதிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 770(3) | கொள்வனவு செய்யப்பட்ட விலை ரூபா 3,000 க்குக் குறையாததொரு பொருளை அழித்துவிடுமாறு பொருள் மெய்மையாய்வுச் சபை பரிந்துரை செய்யுமிடத்து, அது தொடர்பான தேர்ச்சியுள்ள சுயாதீன உத்தியோகத்தர் ஒருவரது கருத்தைக் கோர வேண்டுமாயினும், அவ்வாறல்லாது மீளாய்வாண்டின்போது சத்திர சிகிச்சை உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பன கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தன. |
| (இ) | 2007 மார்ச் 09 ஆந் திகதிய 133 ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2008 டிசெம்பர் 31 | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய அதி கூடிய இடர்க் கடன் ரூபா 250,000 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது 135 |

since the virtual stocks had been included in Stock Ledgers in the computer system, discrepancies, shortages and losses of stocks as at 31 December 2016 could not be identified.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

| | | |
|---|---|---|
| | ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பன | ஊழியர்களுக்கு அவ்வரம்பிற்கு அதிகமாக ரூபா 259,660 தொடக்கம் ரூபா 384,639 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட கடன்களது கூட்டுத் தொகை ரூபா 7,155,924 ஆகும். அவ்வாறே, 2017 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாதங்களின்போது மேலும் 105 ஊழியர்களுக்கு ரூபா 258,114 முதல் ரூபா 399,346 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதி கூடிய கடனுக்குரிய வரம்பை அதிகரித்திருந்த தொகை ரூபா 6,758,503 ஆகவுமிருந்தது. |
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை, 2015 யூன் 26 ஆந் திகதிய 18/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 13 ஆந் திகதிய 18/2015 (i) ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அரசாங்க சேவையில் உள்ள நிறைவேற்றுதர உத்தியோகத்தர்களுக்கு விசேட படி வழங்கப்பட்டிருந்தபோதும், அந்தப் படியை கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு ஏற்புடையதாகச் செய்யும் சம்பள மற்றும் ஊழியர் நிர்ணய ஆணைக்குழுவினது சிபார்சும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரமும் பெறப்படாது அவ் விசேட படி வைத்தியசாலையின் 8 நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 யூலை 01 முதல் 2016 டிசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின்போது அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 616,500 ஆகும். |
| (உ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின்போது ரூபா 5,166,900 புத்தகப் பெறுமதியுடைய 04 வாகனங்கள் ரூபா 5,267,060 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும், அந்த 04 வாகனங்களும் கைதவிர்ப்புக்குப் பொருத்தமானவை என இயந்திரப்பொறியியலாளர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருடனான 03 உத்தியோகத்தரடங்கிய விசேட கொள்வனவுச் சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப / இயந்திரவியல் உத்தியோகத்தரை உள்ளடக்கிய குழு ஒன்றினால் அவ்வாகனங்களது அதி குறைந்த விற்பனை விலை |

தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த 04 வாகனங்களும் கூறு விலைகள் கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை சுற்றறிக்கையின் 10 ஆந் பந்தியின் பிரகாரம் திரட்டு நிதியில் செலவு வைக்கப்படவுமில்லை. மேலும், வாகன விற்பனை விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படவுமில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

----------------------------

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் பற்றாக்குறை ரூபா 175,818,974 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 352,618,183 ஆகும். இதனால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 176,799,209 அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டினது வைத்தியசாலைச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 636,319,584 அதிகரித்திருந்தது. எனினும், ஆண்டினது வருமானமும் ரூபா 818,636,117 அதிகரித்திருப்பானது மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யின், 2012 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையும் 2013,2014 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையும் ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2012 முதல் 2014 வரை சபையின் பங்களிப்பு ரூபா 716,896,615 முதல் ரூபா 1,739,662,005 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளானபோதும், 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 950,142,035 வரை குறைவடைந்திருந்தது. எனினும், மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 1,305,091,352 வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 354,949,317 அதிகரிப்புமாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

உயர் தார்மீக ரீதியாகவும் நியமங்களுடனும் சிறப்பானதும் பாதுகாப்பானதுமான நோயாளிகளைப் பராமரிக்கும் சேவையை வழங்குதலே வைத்தியசாலையின் தொலை நோக்காவதுடன், அதனை ஈடேற்றுவதற்கெனத் தயாரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடடிக்கைத் திட்டம், பொருட்கொள்வனவுத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செய்தித் திரட்டின் (Bulletin) பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலையின் ஒட்டு மொத்தக் கட்டில் பாவனை 63.4 சதவீதம் முதல் 68.8 சதவீதம் வரை அதிகரித்திருந்தபோதும், தற்போதுள்ள 24 வார்ட்டுகளில் 8 வார்ட்டுகளில் உள்ள கட்டில்களது பாவனை 48.5 சதவீதம் தொடக்கம் 4.8 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், Physiotheraphy Service, Pathological Service, Endoscopy Test மற்றும் E.C.G Tests என்பவற்றிற்குட்படுத்தப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 141 சதவீம், 19 சதவீதம், 11 சதவீதம், 17 சதவீதம் என அதகரித்திருந்ததுடன் அது நன்மை தரும் போக்குடையதாகவுமிருந்தது.

(இ) வைத்தியசாலைக்கென நிதிசார் மற்றும் நிர்வாகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிக்கு 2014 தொடக்கம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் பொருட் கொள்வனவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அதற்கென ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டுமிருந்தது. இந்நிர்மாண வேலை மீளாய்வாண்டின்போது முடிவுறவிருந்த போதும், 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெறும் வைத்திய உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மருந்துப் பொருட்கள், ஏனைய

பொருட்கள் என்பவற்றை ஆவணப்படுத்தும் விதி முறைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அமுலாக்கப்படாதிருந்தன. வைத்தியசாலையின் 28 பல்வேறு பிரிவுகளிலும் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நன்கொடையாகப் பெறப்பட்ட அவ்வாறான 389 உபகரணங்களது பெறுமதியைக் கணிப்பிட்டு அவற்றை நிலையான சொத்துப் பதிவேடு, பொருட் பதிவேடு மற்றும் கையிருப்புப் பதிவேடு என்பவற்றில் முறைப்படி உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சுகாதாரக் கல்விப் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைப்பதற்காக ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலை மற்றும் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுக்கிடையே கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் 2016 மே 09 ஆந் திகதி முடிவடைந்ததன் பின்னர் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சு அப்பொறுப்பிலிருந்து விலகியிருந்தது. அந்நிறுவனத்தில் கல்வி கற்றவாறிருந்த முதல் இரண்டு தொகுதிகளது கற்கை நெறி முடிவடையும் வரை தொடர்ந்து அதனை நடாத்துவதற்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை அதன் நிர்வாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வைத்தியசாலை செலவிடும் சகல தொகையையும் மாதாந்தம் சுகாதார அமைச்சின் மூலம் மீளளிப்புச் செய்வதற்குமான அடிப்படையில் சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சரது ஆலோசனைப்படி அது தொடர்ந்து நடாத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந் நிறுவனத்தின் பொருட்டு 2016 டிசெம்பர் 31 வரை வைத்தியசாலை செலவிட்டிருந்த ரூபா 3,808,586 சுகாதார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதமளவிலும் மீளளிக்கப்படாதிருந்தது.

(இ) ஒவ்வொரு பிரிவுக்குமிடையே வைத்தியசாலை பதவியணியினரை உள்ளக இடமாற்றத்திற்குள்ளாக்கும் குறிப்பிட்டதொரு கொள்கை அல்லது விதிமுறையை இனங்கண்டு அதனை அமுலாக்குவதற்கு 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 10 ஆண்டுகளுக்கு அதிகமாக அல்லது ஒரே பிரிவில் அல்லது ஒரே வேலை நிலையத்தில் பணியாற்றியவாறிருக்கும் பதவியணியினர் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு

| வேலைத் தொகுதி | எண்ணிக்கை |
| --- | --- |
| தாதியர் | 71 |
| ஓடலிகள் | 115 |
| முகாமைத்துவ உதவியாளர் | 25 |

ஒரே துறையில் அல்லது பணியில் மாத்திரம் பெறப்படும் நிபுணத்துவம் காரணமாக, உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வேறு பிரிவுகளில் பணியாற்ற இயலாதிருத்தல் இல்லாதிருத்தல், பதவிக்கேற்ப ஒவ்வொரு பிரிவினதும் பணி தொடர்பாகச் சகல உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பெற வேண்டிய அறிவைப் பெற முடியாது போதல், பதவியணியினரை நிர்வகிக்க இயலாதிருத்தல், ஒட்டுமொத்த உள்ளக நிர்வாக முறைமையும் நலிவடைதல் போன்றன உருவாக இது ஏதுவாகலாம் என அவதானிக்கப்பட்டது.

(ஈ) இருதய நோய் சிகிச்சைக்காக அரசாங்க வைத்தியசாலையிலிருந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் நோயாளிகளின் செலவினப் பட்டியல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையால் வைத்தியப் பிரிவிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்களது விலைப்பட்டியல்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன இது தொடர்பாக சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சுடன் 2009 தொடக்கம் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது அரசாங்க வைத்திய சாலைகளிலிருந்து இருதய சிகிச்சைக்காக அனுப்படும் நோயாளிகளுக்கான விதிமுறை மற்றும் அதன் பொருட்டு சுகாதார, போசனை தேசிய வைத்திய அமைச்சினது அங்கீகாரத்தை உறுதி செய்வதற்கான விதி முறை மற்றும் விலைப் பட்டியலைத் தீர்த்து வைப்பது மற்றும் எதிரீடு செய்தல் போன்ற விதி முறைகளை உள்ளடக்கியவாறு இருதரப்பினருக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் அவ்வாறானதொரு உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. இதற்கமைய, முறையான விதிமுறை இல்லாமலேயே நோயாளிகள் இவ்வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைச் செலவினத்திற்குப் புறம்பாக பரிசோதனைக் கட்டணமும் வைத்திசாலையினது செலவுக்கான பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்நோயாளிகள் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலம் அதிகரிப்பதால் செலவுக்காள பட்டியலும் அதிகரித்திருந்தது. எனினும், அவ்வாறான மேலதிகச் செலவை எதிரீடு செய்வதற்கு வைத்தியப் பிரிவின் இணக்கம் பெறப்பட்டிராததுடன், 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த வைத்தியசாலைக் கட்டணமாகிய ரூபா 260,636,619 மீளாய்வாண்டின்போது வைத்திய வழங்கற் பிரிவுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பெறுமதியில் எதிரீடு செய்யப்படுவதற்கு வைத்தியசாலை ஒருதலைப்பட்சமாக நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக வைத்திய வழங்கற் பிரிவு அந்த எதிரீட்டை மேற்கொண்டிருந்தது.

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(உ) கட்டணம் செலுத்தப்படும் வார்ட்டுகளில் உள்ள நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு நோயாளிகளிடமிருந்து தொழில்சார் கட்டணத்தை அறவிட்டு அக் கட்டணத்தில் 99.85 சதவீதத்தைச் சத்திர சிகிச்சையில் பங்குபற்றிய விசேட வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், உதவிப் பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின்போது மாத்திரம் அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்தத் தொழில்சார் கட்டணம் ரூபா 309,427,740 ஆகும். இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) சாதாரண கடமை நேரங்களுக்கு அப்பால் விசேட வைத்தியர்கள் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தபோதும், அறவிடப்படக் கூடிய தொழில்சார் கட்டணம் அல்லது அது கணிப்பிடப்படும் விதம் தொடர்பாகக் குறிப்பிட்டதொரு விதிமுறை முகாமைத்துவதால் தயாரிக்கப்படவில்லை. அத்துடன், குறித்த விசேட வைத்தியர் தனது தற்றுணிபுக்கமைய கட்டணம் அறவிடுவதைத் தீர்மானித்துமிருந்தார்.

(ii) விசேட வைத்தியரைத் தவிர சத்திர சிகிச்சைக்குத் தோற்றும் ஏனைய வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் உதவிப் பதவியனியினருக்கும் தொழில்சார் கட்டணத்தை வழங்குவதற்கோ அல்லது அதனை அறவிடவோ எதுவித அதிகாரமோ இல்லாதிருக்கையில் 2016 சனவரி 01 முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது அவர்களுக்குத் தொழில்சார் கட்டணமாக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 77,925,691 ஆகும்.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2016 சனவரி 01 முதல் 2016 செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதியின்போது சத்திர சிகிச்சை உப களஞ்சியத்திலிருந்து 8 சத்திர சிகிச்கைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,707,922 மொத்தத் கிரயமுடைய மருந்துப் பொருட்களும் சத்திர சிகிச்சைப் பொருட்களும் வைத்தியசாலைக் கட்டணத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, சத்திர சிகிச்சைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டிராத 609 சத்திர சிகிச்சைப் பொருட்களது மொத்தக் கிரயமாகிய ரூபா 238,304 வைத்தியசாலைக் கட்டணமாக நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

## 4.4 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) C இலக்கக் கட்டிடத்தில் உள்ள 22 கழிவறைகளைப் பழுதுபார்ப்பதற்கான மதியுரை மற்றும் நிர்மாணப் பணியைக் கட்டிடத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தபோதும், அதற்கான பொருட் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. அத்திணைக்களம் தயாரித்த பொறியியல் மதிப்பீடு ரூபா 122,771,550 ஆகும். 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வேலையை ஆரம்பிப்பதற்கு முற்பணமாக ரூபா 8,000,000 அத் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 மே 20 ஆந் திகதியளவிலும் நிர்மாணப் பணியில் போதிய செயலாற்றல் இல்லாதிருந்தமையால் அவ்வொப்பந்தத்தை வைத்தியசாலை இரத்துச் செய்திருந்தது. எனினும், கட்டிடத் திணைக்களம் அது வரை மேற்கொண்ட வேலைகளுக்கான விலைப்பட்டியலைப் பெறுவதற்கும் முற்பணமாக வழங்கப்பட்ட தொகையைத் திர்த்து வைப்பதற்கும் 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ)

(i) இருதய நோய்ப் பிரிவினது நட்டத்தில் Aluminium Sun Shades களைப் பொருத்துவதற்கான பொறியியலாளர்களின் மதிப்பீடு ரூபா 3,286,800 ஆகும். இவ்வொப்பந்தத்தின் போது 52 சதவீதத்திற்கும் குறைவாக ரூபா 1,556,775 உடைய அதி குறைந்த கூறு விலை தொடர்பாக பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.9.11 பிரிவின் பிரகாரம் விரிவான மதிப்பாய்வை மேற்கொள்ளாதும் ஒப்பந்தத்திற்கான வீதத்திற்கான (Rate) பகுப்பாய்வைப் பெறாமலும் மேலதிக செயலாற்றல் பிணை முறையைப் பெறாமலும் ஒப்பந்தக்காரர் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ii) இரண்டாவது அதி குறைந்த கூறு விலையாகிய ரூபா 3,278,550 ஆகும். இதனைச் சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கு ஒப்பந்தத்தை வழங்கக் கூடியதான வாய்ப்பு இருந்த போதும் மீண்டும் கூறு விலைகளைக் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டு அதிகுறைந்த விலையான ரூபா 3,385,800 ஐச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை வழங்கியமையால் விலை ரூபா 107,250 ஆக அதிகரித்திருந்தது.

(இ) வைத்தியசாலையின் விவாகமாகாத வைத்தியர்களது உத்தியோகபூர்வ மனைகளது அறைகளுக்கு மைபூசி குளியலறையையும் கூரையில் உள்ள சீலிங்கிற்கும் பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொள்வதற்கான ரூபா 4,002,270 பெறுமதியுடைய ஒப்ந்தம், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியின் 5 சதவீத மற்றும் செயலாற்றல் பிணை முறி என்பன பெறப்படாது வழங்கப்ட்டிருந்தது. கூறு விலைக் கோரலுக்கான 12 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் 2015 டிசெம்பர் 20 ஆந் திகதியளவில் ஒப்பந்தத்திற்கான வேலை முடிவடைந்து ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், 2016 மே 23 ஆந் திகதி வேலை நிறைவேறி தாமதக் கட்டணம் அறவிடப்படாது மொத்தத் தொகையும் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) பழைய கட்டிடத்தில் உள்ள 2 Hitachi குளிரூட்டி இயந்திர பழுதுபார்த்தலுக்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,250,000 ஆகும். இதற்கான பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையில் ஈடுபடாது 2015 செப்டெம்பர் 28 ஆந் திகதியன்று பழுதுபார்த்தல் வேலை தனியார் நிறுவனம் ஒன்றியம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(உ) பொருட்கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குப் திட்டமிடப்பட்ட செயலமர்வுகள் (Work Shop), கட்டிட நிர்மாண வேலைகள் என்பவற்றிக்குத் தேவையான ரூபா 80 மில்லியனுக்கான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், பொருட் கொள்வனவு நடவடிக்கைகளது தாமதம் காரணமாக ஒப்பந்தத்தை வழங்கப்படுத்துவது ஆவது 2016 நவெம்பர் 09 வரை தாமதமாகியிருந்ததுடன் அத் தினத்தன்று ரூபா 96.5 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான கடிதத்தின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் 2017 சனவரி 30 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஏப்ரல் 29 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 செப்டெம்பர் 13 ஆந் திகதியளவிலும் நிதிசார் மற்றும் உருப்படிச் செயலாற்றல் என்பன முறையே ரூபா 27,131,481 மற்றும் 10 முதல் 12 சதவீதம் வரையினதாக இருந்தது.

(ஊ) பொருட் கொள்வனவுத் திட்டத்திற்கமைய 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட ஆண்டு தாதியர்களுக்கான விடுதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான ரூபா 100 மில்லியனுக்கான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பொருட் கொள்வனவுச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு 2016 செப்டெம்பர் 09 வரை தாமதமாகியதுடன், 2017 பெபரவரி 16 ஆந் திகதியன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2017 ஒக்டோபர் 31 வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்தது. மேலும், வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம் (Mobilization Advanced) ஆக ரூபா

12,945,941 வழங்கப்பட்டிருந்தது. இந் நிர்மாணப்பணி 2018 யூன் 27 திகதியளவில் நிறைவடைய வேண்டிய போதும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கட்டிடத்திற்கான அத்திவாரமேனும் நிறைவேறாதிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 4,118,100 செலவில் நரம்பு சத்திரசிகிச்சைக் கூறுக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட 159 சத்திரசிகிச்சைப் பொருட்கள் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று காலாவதியாகியமையால் மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புக்குள்ளானது. முன்னைய ஆண்டுகளது பொருள் நுகர்வுப் போக்கை முறையாக ஆய்வு செய்யலாமலும் தேவையை இனங்காணாமலும் இப் பொருட்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பரீசீலனைகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் போது பொது முயற்சிகளுக்கான கணக்குக் குழு பணிப்பு விடுவித்திருந்த போதும் அவ்வாறான பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 களஞ்சியங்கள், 9 வார்ட்டுகள், வைத்தியசாலையின் ஏனைய 4 பிரிவுகள் என்பவற்றில் காலாவதியாகியிருந்த மருந்துப் பெறுமானமும் சத்திர சிகிச்சைப் பொருட் கையிருப்புகளதும் மொத்தக் கிரயம் ரூபா 449,294 ஆகும். 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் அவற்றை முறையாக அழித்து, புத்தகங்களிலிருந்து பதிவுகளை நீக்கியிருக்கவில்லை.

(இ) தேவைகளைச் சரிவர இனங்காணாது கதிர் இயக்கப் பிரிவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 190 Micro Bar Enema Kit பெக்கட்டுக்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மெதுவாக நகர்ந்தவாறிருந்தன. அதில் 140 பெக்கட்டுக்கள் 2017 யூலை மாதமளவில் காலாவதியாக இருந்தன. 60 பெக்கட்டுக்கள் இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு 2017 மார்ச்சில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் ரூபா 108,000 கிரயமுடைய 40 பெக்கட்டுக்கள் காலாவதியாகி இருந்தன.

### 4.6 பதவியணி நிர்வாகம்

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 பெப்ரவரி 10 மற்றும் 2017 யூன் 09 ஆந் ஆகிய இணக்கங்களில் நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டங்களில் வைத்தியசாலையின் பணிப்பாளரது பிரதான கணக்காளரதும் பதவிகளில் நிலவிய வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு சுகாதார, போசனை மற்றும் தேசிய வைத்திய அமைச்சு நேரடித் தலையீட்டுடன் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுவிக்கப்பட்டிருந்த போதும், 2017 டிசெம்பர் 31 வரை பணிப்பாளர் மற்றும் பிரதான கணக்காய்வாளர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு அதுவரை வைத்தியசாலையில் பணியாற்றவாறிருந்த பெண் வைத்தியர் ஒருவா 2013 யூலை 08 தொடக்கம் நியமிக்கப்பட்டிருந்தார். பதவிற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைய, வைத்திய நிர்வாகத்தில் 7 ஆண்டுகால அனுபவம், ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின்படிப்பு மற்றும் 45 வயதுக்குக் குறைவாக இல்லாது இருத்தல் ஆகிய தொகைகளை அப்பதவி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தர் கொண்டிருக்கவில்லை. மேலும், தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.4.1 அம் பிரிவின் பிரகாரம் குறித்த தகைமைகளைப் பெறுவதற்கான பரீட்சை ஒன்றிலோ அல்லது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி அடையாமை காரணமாக தமக்குரிய நிரந்தர பதவிக்கான சம்பள அளவுத்திட்டத்தை அதிகரித்தவாறு சித்தியடையாத அவ்வுத்தியோகத்தரை உயர் பதவியில் பதில் கடமையாற்ற நியமிக்கப்படலாகாது எவ்வாறாயினும், வினைத்திறமைகளால் தடைப்பரீட்சையில் சித்தியடையதாலால் 12 ஆண்டுகளாக சம்பள ஏற்றத்தைப் பெறுவதற்கும் தவறியிருந்த அவருக்கு அப்பதவி வழங்கப்பட்டிருந்தது. மேலும், பிறிதொரு பதில் கடமையாற்றுவதற்கான நியமனத்தைப் பெறுவதற்கான கடிதத்தை முறையாகப் பெற்றிராதிருந்தும் 2013 யூலை 08 முதல் 2017 சனவரி 31 வரையான காலப்பகுதியின் போது பதில் கடமையாற்றுவதற்காக ரூபா 1,827,893 வழங்கப்பட்டிருந்தது.

(இ) வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவிக்கு முறையான நியமனக் கடிதத்தைப் பெற்றிராத வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் 2015 மார்ச் 04 தொடக்கம் அப்பதவியை பொறுப்பேற்றிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 வரை வைத்தியசாலையின் சகல முகாமைத்துவ மட்டத் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் பங்கேற்றிருந்தார் முறையான நியமனக் கடிதம்

இல்லாதிருந்தும் அது கருத்திற் கொள்ளப்படாது பணிப்பாளர் பதவியின் ஆரம்ப சம்பளம் மற்றும் பதவிக்குரிய ஏனைய சகல படிகளையும் வழங்குவதற்குப் பணிப்பாளர் சகல அங்கீகாரம் வழங்கியிருந்தமையால் மேற்படி காலப்பகுதியின்போது அவ்வுத்தியோகத்தருக்குச் சம்பளமும் படியுமாக மொத்தமாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 5,903,431 ஆகும். பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் வைத்திய நிர்வாகத்தில் 7 ஆண்டு கால அனுபவ மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின்படிப்பு போன்ற தகைமைகள் பதவியேற்பின் போது அவருக்குமில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

ஐந்து ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அக் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் திட்டம் தயாரிக்கப்படவில்லையெனவும் பின்வரும் அவதானிப்புகளின் மூலம் உறுதியானது.

(அ) 2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்கென தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அமுலாக்கப்பட வேண்டிய, வைத்தியர்களுக்கான போசன காலையை அமைத்தல், இருதய நோயாளர்களுக்கென உயர் தரத்திலான ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல், மற்றும் குழந்தைகளது அவசர சிகிச்சைப்பிரிவின் முன்னேற்றம் போன்ற பணிகள் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாத மத்திய குளிரூட்டி முறைமையை மீண்டும் அமைத்தல், மின் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல், பயணிகளது மின் தூக்கிகைகள் கொள்வனவு செய்தல் போன்ற பணிகள் கூட்டினைந்த திட்டத்தில் நாளதுவரையாக்கப்படாது மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்தன.

5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பயடகின்றன.

(அ) நோக்குடனான ஒவ்வொரு பணிக்குரிய மதிப்பிடப்பட்ட கிரயம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்த்த இலக்கு மற்றும் நோக்கம் என்பவற்றை அடைவதற்கான செயல் முன்னேற்றத்துடன் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அதன் பொருட்டுக் செலவிடப்பட்ட தொகையையும் இனங்காணும் விதத்தில் காலாண்டுக் செயல் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து அவற்றின் பிரதிகளை 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த அமைச்சிற்குப் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் அனுப்பி வைத்திருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பொது வைத்தியசாலைச் சபையின் தலைவரது வலாகத்திற்குப் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சம் | அவதானிப்பு |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) சகல நிலையான சொத்துக்களையும் நேரடியாக இனங்கண்டு அவற்றின் பெறுமதியை மதிப்பீட்டு பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை உள்ளடக்கிய கணணி அச்சிடல் பதிவேட்டில் கட்டிடத் திருத்துவதற்கான மீளாய்வாண்டுச் செலவினத் தொகையாகிய ரூபா 39,157,304 சேர்த்துக்கொள்ளப்படாமை. |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | மருந்துப் பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்கள் களஞ்சிம் போன்நேற உப களஞ்சியங்களது கையிருப்பும் பதிவேடுகளும் நாளது வரையாக்கப்படும் பேணப்படாததுடன், கையிருப்புப் |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

| | | |
|---|---|---|
| | | பெறுவனவு, வழங்கல் மற்றும் கையிருப்பு மீதி என்பவற்றைப் பிழையின்றிக் கணக்கிலிடும் விதிமுறையைக் கணகி முறைமையில் அறிமுகஞ் செய்து வைத்தியசாலையால், வைத்தியசாலையின் 5 பிரிவுகளில் உள்ள 350 சத்திர சிகிச்சை பொருட்களது கிரயம் கணணி முறைமையில் உள்ளடக்காமை, கையிருப்புக்களது நேரடிச் சபி, பிழை பார்த்தல் அறிக்கைகளில் புள்ளி விபரங்களைப் பென்சிலால் குறித்துக் கொண்டன மற்றும் அவற்றின் பிழையற்ற தன்மையைச் சான்றுறுதிப்படுத்தாமை, பிரதான களஞ்சியப் பொறுப்பாளர் களஞ்சியக் கையிருப்புச் சரி, பிழை அறிக்கைகளில் தமது கையெழுத்திட்டிராமை. |
| (இ) | பதவியணி நிர்வாகம் | ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, தரப்படுத்தல் மற்றும் சம்பள அளவுத் திட்டம் போன்றவற்றிற்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அவற்றை அங்கீகரித்துக் கொண்டிருக்காமை. |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த நிர்வாகத்தின் பொருட்டு நிரந்தர கண்காணிப்பும் மேற்பார்வையையும் மேற்கொள்ளப்படாமை |
| (உ) | பொருட்டு கொள்வனவுக் கட்டுப்பாடு | தேவைகளை இனங்கண்டு கொள்வனவுகளை மேற்கொள்ளாமை, நிபந்தனைப் பிரகாரம் --- செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | கணணிக் கணக்கீட்டு முறைமை | நாட்குறிப்பு இலக்கம், குறியீடு, விபரம் என்பவற்றை முறைமையில் பத்திரிகை, இரட்டைக் குறிப்புப் பதிவினது விபரத்தை பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம் :- காமினி விஜேயசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

| | | |
|---|---|---|
| (d) | Contract Administration | Failure in super-checking and supervising continuously in respect of contract administration. |
| (e) | Control of Purchases | Failure to purchase by identifying the requirement and failure in taking action to obtain the service of suppliers in terms of conditions. |
| (f) | Computer Accounting System | Failure to enter the journal entry number, characteristics and details into the system and failure to enter the details on double entry in Ledger Accounts. |

Sgd./ H.M. GAMINI WIJESINGHE
Auditor General

H.M.Gamini Wijesinghe
Auditor General

ஸ்ரீ ஜயவர்தனபுர புது வைத்தியசாலை சபையின் 2016 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்குரிய நிதிக்கூற்றுத் தொடர்பிலான 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காளர் நாயக அறிக்கை

| | | கணக்காய்வு அவதானிப்புகள் | சீர்செய்து கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| 2.2 | நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் | | |
| 2.2.1 | <u>இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்</u> | | |
| | பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 | |
| | | நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால், ரூபா 1,760,458,764 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாக தேய்மானத்திற்குள்ளாகியபோதும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, உருவாகிய மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 3 க்கமைய மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைத்தியசாலையில் ஆரம்பம் முதல் இன்றுவரை பயன்படுத்திய சில சொத்துக்களை முழுமையாக பெறுமானத்தேய்வு செய்திருக்கின்ற போதிலும் அதில் பாவிக்கக்கூடிய நிலைமை காணப்படுவதால் ஏற்கனவே அந்த சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த சொத்துக்களில் உள்ள புத்தகங்களின் பெறுமதி சூனியமாக காணப்படுவதால் எதிர்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றை இணைத்துக் கொண்டு அந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| | (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 | |
| | | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கட்டிக்காட்டப்பட்ட ரூபா 270,037,438 பெறுமதியான எஞ்சிய கையிருப்பைப் பெறுமதியிடுவதற்குப் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | வைத்தியசாலையின் கணக்கீட்டு நடைமுறையானது சகல இருப்புகளையும் "முதலில் பெறப்பட்டவைகளை முதலில் விநியோகித்தல்" (fifo) முறைக்கேற்ப பெறுமதியாக்கப்படுதலுடன் அது கணக்கீட்டுக் கொள்கையாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு இயலாமல் இருக்கிறது. 2017 ஆம் ஆண்டு முதல் இறுதிக் கணக்குகளுள் கணக்கீட்டுக் கொள்கையாக இதனை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2.2.2 | கணக்கீட்டுக் கொள்கைகள் | | |
| | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பின்னரான ஊழியர் நலன்களுக்கான நிதியேற்பாடாக ரூபா 449,499,047 காட்டப்பட்டிருந்தபோதும், அந் நிதியேற்பாடு சம்பந்தமான கணக்கீட்டுக் கொள்கை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | முன்னால் பணியாளர்களின் உபகாரச் சம்பளங்களை ஒதுக்குவதற்காக விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கையொன்று காணப்படாததுடன் 1992ஆம் ஆண்டு 62 ஆம் இலக்க உதவுத் தொகை சட்டத்திற்கு அமைவாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகிறது. |
| 2.2.3 | கணக்கீட்டுக் குறைபாடுகள் | | |
| | பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | மீளாய்வாண்டின்போது கைதவிர்ப்புச் சபையால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 23,999,790 கிரயமுடையதும் 3,892 கூறுகளைக் கொண்டதுமான முற்றாக தேய்மானத்திற்குள்ளான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுடன் கட்டிடப் பொருட்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றினது உள்ளவாறான கிரயமும் திரண்ட தேய்மானமும் இனங்காணப்பட்டுக் கணக்கிலிருந்து நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மீளாய்வாண்டின் போது சத்திரசிகிச்சை உபகரணங்கள், கட்டட பொருட்கள் மற்றும் தளபாட உபகரணங்கள் ரூ.23,999,790.00 பெறுமதியுடைய பாராதீனப்படுத்தும் சபையினால் இணங்கானப்பட்டு பாராதீனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஏதேனும் ஒரு தாமத குறைபாட்டின் காரணத்தினால் கணக்கில் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராதனால் கணக்கில் உள்ளடக்குவதற்கு முடியாமல் போயிருந்ததென்பதை ஏற்றுக்கொண்டேன்.<br>அதே போன்று, இரசாயன ஆய்வுகூட உபகரணங்களும், வைத்திய உபகரண அலகுகள் 88 பாராதீனப்படுத்தப்பட்ட போதிலும் ஏதேனும் ஒரு தாமதக் குறைபாட்டின் காரணமாக கணக்குகளில் உள்ளடக்கப்படுகின்ற செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இந்த விடயங்களை கருத்ததிற் கொண்டு 2017 ஆம் ஆண்டின் கணக்குகளை தயார் செய்யும் போது சீர்ராக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| | (ஆ) | பின்னரான ஊழியர்களது நலன்பொட்டு, சேவைக்காலத்திற்கேற்ப, ஆரம்பச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவும் படியும் சேர்த்துக்கொள்ளப்பட்டு அதில் அரைவாசிக்கு நிதியேற்பாட்டை மேற்கொள்வது தற்போது கடைப்பிடிக்கப்படும் முறையாகும். அது தொடர்பான பரிசீலனையின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு. | |
| | (i) | மீளாய்வாண்டிற்கு முன்னரான ஆண்டுகளில் ஓய்வு பெற்ற 3 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை நலனாக ரூபா 1,004,992 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருக்கும் தவறை ஏற்றுக்கொண்டேன். கணக்குகளில் அவற்றை சீர் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கிறேன். |
| | (ii) | மீளாய்வாண்டின்போது ஒரு ஊழியருக்கு வழங்கப்பட்ட ரூபா 168,121 பணிக்கொடையானது கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | உதவுத் தொகைகளை செலுத்தும் போது உரிய கணக்கில் வைப்பு செய்வதுடன் வருட இறுதியில் உரிய சீராக்கல்கள் பதிவு செய்யப்படும். அதற்கேற்ப ரூ.168,121.00 பெறுமதியான பணத்தொகை சரியாக கணக்கில் பதிவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணத்தொகையில் இருந்து கழிக்கப்பட வேண்டிய மீதிகளை கழிக்காமையே ஏற்பட்ட குறைபாடாகும் என்பதையே ஏற்றுக் கொள்வதுடன் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| | (iii) | பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத 2 ஊழியர்கள் மீளாய்வாண்டின்போது ஓய்வு பெற்றிருந்தனர். அவர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடையாகிய ரூபா 691,645 முன்னைய ஆண்டிற்காக இலாபத்தில் சீர்க்கல் செய்யப்படாது பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டிருக்கும் பணியாளர்களுக்கு 2015ஆம் ஆண்டின் உதவு தொகைகளை ஒதுக்கியிராமையானது ஏற்பட்டிருந்த ஒரு குறைபாடாகும். அதற்கு காரணம் ஒரு பணியாளர் 2016.01.01 ஆம் திகதி ஓய்வு பெற்றிருப்பதுடன் மற்ற பணியாளர் சம்பளம் அற்ற வெளிநாட்டு விடுமுறையை பெற்றிருக்கின்றமை. |
| | (iv) | முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத ஏனைய 30 ஊழியர்களின் பொருட்டு மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 6,062,715 பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அதில் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 5,276,554 முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | ஏனைய 30 பணியாளர்களின் 2015 டிசம்பர் மாத சம்பளங்கள் பல்வேறு காரணங்களினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக 2015 ஆம் ஆண்டுக்கான உதவு தொகை ஒதுக்கீட்டு கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை |
| | (v) | மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பணியாற்றியவாறிருந்த 2 ஊழியர்களின் பொருட்டு மீளாய்வாண்டிற்கான ரூபா 808,897 பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கனணி முறைமையில் மேற்படி பணியாளர்களின் சேவை முடிவு தினத்தை தவறாக உள்ளடக்கியிருப்பதனால் அறிக்கையில் உள்ளடங்கியிருக்கவில்லை. |
| | (vi) | மீளாய்வாண்டில் 84 ஊழியர்களது பணிக்கொடைகடகான நிதியேற்பாடு ரூபா 1,845,812 கூடுதலாகக் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | கனணி முறைமையில் சேவைக்கு வருகை தந்த தினமாக தாதியர் கல்லூரிக்கு வருகை தந்த தினத்தை பதிவு செய்திருப்பதனால் இந்த தவறு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. சீர் செய்யப்பட்டுள்ளது. |
| | (vii) | மூன்று ஊழியர்களது பணிக்கொடையில் இடர்க்கடன் மீதியாகிய ரூபா 395,867 மற்றும் விழா முற்பணமாகிய ரூபா 21,750 என்பன கழிக்கப்பட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டபோதும், கழித்தும் கொள்ளப்பட்ட கடனும் முற்பணமு:் கணக்கிலிடப்படவில்லை. | தவறை ஏற்றுக் கொண்டேன். |
| | (viii) | இரு ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 334,557 பணிக்கொடையை முன்னைய ஆண்டின்போது கொடுப்பனவு செய்கையில் கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கணக்கில் வரவு வைக்காது பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த்து. அதற்கமைய, மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கணக்கும் நிதியேற்பாட்டுக் கணக்கும் முறையே அதிகரித்தும் குறைத்தும காட்டப்பட்டிருந்தன. | இது நிதியாண்டுக்குள் ஏற்பட்ட மாற்றுதல் செய்யும் போது; ஏற்பட்ட தவறாக காணப்படுவதுடன் அது 2017 ஆம் ஆண்டுக்குள் சீர்செய்யப்பட்டுள்ளது. |
| | (ix) | மீளாய்வாண்டின்போது சேவையிலிருந்து விலகிய ஊழியர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியப் பணிக்கொடையாகிய ரூபா 525,490 இடர்க் கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் இடர்க் கடன் கணக்கும் பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | பதிவு செய்தலின் (Posting Error) போது ஏற்பட்ட ஓர் தவறாகும். சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| | (இ) | மீளாய்வாண்டின்போது விடுதி வசதிகளுடனான நோயாளர் அறைகளில் இருந்தோரிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியாகிய ரூபா 3,115,280 விடுதி வசதிகளுடனான நோயாளர் அறை வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படாது அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | இந்த தவறை ஏற்றுக் கொள்வதுடன் சேர்க்கப்பட்ட வரி அறவீடு ஆரம்பிக்கப்பட்ட முதல் வருடத்தில் (2016இல்) வைத்தியசாலை கனணி முறைமையுள் வருமானங்கள் வகைப்படுத்தப்பட்ட போதிலும் அதில் உள்ளடங்கும் VAT பெறுமதிகளை சரியாக முறைமையினுள் இனம்கண்டு கொள்ள முடியாததனாலேயே இந்த நிலைமை தோன்றியிருக்கிறது. மீளாய்வாண்டின் யூலை 11 ஆம் திகதி ஆகும் வரை சகல பொருட்களுக்குமான VAT வரி அறவிடப்பட்டது. இருப்பினும் யூலை 11ஆம் திகதி முதல் ஒக்டோபர் 30 திகதி வரை VAT அறவிடப்பட்டிருக்கவில்லை. மீண்டும் ஒருமுறை 2016 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் VAT வரி அறவிடப்பட்டது. இந்த சிக்கலான நிலை காரணமாக மென்பொருள் முறைமை நிகழ்ச்சிப்படுத்துல் (Programming) செயற்பாடானது நடைமுறையில் கடினமான ஒன்றாக காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | (ச) | மூலதன நிதியேற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பொருட்டு முன்னைய ஆண்டின் போது சொத்துக்கள், பொறித் தொகுதி உபகரணங்கள் என்பவற்றினது தேய்மானம் ரூபா 18,095,030 குறைவாகப் கணக்கிலிடப்பட்ட தவறானது மீளாய்வாண்டின்போது திருத்தஞ் செய்யப்பட்டிருந்த போதும், அதற்கு சமமாகச் சொத்துக்கள் காலக் கழிவுக்குள்ளாகவில்லை. | இது கணக்கீட்டு நியமங்களின் ஒரு குறைபாடு என்பதை ஏற்றுக்கொண்டேன். 2017 ஆம் ஆண்டில் உரிய சீராக்கல்களை பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (உ) | மீளாய்வாண்டின்போது கட்டிடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றினது தேய்மானம் ரூபா 93,756 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | குறைவாக தேய்மானமிடப்பட்ட பெறுமதிகளை சீர்செய்து சரியான தேய்மான பெறுமதியை 2017 ஆம் ஆண்டில் அளவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | (ஊ) | தொழில்சார் கட்டணங்களுக்கு அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் வரியை இனங்கண்டு அறவிட்டிராததுடன், அதற்குப் பதிலாக பெற வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கு மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய வரிக்கணக்கிற்கென மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 8,500,000 என்பன முறையே வரவு மற்றும் செலவாக ஆக்கப்பட்டிருந்தன. | சரியாக கணக்கில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (எ) | காசுப்பாய்ச்சல் கூற்று சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| | (i) | ஆண்டிற்கான இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட வேண்டிய சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களது தேய்மானமாகிய ரூபா 243,786,065 ரூபா 257,076,160 ஆகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்த்து. | சமர்ப்பித்தல் குறைபாடாகும். (Presentation Error) |
| | (ii) | முன்னைய ஆண்டிற்கான சீராக்கலாக ஆண்டிற்கான இலாபத்தில் ரூபா 15,104,017 தவறுதலாகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டிலும் நிதிப்பாய்ச்சல் கூற்றை தயார் செய்யும் போது முன்னைய ஆண்டின் குறைபாடுகள் நிதிப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படும். |
| | (iii) | சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 535,040,707 ஆகும். எவ்வாறாயினும், அதில் ஆண்டின்போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட 04 மோட்டர் வாகனங்களது கிரயமாகிய ரூபா 5,166,900 கழிக்கப்பட்டு எஞ்சிய ரூபா 529,873,807 மாத்திரம் வெளிச் சென்ற காசுப் பிரவாகமாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும், அந்த 04 மோட்டர் வாகன விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 5,267,060 உள்ளே வந்த காசுப் பிரவாகமாகக் காட்டப்படவில்லை. | சமர்ப்பித்தல் குறைபாடாகும். (Presentation Error) |
| | (V) | மீளாய்வாண்டின்போது சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றைக், கொள்வனவு செய்வதற்கு செலவிட்ட ரூபா 5,497,570 சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக மீண்டுவரும் செலவினமாகக் கருதப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (ஐ) | முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் நன்கொடையாகப் பெறப்பட்ட 389 கூறுகளையுடைய உபகரணங்களது பெறுமதியைக் கணிப்பிட்டு அவற்றைக் கணக்கிலிடவில்லை. | 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் தொடர்பிலான ஆய்வின் போது வைத்தியசாலையின் சில பிரிவுகளுக்கு கிடைக்கப்பெற்ற நன்கொடைகளை இனங்கண்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், ஏற்கனவே நோயாளிகளினால் வழங்கப்படும் நன்கொடைகளை இனம்காணப்பட்டிருக்கின்றமை தொடர்பிலான அறிக்கையிடும் விதி முறையொன்று வைத்தியசாலையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. |
| | (ஒ) | மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 25,359,934 பெறுமதியுடைய Incinerator இயந்திரத்தின் கிரயம் மின்சார உபகரணங்கள் (Electrical Equipment) கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஏனைய கட்டிடங்கள் (Other Buildings) கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ரூ.25,359,934.00 பெறுமதியுடைய Incinerator இயந்திரத்தை நிறுவும் போது நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் ஒன்றில் பொருத்தப்பட்டிருப்பதனால் அடையாளம் கண்டு கொள்ளும் சிக்கலின் காரணமாக Other Building என்பதன் கீழ் கணக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.<br>ஆனால் இந்த இயந்திரத்தை Electrical Equipment என்பதன் கீழ் குறிப்பிட்டுக்காட்டுவதற்கு 2017 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் கணக்கிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதிக்குமிடையே ரூபா 778.874.210 கூட்டுத் தொகையுடைய வித்தியாசமிருந்தபோதும், வித்தியாசத்திற்கான காரணம் விளக்கப்படவில்லை.

(அ)

| கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்ட கோவைகள்/ பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | வித்தியாசம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கைபிருப்பு | கணனி முறைமையில் உள்ளடங்கிய கைபிருப்புப் பேரேடு | 243.908.511 | 945.610.170 | 701.701.659 |

நிஜமான கைபிருப்பு (Virtual Stocks) வைத்தியசாலை கனணி முறை ஆரம்பத்தின் போது முறைமையூடாக வைத்தியசாலையின் பட்டியல்களை தயாரிக்கும் செயன்முறையை ஆரம்பிக்க வேண்டிய தேவைப்பாடு தோன்றியது. அதற்கேற்ப வைத்தியசாலையின் சகல பிரிவுகளிலும் கனணி முறைமையினூடாக நிஜமான கையிருப்பு உள்ளடக்கப்பட்டது. 2016 கையிருப்பு ஆய்வு சபையினால் அத்தகைய நிஜமான தொகைகள் அகற்றப்பட் வேண்டியிருந்த போதிலும் (நிஜமான கையிருப்புகள் இல்லையென கருத்திற் கொண்டு) சில பிரிவுகளில் அது அவ்வாறு நடைபெற்றிருக்கில்லை. அவர்களால் சரியான கையிருப்புகள் அளவிடப்பட்டு கணக்கீடு செய்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கையிருப்புகள் வசூல் செய்யப்பட்ட பெறுமதிக் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் முறைமையில் 2016.12.31 ஆம் திகதியில் நிஜமான கையிருப்பு காணப்பட்டதனால் கையிருப்பு வசூல் பெறுமதிகள் வைத்தியசாலை கனணி முறைமையூடாக குறிப்பிட்டு காட்டப்படும் பெறுமதிகளுக்கிடையிலே பாரிய வித்தியாசம் ஒன்றை காணக்கூடியதாகவுள்ளது.

(ஆ)

| கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்ட கோவைகள்/ பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | வித்தியாசம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| வைத்தியசாலைக் கட்டண வருமானம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கனணி முறைமையில் உள்ளடங்கியிருந்த வைத்திய சாலைக் கட்டண வருமானத்தை வகைப் படுத்தல் | 1.782.161.942 | 1.716.661.796 | 65.500.146 |

வருமான கணக்குகள் அனைத்தையும் சேர்த்துக் கொள்ளும்போது அவை நிதிக்கூற்றுகளில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும் வருமானத்திற்கு சமமானதாக காணப்படுகிறது. உரிய வித்தியாசமானது மீதிகள் பரிட்சிப்பில், கொடுப்பனவின் மீதான சிகிச்சைக்கள வருமானம் மற்றும் சாதாரண சிகிச்சைக்கள வருமானம் என்பவற்றை கருத்தில் கொண்டு குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது. மீதிகள் பரிட்சிப்பில் உரிய வகைப்படுத்தல்கள் செய்யப்பட்டிருப்பது முன்னர் பயன்படுத்தப்பட்ட படிவத்திற்கு அமைவாகவே. இந்த ஒப்பீட்டு நடவடிக்கைகள் சரியானவை அல்ல.

(இ)

| கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்ட கோவைகள்/ பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | வித்தியாசம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்பட செய்ய வேண்டிய இடர்க் கடன் | கணனி முறைமையில் உள்ளடங்கிய விரிவான இடர்க் கடன் அறிக்கை | 154.018.179 | 145.639.273 | 8.378.906 |

இந்த பிழையை ஏற்றுக்கொள்வதுடன் இது தொடர்பில் கண்டறிந்து சரியான மீதிகளை இனம்கண்டு கணக்குகளில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஈ)

| கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்ட கோவைகள்/ பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | வித்தியாசம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் | வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 101.254.073 | 101.242.256 | 11.817 |

கடனாளிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்ப வைத்தியசாலை கட்டண பெறுமதிகளுக்குரிய வித்தியாசத்திற்கு காரணம் இராணுவத்திடம் இருந்து மற்றும் கடற்படையிடம் இருந்து கிடைக்கப்பட வேண்டிய வருமானங்களாகும். ஒவ்வொரு கடனாளியினதும் மீதி மற்றும் கடனாளிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் வித்தியாசத்தை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(உ)

| கணக்கீட்டு விடயம் | கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்ட கோவைகள்/ பதிவேடுகள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | கோவைகள்/ பதிவேடுகளின் பிரகாரமான பெறுமதி (ரூபா.) | வித்தியாசம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை | 199,061,610 | 202,343,292 | 3,281,682 |
| | | | | 778,874,210 |

இந்த வித்தியாசத்தை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். இந்த வித்தியாசத்தை ஏற்றுக் கொள்வதுடன் ஒவ்வொரு கடன்கொடுனரின் மீதிகளை மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தி கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக் கணக்குடன் ஒப்பீடு செய்து சீராக்குவதற்கு அல்லது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாகப் பரீசீலிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ முடியவில்லை.

(அ)

| விடயம் | பெறுமதி (ரூபா.) | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| கணனி முறைமைக்கேற்ப வைத்தியசாலையின் ஆண்டின் இறுதியிலான கையிருப்பு | (1,137,150,035) | கணனி முறைமைக்கேற்ப கையிருப்பில் எதிர்மறைப் பெறுமதி ஏற்பட்ட விதம் மற்றும் கணனி முறைமைத் தகவல்களை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்றுகள். |

கனணி முறைமையை செயற்படுத்தும் போது நிஜமான கையிருப்புகளை உட்படுத்துதலின் காரணமாகவும் சரியான கையிருப்பு மீதிகள் உட்படுத்தாமை காரணமாகவும் இவ்வாறு கனணி முறைமையில் பூச்சியப் கையிருப்புப் பெறுமதி தோன்றியிருக்கிறது. எதிர்காலத்தில் இந்த நிலைமைகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ)

| விடயம் | பெறுமதி (ரூபா.) | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| கடன் கொடுத்தோர் வைத்தியசாலைக் கட்டணக் கடன்பட்டோர் | (22,139,133)<br>(29,157,006) | கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் மீதிகளில் எதிர்மறைப் பெறுமதியேற்பட்ட விதம் மற்றும் கணணி முறைமையில் உள்ள தகவல்களது பிழையற்ற தன்மையை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்று. |

கனணி முறைமையில் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக BHT இலக்கங்கள் காட்டப்படாமை. அதில் உரிய Receipt, Prepayment ஆக உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக பூச்சியப் பெறுமதியாக காட்டப்படுகிறது. ஆனால் சரியான கடனாளியை இனம்கண்டு உரிய பெறுகைகள் சீராக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

(இ)

| விடயம் | பெறுமதி (ரூபா.) | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| சத்திர சிகிச்சைப் பொருட்கள் | 199,116,129 | கனணி முறைமையில் மருத்தவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கணக்கிலிருந்து சத்திர சிகிச்சைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கணக்கிற்கு மாற்றஞ்செய்யப்பட்ட பொருட்களை இனங்காண்பதற்கான ஆவணச்சான்று. |

எதிர்காலத்தில் கனணி முறைமையை நவீனப்படுத்தி நிலையான சொத்துக்களை இனம்கண்டு கொள்ளும் விதிமுறை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கேற்ப நிலையான சொத்துக்கள் தொடர்பிலான பொருட்களுக்கு குறியீடுகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக நிலையான சொத்துக்களை சரியான முறையில் இனம்கண்டு கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். மேலும் சரியான விதிமுறையொன்றை முறைமையில் தயார் செய்து கொள்வதற்கு தகவல் தொழிநுட்ப பிரிவுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ)

| விடயம் | பெறுமதி (ரூபா.) | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| உள்ளவாறான கையிருப்பு (Virtual Stock) | | கையிருப்பில் உள்ளடங்கிய உள்ளவாறான கையிருப்பு வகைகள், அவற்றினளவு மற்றும் பெறுமதி என்பவற்றை இனங்காண்பதற்கான ஆவணச்சான்று. |

கனணி முறைமையை சரியான முறைமையில் செயற்படுத்துவதன் ஊடாக இந்நிலைமை எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடும்.

| | | | |
|---|---|---|---|
| 2.3 | பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் | | |
| | பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | இலங்கை இராணுவத்திடமிருந்தும் இலங்கை கடற்படையிடமிருந்தும் 07 ஆண்டுகளாகப் பெற வேண்டியதாகவுள்ள வைத்தியசாலைக் கட்டணமாகிய ரூபா 4,137,333 அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த பணத் தொகையை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (ஆ) | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய தொழில்சார் கட்டணமாகிய ரூபா 3,616,142 தீர்த்து வைக்கப்படுவதற்கோ அல்லது வருமானமாக இனங் காணப்பட்டுக் கணக்கிலிடப்படுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த பணமானது 1998 ஆம் ஆண்டு முதல் தொழில் சார் கட்டணங்களாக பெற்றுக்கொள்ளப்படாத பணத்தின் ஒரு கூட்டாகும். இந்தப் பணத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து வைத்தியசாலை வருமானமாக இனங்கண்டு கணக்குகளில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| 2.4 | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை. | | |
| | பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன. | | |
| | (அ) | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு:** 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம்<br>**இணங்காமை:** கட்டணம் செலுத்தப்படும் வார்ட்டுக்களில் உள்ள நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு நோயாளிகளிடமிருந்து அறவிடப்படும் தொழில்சார் கட்டணத்தின் மீதான உழைக்கும்போதே செலுததும் வரியை அறவிட்டு அதனை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாயினும், 2016 சனவரி முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா45,954,202 மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய உழைக்கும்போதே செலுத்தம் வரி அறவிடப்படவில்லை. | 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க தேசிய வருமான வரி சட்டத்திற்கு ஏற்ப எவரேனும் ஒரு பணியாளரின் மாதாந்த நிரந்தர சேவை ஊழியர் வருமானம் . சம்பாதிக்கும் போதே வரி செலுத்துதற்கு கட்டுப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்ற போதிலும் தொழில் சார் நிரந்தர சேவை ஊழியர் வருமானமொன்று எனவும் அல்லாவிடில் தேசிய வருமானங்கள் சட்டத்திற்கேற்ப தொழில்சார் பணிகளின் மீது கிடைக்கப்பெறும் சேவை ஊழியர் வருமானமொன்று எனவும் தீர்மானித்தல் ஆனது சிக்கலுக்குரிய விடயமாக காணப்படுவதால் அது தொடர்பில் தேசிய வருமான திணைக்களத்தின் ஆலோசனைக்குழுவிடம் (Ruling Committee) ஆலோசனை கேட்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பில் சரியான பதில் இதுவரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும், தொழில்சார் வருமானம் கிடைக்கக் கூடியதாக இருப்பது தொழில்சார் நபர்களுக்கு மட்டும் என்பதால் தேசிய வருமானங்கள் சட்டமானது ஏற்புடையதாக காணப்படுவது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களுக்கு, வைத்தியர்களுக்கு மட்டுமே. தொழில்சார் கட்டணங்கள் தாதியர் பணியாற்றும் தொகுதி மற்றும் ஒடலி சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஏற்புடையது அல்ல என்பதால் கொடுப்பனவு செய்து தங்க வேண்டிய சிகிச்சைக்களங்களில் மருத்துவம் பெறும் நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை மற்றும் நோயாளர்களுக்கு பராமரிப்பு செய்வதன் மூலமாக கிடைக்கப்பெறும் கட்டணங்களை சம்பளத்துடன் சேர்த்து அதற்கேற்ப சம்பாதிக்கும் போதே செலுத்த வேண்டிய வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைத்திய நிபுனர்கள் மற்றும் வைத்தியர்களினால் வருமான வரி கோவைகளை திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அவ்வாறு வருமான கோவைகளை திறக்க விருப்பமற்ற அலுவலர்களின் தொழிசார் கட்டணங்கள் தொடர்பில் தேசிய வருமானங்கள் சட்டத்திற்கு ஏற்ப செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்போது அந்த செயன்முறை நடைமுறைப்படுத்தப் பட்டிருப்பதுடன் தேசிய வருமானங்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் கிடைக்கும் போது அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>தேசிய வருமானங்கள் திணைக்களத்தின் தொழிசார் கட்டணங்கள் தொடர்பில் சம்பாதிக்கும் போதே வரி செலுத்துதல் சம்பந்தாக தீர்மானிப்பது பற்றி அறிவுறுத்தல்கள் மேல்காட்டபட்ட முறையில் கூறப்பட்டிருப்பதுடன் தற்போது தொழிசார் கட்டணங்கள் தொடர்பில் சம்பாதிக்கும் போதே வரியானது சரியான முறையில் செலுத்தப்படுகிறது. |



D:\2018\AGQ\2016(14)2C\2016-14(2)c -2018.07.06-Tamil.docx

| | | | |
|---|---|---|---|
| | (ஆ)<br>(i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br><br>**நிதிப்பிரமாணம் 756 (2) (ஆ)**: மெய்மையாய்வு செய்யப்படும் பொருட்கள் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் மெய்மையாய்வுச் சபையில் நியமிக்கப்பட வேண்டுமாயினும் 2015, 2016 ஆம் ஆண்டுகளின் போது சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையில் அவ்வுபகரணங்கள் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. மேலும், வைத்தியசாலைக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டு செயற்பட்டவாறிருந்த 5 மின்தூக்கிகளில் குறைபாடுகள் நிலவியதும் தொடர்பந்து பயன்படுத்த முடியாதிருப்பதும் அவ்வாறு பயன்படுத்துவது அபாயகரமானது என்பதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் அடங்கிய மெய்மையாய்வுச் சபையால் சிபார்சு செய்யப்படாதும் பெறுமதி கணிக்கப்படாததும் அம்மின்தூக்கிகள் அகற்றப்பட்டு அவை ரூபா737,220க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. | பிரதான வைத்திய இரசாயன ஆய்வுக்கூட நிபுனரின் பங்குபற்றுதலுடன் கூடிய மெய்மையாய்வு செய்யும் ஒரு சபையினூடாக வைத்திய ஆய்வுகூடத்தின் உபகரணங்களை இனம்கண்டு மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மெய்மையாய்வு செய்யும் சபையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றும் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>மின்னஞ்சல் வைத்திய தொழிநுட்பவியலாளரினால் கதிர்வீச்சு பிரிவில் உள்ள உபகரணங்களை மெய்மையாய்வு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கதிர்வீச்சு பிரிவின் சிரேஷ்ட கதிரியல் வைத்திய நிபுணரினால் பதிவுவொன்று செய்து கையொப்பமிடப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் வைத்தியசாலை பணிப்பாளரினாலும் மெய்மையாய்வு செய்தலுக்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.<br>எதிர்காலத்தில் உபகரணங்கள் தொடர்பில் இதை விட சிறந்த நிபுணத்துவ அறிவை கொண்ட அலுவலர்களை மெய்மையாய்வு செய்யும் சபைகளுக்கு நியமித்து இதனை விட முறையான விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்கின்றேன்.<br>வைத்தியசாலையில் காணப்படும் 05 மின்னுயர்த்திகள், வைத்தியசாலையின் ஆரம்பத்திலேயே பொருத்தப்பட்டவைகளாக கடந்த சில வருட காலங்களுக்குள் இங்கு பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பாரியளவில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மின்னுயர்த்திகள் மூலமாக நோயாளிகளை கொண்டு செல்லும் போது அவை அடிக்கடி செயலிழந்தமையின் காரணமாக பணியாள் தொகுதியினர் அடிக்கடி இடையூறுகளுக்கு உள்ளாகிய சந்தர்ப்பங்கள் காணப்படுகிறது. அதே போல் பாரதூரமான நோய்களால் பீடிக்கப்பட்டு வருகின்ற நோயாளர்களுக்கும் இது ஒரு எச்சரிக்கை விடுக்கும் நிலையாக காணப்படுகிறது. அதற்கேற்ப கடந்த சிலவருட காலங்களுக்குள்ளேயே இந்த மின்னுயர்த்திகளை அகற்றி புதிய மின்னுயர்த்திகளை பொருத்துவதற்கான யோசனைகள் 2013ஆம் ஆண்டு முதல் வருடாந்தகூறு விலை திட்டங்களில் உள்ளடக்கியிருந்த போதிலும் ஒதுக்கீடுகள் கிடைக்காமை காரணமாக நடைமுறைப்படுத்த இயலாமல் போய்விட்டது. அதற்கேற்ப 2016 ஆம் ஆண்டிலும் கூறுவிலைத்திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த வருடத்தில் ஒதுக்கீடுகள் கிடைத்ததன் காரணமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த கூறுவிலைத்திட்டம் வைத்தியசாலை திட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>இந்த மின்னுயர்த்திகள் இயங்கு நிலையில் காணப்பட்ட போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்தில் செயற்படாத நிலைகுரிய எச்சரிக்கை காணப்பட்டது. இவ்வாறானதொன்று ஏதேனும் ஒரு வகையில் மீண்டும் பழுதுபார்த்து பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இயங்காமல் போகுமாயின் புதிய மின்னுயர்த்திகளை கொள்வனவு செய்வதற்கான ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பொருத்துவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதன் அடிப்படையில் மின்னுயர்த்திகளை பாவிக்க இயலாமல் போய்விடும். இது நோயாளிகள் பராமரிப்பில் நேரடிதாக்கத்தை ஏற்படுத்தும்.<br>இந்த எச்சரிக்கை நிலையை தவிர்த்துக் கொள்வதற்காக வைத்தியசாலை நிர்வாகம் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை பின்பற்றப்பட்டிருக்கிறது. மேலும் இது பாராதீனப்படுத்தல் ஒன்றாக கருதுதல் நடைமுறைக்கு சாத்தியமில்லை. புதிய மின்னுயர்த்திகளை பொருத்தும் போது பழைய மின்னுயர்த்திகள் அகற்றப்பட வேண்டும் என்பதுடன் அவை வைத்தியசாலைக்குள் வைத்திருப்பது முடியாத காரியம் என்பதால் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டது. அதற்கேற்ப இதை பாராதீனப்படுத்தல் குழுவுக்கு அனுப்புதல் அல்லது அவர்களின் சிபாரிசுகளை பெற்றுக்கொள்வதற்கு தேவை ஏற்படவில்லை.<br>இந்த மின்னுயர்த்தியை அகற்றுதல் தொடர்பில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | திறந்த விலைமனுக் கோரலின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறானது ஒன்றை அகற்றியதன் பின்னர் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக பாரிய இடவசதியொன்று தேவை என்பதுடன் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதானது மிகவும் கடினமாகும். அதற்கேற்ப விலைமனுக்களில் வழங்கப்பட்ட உயர்ந்த விலைக்கோரலுக்கு டென்டர் வழங்கப்பட்டிருக்கின்றது. இதை மீண்டும் டென்டர் செய்தால் பணிரீதியில் நடைமுறைச் சிக்கல் தோற்றுவிக்க கூடியதாக காணப்பட்டது. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 757 (2) | நோடிச் சரி, பிழை பார்த்தலின்போது இனங்காணப்பட்ட கையிருப்புக் குறைவு, மிகை, இணக்கமின்மை, இழப்புகள் என்பன தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து விசாரித்தறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன், அது தொடர்பாகக் கணக்களி உத்தியோகத்தர் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும். எவ்வாறாயினும், கணனி முறைமையிலுள்ள கையிருப்புப் பேரேடுகளில் உள்ளவாறான கையிருப்புகள்(Virtual stock) உள்ளவாறான கையிருப்புக் குறைவு, மிகை, இணக்கமின்மை, இழப்புகள் என்பவற்றை இனங்காண முடியாதிருந்தது. | விஷமங்கள் குறைபாடுகள் மற்றும் ஒப்பீடுகள் அல்லாத மற்றும் காணாமல் போதல் தொடர்பில் அந்தந்த குழுக்களினால் உரிய பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு அறியப்படுத்தி இருக்கின்ற போதிலும் அது தொடர்பில் எழுத்து மூலமான அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதுடன் அத்தகைய காலதாமதம் குறைபாடுகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்ளுகிறேன். |
| | (iii) | நிதிப்பிரமாணம் 770 (3) | கொள்வனவு செய்யப்பட்ட விலை ரூபா 3.000 க்குக் குறையாததொரு பொருளை அழித்துவிடுமாறு பொருள் மெய்மையாஃவுச் சபை பரிந்துரை செய்யுமிடத்து, அது தொடர்பான தேர்ச்சியுள்ள சுயாதீன உத்தியோகத்தர் ஒருவரது கருத்தைக் கோர வேண்டுமாயினும், அவ்வாறல்லாது மீளாய்வாண்டின்போது சத்திர சிகிச்சை உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பன கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தன. | 4 உணர்விழப்பு இயந்திரங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் உயிரியல் வைத்திய பொருயியல் சேவைப்பிரிவின் ஊடாக பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை ஒன்றை பெற்றிருப்பதுடன் அந்த அறிக்கைக்கேற்ப இந்த இயந்திரங்களை பாவிக்குமாறு பரிந்துரை செய்திருக்கவில்லை<br>செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடுவதற்காக மும்மொழிகளிலும் விளம்பரங்களை வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் அதற்காக குறைந்த பட்சம் ரூ.50,000 பெறுமதியான பணம் செலவாகும். ஆனால் இந்த பொருளை விற்று பெற்றுக்கொள்ளக்கூடிய பணப்பெறுமதியின் அளவு அதனைவிட குறைவாக இருக்கக் கூடும் என்பதனால் அந்த பொருளாதார இலாபத்தைக் கருத்தில் கொண்டு உள்ளக விளம்பரங்களின் ஊடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த பொருளை விற்றதன் மூலமாக ரூ.15,890 பணமே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கழற்றி அகற்றப்பட்ட சிவிலின் Fans பற்றிய அறிக்கை பாராதீனப்படுத்தும் குழுவினால் பணிப்பாளருக்கு கூறுவிலையில் விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்து 2017 ஜனவரி மூன்றாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரதியொன்று பாராதீனப்படுத்தல் குழுவின் தலைவரான பாராமரிப்பு பொருயியலாளரிடம் இல்லாதிருந்தமையின் காரணமாக , கணக்காய்வு அலுவலரிடம் வழங்க முடியாதிருந்தது. ஆனால் அந்த அறிக்கையை பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என கணக்காய்வு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.<br>2016 டிசம்பர் 14 ஆம் திகதி அகற்றப்பட்ட துருப்பிடித்து அரித்துப்போயிருந்த இரும்பிலான நீர்தாங்கி மற்றும் சிகிச்சைக்கள இலக்கங்கள் 12 மற்றும் 16 உரிய மலசலக்கூடங்களின் மலசல கழிவுகள் செல்லும் குழாய்கள் மற்றும் ஏனைய கழிவுபொருட்கள் செல்லுகின்ற பாராமரிப்பு நடைவடிக்கையின் போது கழற்றி அகற்றப்பட்ட துருப்பிடித்து அரித்துக் காணப்பட்ட குழாய்களை வைத்தியசாலை வளாகத்திற்குள் அடுக்கி வைத்திருப்பதன் காரணமாக அவற்றில் மழைநீர் தேங்கி டெங்கு நுளம்புகள் பெருகக்கூடும் என அறிவிக்கப்பட்டிருந்தது. புறக்கோட்டை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பூச்சிகள் தொடர்பிலான அதிகாரி உடன் குழுவொன்று வருகைதந்து வைத்தியசாலை வளாகத்திற்குள் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள் சோதனையிடப்பட்டன. அதன் போது வைத்தியசாலை மலசலக்கூடங்களில் இருந்து அகற்றப்பட்டிருந்த இந்த பொருட்களில் நீர் தேங்கியிருக்கும் என அவதானிக்கப்பட்டது. அவர்களால் இந்த பொருட்களை இயலுமான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விரைவில் வைத்தியசாலை வளாகத்தில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இந்த பொருட்களை இயலுமான விரைவில் அகற்றுவதற்கு அவசியமாக காணப்பட்டது. அதேபோல், சிகிச்சைக்களங்களில் காணப்படும் வரையறைக்கப்பட்ட களஞ்சியங்களில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சிவிலின் Fans மற்றும் ஏனைய பொருட்களை சேர்த்து வைத்திருத்தலானது பாரிய அளவில் நடைமுறைச் சிக்கல்களை உருக்கியிருந்தது. அதன் காரணமாக சிகிச்சைக் களங்களில் அன்றாட செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கு பாரியளவில் இடையூறாகக் காணப்பட்டது. இதன் காரணமாக சிகிச்சைக் கள இலக்கங்கள் 06,12 மற்றும் 17களில் உள்ள Fans மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய பொருட்களையும் அகற்றிச் செல்வதற்காக வைத்தியசாலை பணியாளர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>இங்கு கழற்றி அகற்றப்பட்ட 50 சிவிலின் Fansகளும் ரூ.15,000/- பணத் தொகையும் மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டு செல்வதற்காக ரூ.5,000/- மும், மொத்தமாக ரூ. 20,000/- வைத்தியசாலைக்கு செலுத்தப்பட்டுள்ளது.<br>ஆகையால், அவசர தேவைப்பாடாகக் கருதி இந்த பொருட்களை வைத்தியசாலை வளாகத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்போது வைத்தியசாலைக்கு பணரீதியான நட்டம் ஏற்படவில்லை எனவும் வைத்தியசாலைக்கு சாதகமான நிலைமை மற்றும் டெங்கு நுளம்பு பெருகுதலை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை போலவே வைத்தியசாலையை சரியான முறையில் நடத்திச் செல்லக் கூடியதாய் இருந்தது.<br>இதன் பின்னர் இத்தகைய பொருட்களை வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றும் போது முறையான செயன்முறையின் கீழ் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (இ) | 2007 மார்ச் 09 ஆந் திகதிய 133 ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2008 டிசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பன . | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய அதி கூடிய இடர்க கடன் ரூபா 250,000 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது 135 ஊழியர்களுக்கு அவ்வரம்பிற்கு அதிகமாக ரூபா 259,660 தொடக்கம் ரூபா 384,639 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட கடன்களது கூட்டுத் தொகை ரூபா 7,155,924 ஆகும். அவ்வாறே, 2017 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த 09 மாதங்களின்போது மேலும் 105 ஊழிர்களுக்கு ரூபா 258,114 முதல் ரூபா 399,346 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதி கூடிய கடனுக்குரிய வரம்பை அதிகரித்திருந்த தொகை ரூபா 6,758,503 ஆகவுமிருந்தது. | வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பணியாளர் இடர் கடன் செலுத்தப்பட்டதுடன் முதலில் 18 மாதகால கடனாகப் பெற்றுக் கொடுத்ததுடன் பின்னர் 10 மாதங்கள் வரை பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கேற்ப குறைக்கப்பட்டிருந்தது. பத்து மாதக் கடனைப் பெற்றுக் கொடுக்கும் போது நீண்டதொரு ஆவணத்தை பேணிச் செல்ல வேண்டி ஏற்பட்டதுடன் பணியாளர் ஒருவருக்கு கடன் எடுக்க நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டி ஏற்பட்டது. ஆகையால் பணிப்பாளர் சபையினால் பத்து மாத இடர் கடன் தொடர்பில் உயர்ந்தபட்ச வரையறையொன்று போடப்பட்டிருக்கிறது. அது ரூ. 250,000.00 ஆகும். எவ்வாறிருப்பினும் பணியாளரொருவரின் கடனைக் கணக்குப் பார்க்கும் போது பத்துமாத சம்பளத்தைக் கருத்தில் கொண்டு முன்னர் காணப்பட்ட கடன் மீதியை அதிலிருந்து குறைத்துக் கொண்டு அதிகபட்சமாக ரூ. 250,000/-வை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது 30/2008 இலக்கமுடைய அரச நிர்வாக சுற்றுநிருபத்திற்கேற்ப அமைந்திராமை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். எவ்வாறிருப்பினும் நிறுவனத்தின் பணியாளர்களுக்கு வேறு கடன் மூலாதாரங்கள் இல்லாமையினால் அவர்களை திருப்திகரமாக சேவையில் அமர்த்துவதற்கு அவசியம் என்பதால் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.<br>எவ்வாறாயினும் இதை திருத்தப்படல் வேண்டியது அவசியம் என ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ச) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை, 2015 யூன் 26 ஆந் திகதிய 18/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 13 ஆந் திகதிய 18/2015 (i) ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை. | அரசாங்க சேவையில் உள்ள நிறைவேற்றுதர உத்தியோகத்தர்களுக்கு விசேட படி வழங்கப்பட்டிருந்தபோதும், அந்தப் படியை கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு ஏற்புடையதாகச் செய்யும் சம்பள மற்றும் ஊழியர் நிர்ணைய ஆணைக்குழுவினது சிபார்சும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரமும் பெறப்படாது அவ் விசேட படி வைத்தியசாலையின் 8 நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 யூலை 01 முதல் 2016 டிசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியின்போது அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா 616,500 ஆகும். | 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கம் கொண்ட விசேட பாராளமன்ற சட்டம் ஒன்றின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த சபையை முழுமையாக அரச அனுசரனை வழங்கும் அரசு உடமையில் இருக்கும் ஒரேயொரு வருமானம் பெறும் வைத்தியசாலையாகும். இந்த நிறுவனத்தை ஆரம்பிக்கும் போது மொத்த பராமரிப்பும் அரசாங்கத்தினால் ஏற்கப்பட்டதுடன் பெயரளவில் ரூ. 10 பணத்தொகை மட்டுமே நோயாளி ஒருவரிடம் இருந்து அறவிடப்பட்டிருந்தது. அதேபோல் இந்த நிறுவனத்திற்கு அலுவலர்களை ஆட்சேர்க்கும் போது அரச சேவையின் தகமைகளின் அடிப்படையில் அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதமாக அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் வரப்பிரசாதங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனத்தை ஆரம்பித்த நாள் முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கேற்ப நிறுவனத்தை நிர்வாகிப்பதற்கான தாபன விதிக்கோவையையும் நிதி ஒழுங்கு விதிகளையும் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்தும் போது அரச பணியாளர்களுக்கு உரியதான அரச நிர்வாக சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனத்தை ஆரம்பித்த நாள் முதல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளை அடிப்படையாக கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் சகல சந்தர்ப்பங்களிலும் பணியாளர்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பது அரச நிர்வாக சுற்றறிக்கைகளைக் கொண்டே ஆகும். இந்த முறையில் அரச நிர்வாக சுற்றுநிருபங்களின் மீது ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை பெயர் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் அந்த சுற்றுநிருபங்களை பணிப்பாளர் சபைக்கு அவதானத்திற்கு கொண்டு வந்ததன் பின்னர் (பணிப்பாளர் சபையில் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருவரும் இருக்கின்றார்) அதன் அனுமதியின்படி உரிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதற்கேற்ப இந்த நிறுவனத்தின் சகல பணியாளர்கள் சம்பந்தமாக சம்பளங்கள் மற்றும் ஏனைய எந்தவொரு கொடுப்பனவு தொடர்பிலான தீர்மானங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இது வரை அரச நிர்வாக சுற்றுநிருபங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் வகைப்படுத்தலின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைகள் சபை உள்ளடங்கவில்லை. (முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபங்கள் இலக்கம் 30 மற்றும் 02/2016) அதற்கு காரணம் பணியாளர்களுக்கான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும் போது நாங்கள் அரச நிர்வாக சுற்றுநிருபங்களை அடிப்படையாக கொண்டு உரிய தீர்மானங்களை எடுப்பதை அந்த திணைக்களமும் அறிந்த விடயமாகும். அதனால் மற்றும் ஏனைய அலுவலர்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு சமமான தீர்மானம் என்பதால் இந்த கொடுப்பனவுகளை செலுத்தும் தீர்மானம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டுள்ளது.<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2009 மே மாதம் 26 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருக்கும் 39 ஆம் இலக்கத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருப்பது பணிப்பாளர் சபையின் ஊடாக தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவே தவிர அரச நிர்வாக சுற்றறிக்கை மூலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளை ஏற்புடையதாக்கி கொள்ளலாகாது என அதில் குறிப்பிடப்படவில்லை. அதே போல் பாராளமன்றத்தினூடாக நாளாந்த அடிப்படை மீது பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலைகள் சட்டத்தின் நடைமுறைகளுக்கு மற்றும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல் தொடர்பில் அமைச்சரவை அனுமதியுடன் (பணிப்பாளர் சபையில் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தி கட்டாயமாக ஒருவர் இருக்கிறார்) அரச |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சேவைக்குரிய நிறுவனங்களில் சமமான பதவிகளை வகிக்கும் அலுவலர்களுக்கு இந்த கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டிருப்பதனால் மற்றும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பது அரச நிர்வாக சிற்றறிக்கைகளை அடிப்படையாக கொண்டே என்பதனால் சரியான அதிகார பலத்தைப் பெற்றுக் கொண்டு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை கருணையுடன் அறியத்தருகிறேன். |
| | (உ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின்போது ரூபா5,166,900 புத்தகப் பெறுமதியுடைய 04 வாகனங்கள் ரூபா5,267,060க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும், அந்த 04 வாகனங்களும் கைதவிர்ப்புக்குப் பொருத்தமானவை என இயந்திரப்பொறியியலாளர்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருடனான 03 உத்தியோகத்தரடங்கிய விசேட கொள்வனவுச் சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், சுற்றிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மொட்டார் வாகனப் பரிசோதகர் மற்றும் தொழில்நுட்ப/ இயந்திரவியல் உத்தியோகத்தரை உள்ளடக்கிய குழு ஒன்றினால் அவ்வாகனங்களது அதி குறைந்த விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும், இந்த 04 வாகனங்களும் கூறு வலைகள் கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை சுற்றறிக்கையின் 10 ஆந் பந்தியின் பிரகாரம் திரட்டு நிதியில் செலவு வைக்கப்படவுமில்லை. மேலும், வாகன விற்பனை விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படவுமில்லை. | குறிப்பிடப்பட்டு இருக்கின்ற வாகனங்கள் வைத்தியசாலையின் பொதுப் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன். அந்த வாகனங்களை அடிக்கடி மேற்கொள்ளப்படும் திருத்து வேலைகள் மற்றும் அதற்காக செலவிடப்படும் செலவினங்களை கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க வைத்தியசாலைக்கு இரண்டு வேன்கள் மற்றும் கார் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. அதற்கேற்ப பழைய வாகனங்களுக்கு விலைமனுக்களைக் கோரி அவற்றை விற்பனை செய்வதற்கு மற்றும் அந்த பணத்தின் மூலம் வைத்தியசாலைக்கு தேவையான ஏனைய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அடிக்கடி பழுதுபார்த்தலை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக மற்றும் அதற்காக புதிய வாகனங்கள் கிடைக்கப்பெற்றமையினாலும் பழைய வாகனங்களை இவ்வாறு வைத்தியசாலையில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் இது ஒரு பொருட்கள் பாராதீனப்படுத்தல்லல்ல பொருளாதார சாதகமின்மை காரணமாக விலைமனுக்கள் கோரி வாகனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கேற்ப அத்தகையதொரு சபையினால் வாகனங்களை இனம்கண்டு கொள்ளும் தேவைப்பாடு ஒன்று தோன்றியிருக்கவில்லை.<br>விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கான மதிப்பீடு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து பிரிவு நடவடிக்கைகள் எடுத்த போதிலும் அதில் எழுத்து மூலமாக அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் போது தொழிநுட்ப ரீதியில் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாததுடன் அதிக விலை கோறுனருக்கு வாகனங்களை விற்பனை செய்வதற்கு உரிய குழு பரிந்துரை செய்திருக்கின்றது.<br>வைத்தியசாலை பாவனைக்கு புதிய வாகனங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றமையால் இந்த வாகனங்களுக்கான டென்டர் நடைமுறைகளை பின்பற்றி உயர்ந்த விலைக்கு விற்பனை செய்ய வைத்தியசாலையினால் இயலுமை இருக்கின்றது. அதற்கேற்ப இதன் மூலம் வைத்தியசாலைக்கு நட்டம் ஏற்பட்டு இருக்கவில்லை<br>ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் எந்தவொரு வருமானமும் இணைந்த நிதியத்தில் வைப்பு செய்யப்படாததுடன் உரிய சட்டத்திற்கேற்ப அதனை வைத்தியசாலையின் வருமானமாக கருதி வைத்தியசாலைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| 3. | நிதிசார் மீளாய்வு | | | |
| 3.1 | நிதிப் பெறுபேறுகள் | | | |
| | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் பற்றாக்குறை ரூபா 175,818,974 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 176,799,209 அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டினது வைத்தியசாலைச் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 636,319,584 அதிகரித்திருந்தது. எனினும், ஆண்டினது வருமானமும் ரூபா 818,636,117 அதிகரித்திருப்பானது மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.<br>மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யின், 2012 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையும் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையும் ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுமிருந்தது. | | | |

| | | | |
|---|---|---|---|
| | | எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2012 முதல் 2014 வரை சபையின் பங்களிப்பு ரூபா 716,896,615 முதல் ரூபா 1,739,662,005 வரை தொடர் குறைவடைந்திருந்தது. எனினும், மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 1,305,091,352 வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 354,949,317 அதிகரிப்புமாகும். | |
| 4. | | செயற்பாட்டு மீளாய்வு | |
| 4.1 | | <u>செயலாற்றல்</u><br>உயர் தார்மீக ரீதியாகவும் நியமங்களுடனும் சிறப்பானதும் பாதுகாப்பானதுமான நோயாளிகளைப் பராமரிக்கும் சேவையை வழங்குதலே வைத்தியசாலையின் தொலை நோக்காவதுடன், அதனை ஈடேற்றுவதற்கெனத் தயாரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான செயல நடடிக்கைத் திட்டம், பொருட்கொள்வனவுத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு. | |
| | (அ) | 2016 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செய்தித் திரட்டின் (Bulletin) பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலையின் ஒட்டு மொழித்தக் கட்டில பாவனை 63.4 சதவீதம் முதல் 68.8 சதவீதம் வரை அதிகரித்திருந்தபோதும், தற்போதுள்ள 24 வார்ட்டுகளில் 8 வார்ட்டுகளில் உள்ள கட்டில்களது பாவனை 48.5 சதவீதம் தொடக்கம் 4.8 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த எண்ணிக்கை தரவு அறிக்கைக்கு ஏற்ப மகப்பேற்று சிகிச்சைக்கள இலக்கம் 02 மற்றும் சிகிச்சைக்கள இலக்கம் 09 இலும் வைத்திய சிகிச்சைக்களமான சிகிச்சைக்கள இலக்கம் 06 உம், எழும்பியல் சிகிச்சைக்களமான சிகிச்சைக்கள இலக்கம் 10 உம் சிறுநீரக பாலியல் நோய்கள் சம்பந்தமான சிகிச்சைக்களமான சிகிச்சைக்கள இலக்கம் 14Aயும், சத்திரசிகிச்சைக்குரிய சிகிச்சைக்களமான சிகிச்சைக்கள இலக்கம் 15 உம் ஆகிய 06 சிகிச்சைக்களங்களில் கட்டில்களின் பாவனை 2015 உடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது.<br>இதற்கேற்ப அந்த கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டிருந்த சிகிச்சைக்களம் 22 அன்றி 24 எனவும் கட்டில்களின் பாவனை குறைந்த சிகிச்சைக்கள எண்ணிக்கை 08 அன்றி 06 எனவும் சீர்செய்யப்படுதல் வேண்டும்.<br>கட்டில்களின் பாவனை குறைந்த சிகிச்சைக்களங்களுள் எழும்பியல் சிகிச்சைக்களமொன்றான சிகிச்சைக்கள இலக்கம் 10 தில் கட்டில் பாவனை 48.93% முதல் 48.87 வரை 2.06% தால் குறைவடைந்து இருக்கிறது.<br>ஆனால் 2016 ஆம் ஆண்டில் புதிதாக எழும்பியல் சிகிச்சைக்களம், சிகிச்சைக்கள இலக்கம் 11A என ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக வைத்தியசாலைக்கு வருகை தருகின்ற எழும்பியல் நோயாளர்கள் அந்த இரண்டு சிகிச்சைக்களங்களுக்கும் பிரிந்து சென்றார்கள். அதற்கேற்ப முறையே 2016 ஆம் ஆண்டில் சிகிச்சைக்கள இலக்கம் 10 தில் மற்றும் 11A யில் கட்டில்கள் பாவனை 46.87 மற்றும் 26.85 ஆகக் காணப்பட்டது. அதற்கேற்ப 2015 ஆம் ஆண்டில் எழும்பியல் நோயாளர்களின் நுழைவு 2040 ஆக காணப்பட்டதுடன் அது 2016 ஆம் ஆண்டாகும் போது 2526 வரை அதிகரித்ததின் ஊடாக உறுதியாகுவது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் எழும்பியல் சிகிச்சைக்களங்களில் கட்டில்கள் பாவனை அதிகரித்துள்ளது என்பதாகும்.<br>சிகிச்சைக்கள இலக்கம் 06 ஆனது வைத்திய சிகிச்சைக்களமொன்றாகும். இதற்கு மேலதிகமாக சிகிச்சைகள இலக்கம் 12 மற்றும் 17 உம் வைத்திய சிகிச்சைக்களங்களாகும். இதற்கேற்ப பொது நோய்களுக்காக வருகை தருகின்ற நோயாளர்கள் 03 சிகிச்சைக் களங்களுக்கு பிரிந்து செல்கின்றார்கள்.<br>2015 ஆம் ஆண்டில் வைத்திய சிகிச்சைக்களங்கள் மூன்றில் கட்டில்கள் பாவனையின் சாதாரண பெறுமதி 107.7% ஆகும் மேலும் 2015 ஆம் ஆண்டில் வைத்திய சிகிச்சைக்களங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 16,557 முதல் 17,440 வரை அதிகரித்துள்ளது.<br>வைத்தியசிகிச்சைக்கள இலக்கம் ஆறில் கட்டில்கள் பாவனை 2.14 % வீழ்ச்சியடைந்திருந்தாலும் வைத்திய சிகிச்சைக்களங்கள் மூன்றில் கட்டில்கள் பாவனை விகிதாசாரத்தின் சாதாரண பெறுமதி 4.1 % அதிகதரித்துள்ளது. அதனால் உறுதியாவது சிகிச்சைக்கள இலக்கம் 06 க்கு வருகை தருகின்ற நோயாளிகள் ஏனைய வைத்திய சிகிச்சைக்களங்கள் இரண்டிற்கு பிரிந்து செல்கிறார்கள் என்பதுடன் அந்த |

| | | | |
|---|---|---|---|
| | | | வேறுபாட்டிற்கான வருடத்தில் காணப்படும் விடுமுறைதினங்கள் பிரிந்து செல்லுதல் காரணமாக<br><br>சிகிச்சைக்கள இலக்கம் 14A மற்றும் 15 என்பன சத்திரசிகிச்சைக் களங்கள் ஆகும். இந்த இரண்டு சிகிச்சைக்களங்களில் 5.8% மற்றும் 5.56% மான கட்டில்களின் பாவனை 2016 ஆம் ஆண்டில் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆனால் சத்திரசிகிச்சைக் களங்கள் நான்கு இருப்பதுடன் அதாவது சிகிச்சைக்கள இலக்கம் 8,14,14A மற்றும் 15 ஆகிய சத்திரசிகிச்சைக் களங்கள் நான்கையும் எடுத்துப்பார்க்கும் போது 2015 ஆம் ஆண்டில் கட்டில்களின் பாவனையின் சாதாரன பெறுமதி 62.4% ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு ஆகும் போது இந்த பெறுமதி 65.7% வரை **3.3%** அதிகரித்துள்ளது.<br>அதற்கேற்ப சிகிச்சைக்கள இலக்கம் 14A மற்றும் 15 ஆகிய சத்திரசிகிச்சைக் களங்களில் கட்டில்களின் பாவனையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் ஒட்டுமொத்த சிகிச்சைக்களங்களில் கட்டில்களின் பாவனை 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் 3.3% அதிகரித்துள்ளது.<br>மகப்பேற்று சிகிச்சைக்கள இலக்கங்கள் 02 மற்றும் 09 ஆகிய கட்டில்களின் பாவனை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் ஒரு வீழ்ச்சி காணப்படுகிறது. |
| | (ஆ) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், Physiotheraphy Service, Pathological Service, Endoscopy Test மற்றும் E.C.GTest என்பவற்றிற்குட்படுத்தப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 141 சதவீம், 19 சதவீதம், 11 சதவீதம், 17 சதவீதம் என அதகரித்திருந்ததுடன் அது நன்மை தரும் போக்குடைந்திருந்தது. | 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் 2016 ஆம் ஆண்டில் ஒரு அபிவிருத்தியைக் காட்டி இருக்கிறது. |
| | (இ) | வைத்தியசாலைக்கென நிதிசார் மற்றும் நிர்வாகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிக்கு 2014 தொடக்கம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் பொருட் கொள்வனவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அதற்கென ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டுமிருந்தது. இந்நிர்மாண வேலை மீளாய்வாண்டின்போது முடிவுற்றிருந்த போதும், 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது. | நிதி மற்றும் நிர்வாக கட்டடத்தின் விலைமனுக்கள் கோரப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் தலைமையில் மற்றும் ஆலோசனை நிறுவனத்தின் ஆலோசனைகளுடன் நிறைவு செய்து 2017.10.04 ஆம் திகதி அன்று கூடிய அமைச்சின் விலைமனுக் கோரல் சபையின் ஊடாக ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்து அது பற்றி எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் ஒருவரினால் கட்டளையை ஒப்படைக்கும் கடிதம் 2017.11.22 ஆம் திகதி இடப்பட்டு 2017.11.28 ஆம் திகதி ஸ்ரீபாலி கன்ஷ்ட்ரக்ஷன் நிறுவனத்திடம் வழங்கியுள்ளதுடன் 2017.12.18 ஆம் திகதி ஒப்பந்த வளாகம் அவர்களிடம் வழங்கப்பட்டது. |
| 4.2 | முகாமைத்துவச் செயற்பாடுள்<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | வைத்தியசாலைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெறும் வைத்திய உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மருந்துப் பொருட்கள், ஏனைய பொருட்கள் என்பவற்றை ஆவணப்படுத்தம் விதி முறைகள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அமுலாக்கப்படாதிருந்தன. வைத்தியசாலையின் 28 பல்வேறு பிரிவுகளிலும் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நன்கொடையாகப் பெறப்பட்ட அவ்வாறான 389 உபகரணங்களது பெறுமதியைக் கணிப்பிட்டு அவற்றை நிலையான சொத்துப் பதிவேடு. பொருட் பதிவேடு மற்றும் கையிருப்புப் பதிவேடு என்பவற்றில் முறைப்படி உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வின் ஊடாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் அநேக பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பொருட்பதிவேட்டு ஆவண புத்தகங்களில் உள்ளடங்கியிருப்பதுடன் இதுவரை வைத்தியசாலையில் செயற்படுத்தப்பட்டு வரும் கனணி முறைமை (HIS) ஊடாக பொருட்கள் கிடைக்கப்பெற்றமைக்கான பத்திரம் (GRN) வழங்கப்படும் போது அந்த நன்கொடை பொருட்களுக்கான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் அந்த நன்கொடைப் பொருட்கள் வருடாந்தக் கணக்குகளில் உள்ளடங்கியிருக்கவில்லை. அறிமுகப்படுத்தப்படுகின்ற விதிமுறைகளுக்கு ஏற்ப எதிர்காலத்தில் இவ்வாறு நன்கொடைகளாக கிடைக்கப்பெற்ற பொருட்கள் மற்றும் உபகரணங்களை வருடாந்தக் கணக்குகளில் உள்ளடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| | (ஆ) | சுகாதாரக் கல்விப் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைப்பதற்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை மற்றும் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுக்கிடையே கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் 2016 மே 09 ஆந் திகதி முடிவடைந்ததன் பின்னர் இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ அபிவருத்தி அமைச்சு அப்பொறுப்பிலிருந்து விலகியிருந்தது. அந்நிறுவனத்தில் கல்வி கற்றவாறிருந்த முதல் இரண்டு தொகுதிகளது கற்கை நெறி முடிவடையும் வரை தொடர்ந்து அதனை நடாத்துவதற்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை அதன் நிர்வாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வைத்தியசாலை செலவிடும் சகல தொகையையும் மாதாந்தம் சுகாதார அமைச்சின் | புரிந்துணர்வு உடன்படிக்கை இரத்தாகியதன் பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர நிர்வாகம் மற்றும் சுகாதார அமைச்சர் அவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் தீர்மானத்திற்கு ஏற்ப 2016 ஆம் ஆண்டில் வைத்தியசாலையினால் செலவு செய்யப்பட்ட ரூ. 3,808,588.38 பெறுமதியான தொகையை சுகாதார அமைச்சினால் மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக ஏற்கனவே கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.<br>2016 ஆம் ஆண்டுக்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை தயாரித்து இதுவரை கணக்காய்வுக்கு |

<table>
<tr><td></td><td></td><td>மூலம் மீளளிப்புச் செய்வதற்குமான அடிப்படையில் சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சரது ஆலோசனைப்படி அது தொடர்ந்து நடாத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந் நிறுவனத்தின் பொருட்டு 2016 டிசெம்பர் 31 வரை வைத்தியசாலை செலவிட்டிருந்த ரூபா 3,808,586 சுகாதார அமைச்சினால் 2017 ஆகஸ்ட் மாதமளவிலும் மீளளிக்கப்படாதிருந்தது.</td><td>சமர்ப்பித்திருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் யூலை வரை தயார் செய்யப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்று விபரங்கள் தற்காலிகமாக தயார் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இணக்கக்கூற்றுக்கள் வங்கி விபரங்களின் மீதியை அடிப்படையாக கொண்டு உள்ளக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட ஒன்று என்பதுடன் சகல வருடங்களிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் முறையான விதத்தில் தயார் செய்யப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.</td></tr>
<tr><td></td><td>(இ)</td><td>ஒவ்வொரு பிரிவுக்குமிடையே வைத்தியசாலை பதவியணியினரை உள்ளக இடமாற்றத்திற்குள்ளாக்கும் குறிப்பிட்டதொரு கொள்கை அல்லது விதிமுறையை இனங்கண்டு அதனை அமுலாக்குவதற்கு 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 10 ஆண்டுகளுக்கு அதிகமாக அல்லது ஒரே பிரிவில் அல்லது ஒரே வேலை நிலையத்தில் பணியாற்றியவாறிருக்கும் பதவியணியினர் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு<br><table><tr><th>வேலைத் தொகிதி</th><th>எண்ணிக்கை</th></tr><tr><td>தாதியர்</td><td>71</td></tr><tr><td>ஓடலிகள்</td><td>115</td></tr><tr><td>முகாமைத்துவ உதவியாளர்</td><td>25</td></tr></table><br>ஒரே துறையில் அல்லது பணியில் மாத்திரம் பெறப்படும் நிபுணத்துவம் காரணமாக, உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வேறு பிரிவுகளில் பணியாற்று இயலாதிருத்தல் இல்லாதிருத்தல் இல்லாதிருத்தல், பதவிக்கேற்ப ஒவ்வொரு பிரிவினதும் பணி தொடர்பாகச் சகல உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பெற வேண்டிய அறிவைப் பெற முடியாது போதல். பதவியணியினரை நிர்வகிக்க இயலாதிருத்தல், ஒட்டுமொத்த உள்ளக நிர்வாக முறைமையும் நலிவடைதல் போன்றன உருவாக இது ஏதுவாகலாம் என அவதானிக்கப்பட்டது.</td><td>இந்த நிறுவனம் ஒரு வைத்தியசாலையாக காணப்படுவதால் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது மனித உயிர்களுடனேயே. அதன் காரணமாக சில அலுவலர்கள் மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்கு தேவையான வைத்தியங்களை மேற்கொள்ளும் விதிமுறைகள் தொடர்பிலான விசேட பயிற்சியைப் பெற்று நீண்ட காலங்களாக சேவை செய்யவதற்காக பயிற்சி பெற்ற அலுவலர்கள் ஆவர். இந்தக் காரணத்தினாலேயே இடம் மாற்றும் விதிமுறையொன்று நிர்வாகத்தினால் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்த போதிலும் சில பயிற்சி பெற்ற அலுவலர்களை இடம் மாற்றம் செய்யும் போது நோயாளர்களுக்கு ஏற்படும் எச்சரிக்கையான நிலைமை சம்பந்தமான கேள்விகள் எழுந்ததினால் சில அலுவலர்களை இடம் மாற்றம் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டதன் காரணமாக அந்த இடம் மாற்றும் விதி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் போனது.<br>ஆனால் அவ்வாறு பயிற்சியில்லாத ஏனைய அலுவலர்களை பிரிவுகளுக்கிடையில் இடம் மாற்றுவதற்காக ஒழுங்கான விதிமுறையொன்றை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.<br>நிறுவனத்தின் கட்டடப்பிரிவு, மின்சார தொழில்நுட்ப பிரிவு தொழில் தகமைகளுடனான அலுவலர்கள் தேவையான பிரிவுகளாகும். பணியாட் தொகுதிக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் போது அந்தந்த பிரிவுகளுக்கு உரிய தொழில் தகமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கி ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அவர்களும் அந்த உரிய பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.<br>உதாரணம் : கட்டடங்கள் / மின்சாரப் பிரிவுகளில் உப களஞ்சியங்கள் பேணப்பட்டு வருவதால் அங்கு கடமையாற்றுவதற்காக அதற்கான அனுபவம் உள்ள அலுவலர்கள் ஆட்சேர்த்து இணைக்கப்பட்டுள்ளனர்.</td></tr>
<tr><td></td><td>(ஈ)</td><td>இருதய நோய் சிகிச்சைக்காக அரசாங்க வைத்தியசாலையிலிருந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் நோயாளிகளின் செலவினப் பட்டியல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையால் வைத்தியப் பிரிவிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்களது விலைப்பட்டியல்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன இது தொடர்பாக சுகாதார, போசனை, தேசிய வைத்திய அமைச்சுடன் 2009 தொடக்கம் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது அரசாங்க வைத்திய சாலைகளிலிருந்து இருதய சிகிச்சைக்காக அனுப்படும் நோயாளிகளுக்கான விதிமுறை மற்றும் அதன் பொருட்டு சுகாதார, போசனை தேசிய வைத்திய அமைச்சினது அங்கீகாரத்தை உறுதி செய்வதற்கான விதி முறை மற்றும் விலைப் பட்டியலைத் தீர்த்து வைப்பது மற்றும் எதிரீடு செய்தல் போன்ற விதி முறைகளை உள்ளடக்கியவாறு இருதரப்பினருக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் அவ்வாறானதொரு உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. இதற்கமைய, முறையான விதிமுறை இல்லாமலேயே நோயாளிகள் இவ்வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைச் செலவினத்திற்குப் புறம்பாக பரிசோதனைக் கட்டணமும் வைத்திசாலையினது செலவுக்கான பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்நோயாளிகள் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலம் அதிகரிப்பதால் செலவுக்கான பட்டியலும் அதிகரித்திருந்தது. எனினும், அவ்வாறான மேலதிகச் செலவை எதிரீடு செய்வதற்கு வைத்தியப் பிரிவின் இணக்கம் பெறப்பட்டிராததுடன, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த வைத்தியசாலைக்</td><td>அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு இருதய சத்திரசிகிச்சைக்காக அனுப்பப்படுவது சுகாதார அமைச்சின் செயலாளர் ஊடாகவே. அந்த விதத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு இருதய சத்திரசிகிச்சைக்காக அனுப்பி வைத்தலானது 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்த ஒன்று என்பதுடன் அது தொடர்பில் அமைச்சின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்படும் குழுக்கூட்டங்களில் இது சம்பந்தமாக அவசியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதுடன் வைத்திய வழங்கள் பிரிவின் கணக்காளர் அவர்களும் அந்த சகல கூட்டங்களிலும் பங்கு பற்றியிருக்கின்றமையால் அந்த குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் கட்டுப்பட்டுள்ளார் என்பது தெளிவான ஒரு விடயம் ஆகும். அதற்கேற்ப வைத்தியசாலையினால் பெற்றுக் கொள்ளப்படும் மருந்துகளின் செலவுகளுக்கு சமமாக வைத்தியசாலையினால் செய்யப்படும் இருதய சத்திரசிகிச்சை செலவினை ஈடு செய்யதல் வைத்திய வழங்கள் பிரிவின் கணக்காளரின் பொறுப்பாகும். சிகிச்சைக்குரிய பரிட்சிப்புக்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | கட்டணமாகிய ரூபா 260,636,619 மீளாய்வாண்டின்போது வைத்திய வழங்கற் பிரிவுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பெறுமதியில் எதிரீடு செய்யப்படுவதற்கு வைத்தியசாலை ஒருதலைப்பட்சமாக நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக வைத்திய வழங்கற் பிரிவு அந்த எதிரீட்டை மேற்கொண்டிருந்தது. | கட்டணங்கள் மற்றும் நோயாளர்கள் தங்கியிருக்கும் நாட்களின் எண்ணிக்கை தொடர்பில் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டதுடன் அதற்குரிய விடயங்களை உள்ளடக்கி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று தற்போதாகும் போது தயார் செய்யப்பட்டு வருகின்றது. |
| | (உ) | கட்டணம் செலுத்தப்படும் வார்ட்டுகளில் உள்ள நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு நோயாளிகளிடமிருந்து தொழில்சார் கட்டணத்தை அறவிட்டு அக் கட்டணத்தில் 99.85 சதவீதத்தைச் சத்திர சிகிச்சையில் பங்குபற்றிய விசேட வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், உதவிப் பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின்போது மாத்திரம் அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்தத் தொழில்சார் கட்டணம் ரூபா 309,427,740 ஆகும். இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. | |
| | (i) | சாதாரண கடமை நேரங்களுக்கு அப்பால் விசேட வைத்தியர்கள் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தபோதும், அறவிடப்படக் கூடிய தொழில்சார் கட்டணம் அல்லது அது கணிப்பிடப்படும் விதம் தொடர்பாகக் குறிப்பிட்டதொரு விதிமுறை முகாமைத்துவத்தால் தயாரிக்கப்படவில்லை. அத்துடன், குறித்த விசேட வைத்தியர் தனது தற்றுணிக்கமைய கட்டணம் அறவிடுவதைத் தீர்மானித்துமிருந்தார். | தொழில் ரீதியான கட்டணங்களின் அறவீடு மற்றும் செலுத்துகை தொடர்பிலான உறுதியான விதிமுறையொன்றை தயார் செய்து 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை சிகிச்சைக் களங்கள் 20 ஆக காணப்படுவதுடன் தொழில் சார் கட்டணங்கள் அறவிடப்படுவது சிகிச்சைக்கள இலக்கம் 3,4,5 ஆகிய சிகிச்சைக்களங்களுக்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களிடம் இருந்தே. இந்த நோயாளர்களில் அதிகமானோர் வைத்தியர்களிடம் தனிப்பட்ட ரீதியில் வைத்திய சேவைகளைப் பெற்று அந்த வைத்தியர்கள் மீது முழுமையான நம்பிக்கை வைத்து வருகின்ற நோயாளர்களாக இருப்பதுடன் அவர்கள் உயர்ந்த தொகையை செலுத்தி தங்களது வைத்திய சேவை நடவடிக்கைகளை மிகவும் விரைவாகவும் அதிக வசதிகளுடன் மேற்கொண்டு வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறுவதற்கு எதிர்பார்க்கின்றவர்கள் ஆவர். வைத்தியர்களால் தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்படும் போது நோயாளரின் சுபாவம், சத்திர சிகிச்சையின் சுபாவம் அவர்களுடைய கால நேரத்தை அடிப்படையாக கொண்டு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.<br><br>எனவே வைத்தியர்களினால் நோயாளர்களிடம் இருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களை தீர்மானிக்கும் போது மேற்படி சகல விடயங்களையும் கருத்தில் கொண்டு வைத்தியரின் சிரேஷ்ட நிலை, அனுபவம், நற்பெயருக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுவதுடன் அந்த தொகைக்கு தேவையற்ற முறையில் ஆதிக்கம் செலுத்த வைத்தியசாலையின் நிர்வாக அதிகார சபைக்கு இயலுமையில்லை. அது தொடர்பில் 32:4.2 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தினூடாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனைய தனியார் வைத்தியசாலைகளுடன் போட்டியாக நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அரசுக்கு கணிசமான அளவு வருமானம் ஒன்று கிடைக்கப் பெறுவதுடன் வைத்தியர்களை வைத்தியசாலையில் தனிப்பட்ட சேவையில் அமர்த்துவதை ஊக்குவிப்பதன் பொருட்டு அவசியமான வசதிகளை செய்து கொடுக்கும் நடவடிக்கைகள் வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | (ii) | விசேட வைத்தியரைத் தவிர சத்திர சிகிச்சைக்குத் தோற்றும் ஏனைய வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் உதவிப் பதவியணியினருக்கும் தொழில்சார் கட்டணத்தை வழங்குதற்கோ அல்லது அதனை அறவிடவோ எதுவித அதிகாரமோ இல்லாதிருக்கையில் 2016 சனவரி 01 முதல் 2017 ஏப்ரல் வரையான காலப்பகுதியின்போது அவர்களுக்குத் தொழில்சார் கட்டணமாக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 77,925,691 ஆகும். | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறுகின்ற சிகிச்சைக் களங்களில் சிகிச்சை பெறும் நோயாளர்களிடம் இருந்து தொழில்சார் கட்டணங்களை அறவிடுதலானது வைத்தியசாலை ஆரம்பத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு நடவடிக்கையாக காணப்பட்டு வருவதுடன் அது அரசாங்கத்தின் அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட ஒன்றாகும். தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்படுவது கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற வேண்டிய சிகிச்சைக் களங்களுக்கு வருகின்ற நோயாளர்களுக்கு பிற்பகல் 4.00 மணிக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகள் மற்றும் சுகாதார சேவைகளுக்கே. சத்திர சிகிச்சைக் கூடத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற தாதியர்கள் மற்றும் ஓடர்லிகளுக்கு சத்திர |

| | | | |
|---|---|---|---|
| | | . | சிகிச்சையில் பங்கு பற்றுதலின் காரணமாக இந்த கட்டணங்களை செலுத்த வேண்டிய பொறுப்பு வைத்திய நிபுணர்களுக்கு வழங்கியிருப்பது 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாகவே. பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள 223:025 இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 3.3(ஆ)) |
| 4.3 | <u>செயற்பாட்டு நடவடிக்கைகள்</u><br>2016 சனவரி 01 முதல் 2016 செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதியின்போது சத்திர சிகிச்சை உப களஞ்சியத்திலிருந்து 8 சத்திர சிகிச்சைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,707,922 மொத்தத் கிரமுடைய மருந்துப் பொருட்களும் சத்திர சிகிச்சைப் பொருட்களும் வைத்தியசாலைக் கட்டனத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, சத்திர சிகிச்சைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டிராத 609 சத்திர சிகிச்சைப் பொருட்களது மொத்தக் கிரயமாகிய ரூபா 238,304 வைத்தியசாலைக் கட்டணமாக நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. | | இந்த மருந்து வகைகள் மற்றும் சத்திர சிகிச்சைக்கு அவசியமான பொருட்களை அவதானிக்கும் போது அதில் அதிகமான அளவு நோயாளர்களுக்கு நேரடியாக விலை பட்டியலில் சேர்க்கப்படாத பொருட்கள் ஆகும். அவை நுகர்வுக்கு உட்படுத்தப்பட்ட பொருட்களாக கருதி கையிருப்பில் இருந்து அகற்றப்பட வேண்டிய பொருட்களாகும் ஏனெனில் அந்த கையிருப்பின் பெறுமதி மறைமுகமாக நோயாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருப்பதனால் ஆகும். அதற்கு ஏற்ப விசாரணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ரூ. 12,953,011.00 இருந்து ரூ. 7,763,424.00 பெறுமதியான பொருட்கள் நேரடியாக விலைப்பட்டியலில் சேர்க்கப்படாத மருந்து வகைகள் மற்றும் சத்திர சிகிச்சைக்கு அவசியமான பொருட்கள் ஆகும். உதாரணமாக ஒவ்வொரு சத்திர சிகிச்சைகளின் சத்திர சிகிச்சை ஆய்வுகூட விலை மதிப்புகளை நிர்ணயிக்கும் போது மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் நேரடியாக விலைப்பட்டியலில் சேர்க்கப்படாத பொருட்களின் (Consumebles) பெறுமதிகளும் உள்ளடங்கியிருக்கின்றன. அதற்கேற்ப இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெறுமதியின் ஊடாக வைத்தியசாலைக்கு நட்டம் ஏற்படவில்லையெனவும் அந்த பணத்தொகை மறைமுகமாக வைத்தியசாலைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூற முடியும்.<br>ஏனைய பொருட்களை விலைப்பட்டியலில் சேர்க்கும் போது குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் உள்ளக நிர்வாக முறைகள் மென்மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதன் மூலமாக இத்தகைய நிலைமைகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன்.<br>முறைமைக்குள் நேரடியாக விலைப்பட்டியலில் சேர்க்கப்படும் மற்றும் விலைப்பட்டியலில் சேர்க்கப்படாத பொருட்களும் உள்ளன. அவற்றில் நேரடியாக விலைப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய ஆனால் விலைப்பட்டியலில் சேர்க்கப்படாத பொருட்களும் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்வதுடன் அத்தகைய பலவீனங்களை இனம் கண்டு 2017 ஆம் ஆண்டில் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதாகும் போது கணனி முறைமையிலான முழுமையான கையிருப்புகளை விநியோகித்தல் மற்றும் விலைப்பட்டியலிடும் செயன்முறைகள் மேற்கொள்வதுடன் அதற்கேற்ப இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் குறைவடையும் |
| 4.4 | <u>பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்</u><br><u>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.</u> | | |
| | (அ) | C இலக்கக் கட்டிடத்தில் உள்ள 22 கழிவறைகளைப் பழுதுபார்ப்பதற்கான மதியுரை மற்றும் நிர்மாணப் பணியைக் கட்டிடத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தபோதும், அதற்கான பொருட் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. அத்திணைக்களம் தயாரித்த பொறியியல் மதிப்பீடு ரூபா 122,771,550 ஆகும், 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வேலையை ஆரம்பிப்பதற்கு முற்பணமாக ரூபா 8,000,000 அத் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 மே 20 ஆந் திகதியளவிலும் நிர்மாணப் பணியில் போதிய செயலாற்றல் இல்லாதிருந்தமையால் அவ்வொப்பந்தத்தை வைத்தியசாலை இரத்துச் செய்திருந்தது. எனினும், கட்டிடத் திணைக்களம் அது வரை மேற்கொண்ட வேலைகளுக்கான விலைப்படியலைப் பெறுவதற்கும் முற்பணமாக வழங்கப்பட்ட தொகையைத் தவிர்த்து வைப்பதற்கும் 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | c இலக்கம் கொண்ட கட்டடத்தில் உள்ள கழிவறைகளின் திருத்தல் பணிகள் தொடர்பிலான ஆலோசனை நிறுவனமாக கட்டடத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதே போல் ஆரம்பத்தில் அவர்களுடைய ஒப்பந்தக் காரர்களினால் நிர்மாணிப்புகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான முற்பண தொகையாக 8 மில்லியன் பணத்தொகை கேட்கப்பட்டிருந்ததுடன் வைத்தியசாலை நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் கட்டடத் திணைக்களத்தின் ஒப்பந்தக் காரர்களுடைய நிர்மானிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக தாமதமாவதன் காரணமாக அவர்களை அதில் இருந்து அகற்றி மீண்டும் விலை மனுக்களைக் கோரி புதியதொரு ஒப்பந்தக்காரர்களுக்கு அந்த வேலை ஒப்படைக்கப்பட்டது.<br>முதலில் கட்டடத் திணைக்களத்துக்கு கொடுக்கப்பட்ட முற்பணத் தொகை தற்போதாகும் போது ஆலோசனைக்காக கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையதாக்கி கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படுவதுடன் தற்போதாகும் போதும் கழிவறை திருத்த வேலைகளின் ஒரு பகுதி நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன் மேலும் ஒரு பகுதி திருத்தப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு பகுதிக்கு விலைமனுக்களை கோர வேண்டியுள்ளது.<br>ஆகையால் பணத் தொகையினால் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணத் தொகையை ஆலோசனை நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.<br>12 மற்றும் 16 ஆகிய சிகிச்சைக்களங்களில் வேலைகள் நிறைவு பெற்றதன் பின்னர் கட்டடத் திணைக்களத்தினால் அதன் இறுதியான அளவைப் படிவங்கள் சரியான முறையில் தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.<br>ஒப்பந்தக்காரர்களுக்கான பணக் கொடுப்பனவு ஆலோசனை நிறுவனத்தின் பரிந்துரைக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் அவர்கள் மதிப்பீட்டு பத்திரங்களின் பரிட்சிப்பு நடவடிக்கைகளை இறுதிக் கட்டமாக செய்வதன் கீழ் விடயங்களை விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்காக On Account Payment ஆக கொடுப்பனவுகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரர்கள் கேட்டிருக்கும் பணத் தொகைக்கு குறைந்த பணத்தொகை ஒன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கட்டடத் திணைக்களத்தின் அலுவலர்கள் குறைபாடு மற்றும் அதிக வேலைப்பழு காணப்படுவதன் காரணாக இந்த பரிந்துரைகள் வழங்கப்பட்டதென அதன் பிரதான பொருயியலாளர் தெரிவித்துள்ளார்.<br>எவ்வாறு இருப்பினும் இறுதி விலைப்பட்டியலுக்கு பரிந்துரை வழங்குதலானது சகல மதிப்பீட்டு படிவங்களை பரிட்சித்ததன் பின்னர் மேற்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. |
| | (ஆ)<br>(i) | இருதய தோய்ப் பிரிவினது நட்டத்தில் Aluminum Sun Shades களைப் பொருத்துவதற்கான பொறியியலாளர்களின் மதிப்பீடு ரூபா 3,286,800 ஆகும். இவ்வொப்பந்தத்தின் போது 52 சதவீதத்திற்கும் குறைவாக ரூபா 1,556,775 உடைய அதி குறைந்த கூறு விலை தொடர்பாக பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.9.11 பிரிவின் பிரகாரம் விரிவான மதிப்பாய்வை மேற்கொள்ளாதும் ஒப்பந்தத்திற்கான வீதத்திற்கான (Rate) பகுப்பாய்வைப் பெறாமலும் மேலதிக செயலாற்றல் பிணை முறையைப் பெறாமலும் ஒப்பந்தக்காரர் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். | 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி நெவில்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கியிருப்பது சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தியே. அதாவது ஒப்பந்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் 3 மீற்றர் நீளமான மாதிரி சன்செட் ஒன்றை தயாரித்து பொருயியலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஒப்பந்தத்தை ஆரம்பிக்க வேண்டும் எனவாகும்.<br>அதற்கு ஏற்ப ஒப்பந்தத்தின் ஆரம்பத் திகதியானது அன்றைய தினமாவதுடன் அதன் பின்னர் செயலாற்று நடவடிக்கைகளின் பிணை முறியை பெற்றுக் கொள்ளுதல் உடன்படிக்கைக்கு உட்படுத்தப்படக் கூடியதாக இருக்கும்.<br>ஒப்பந்தக்காரர்கள் அந்த சந்தர்ப்பத்திற்கு வந்திராமையின் காரணமாக செயலாற்று நடவடிக்கைகளின் பிணை முறியை பெற்றுக் கொள்ள இயலாமல் போனது.<br>அப்போது இந்த விடயத்திற்கு பொறுப்பாக இருந்த சுகாதார முகாமைத்துவ உதவியாளர் வேறொரு விடயப் பொறுப்புக்கு மாற்றம் பெற்று சென்றிருப்பதனால் புதிய சுகாதார முகாமைத்துவ உவியாளர் ஒருவர் இந்த விடயத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார் அவருக்கு இது தொடர்பில் அறிவூட்டப்பட்டிராததன் காரணமாக டென்டர் வைப்புத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை ஏற்பட்ட தவறாக சுட்டிக்காட்ட முடியும். |
| | (ii) | இரண்டாவது அதி குறைந்த கூறு விலையாகிய ரூபா 3,278,550 ஆகும். இதனைச் சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கு ஒப்பந்தத்தை வழங்கக் கூடியதான வாய்ப்பு இருந்த போதும் மீண்டும் கூறு விலைகளைக் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டு அதிகுறைந்த விலையான ரூபா 3,385,800 ஐச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை வழங்கியமையால் விலை ரூபா 107,250 ஆக அதிகரித்திருந்தது. | இதன் போது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | இ | வைத்தியசாலையின் விவாகமாகாத வைத்தியர்களது உத்தியோகபூர்வ மனைகளது அறைகளுக்கு மைபூசி குளியலறையையும் கூரையில் உள்ள சீலிங்கிற்கும் பழுதுபார்த்தல் வேலைகளை மேற்கொள்வதற்கான ரூபா 4,002,270 பெறுமதியுடைய ஒப்ந்தம், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியின் 5 சதவீத மற்றும் செயலாற்றல் பிணை முறி என்பன பெறப்படாது வழங்கப்பட்டிருந்தது. கூறு விலைக் கோரலுக்கான 12 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் 2015 டிசெம்பர் 20 ஆந் திகதியளவில் ஒப்பந்தத்திற்கான வேலை முடிவடைந்து ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், 2016 மே 23 ஆந் திகதி வேலை நிறைவேறி தாமதக் கட்டணம் அறவிடப்படாது மொத்தத் தொகையும் வழங்கப்படிருந்தது. | டெண்டர் நிபந்தனை இலக்கம் 15க்கு அமைவாக ஏல விற்பனையாளர்களினால் 5% பெறுமதியுடன் கூடிய செயலாற்று நடவடிக்கை பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் வைத்தியர்கள் தங்கியிருக்கும் போது 50 அறைகளை திருத்தும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் நடைமுறை சாத்தியமான விடயங்களின் அடிப்படையில் அதனை நிறைவு செய்யும் கால எல்லை தொடர்பில் ஒப்பந்தக்காரர்களாலும் உறுதியான தினமொன்றை பெற்றுத்தர முடியாமல் போனது.<br><br>ஆகையால் அவரால் பணிப்பாளருக்கு கடிதம் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒன்றை சமர்ப்பித்து நடைமுறை நிலைமையை தெளிவுபடுத்தியதன் பின்னர் பணிப்பாளரின் அனுமதியுடன் அவர் செயலாற்று நடவடிக்கை பிணை முறியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.<br><br>இது டென்டர் நிபந்தனை மீறல் அல்ல நடைமுறை ரீதியாக ஏற்பட்ட ஒரு நிலவையின் மீது எடுக்கப்பட்ட ஒரு தீர்மானம் ஆகும். (இணைப்பு 3.5(உ)II) இந்த ஒப்பந்தம் காணப்பட்ட கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தமானது ஏற்கனவே இருந்த கட்டடம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலை நடவடிக்கையொன்றாகும். இத்தகைய திருத்த வேலைகளை மேற்கொள்ளும் போது ஆரம்பத்தில் இனம் கண்டிராத சிக்கல்கள் தோன்றலாம் என்பதனால் அந்த சிக்கல்களையும் நிவர்த்தி செய்து கொண்டு திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் சில டென்டர் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்வதானது நடைமுறைக்கு சாத்தியமற்றதொன்றாகும்.<br><br>2015.10.03 ஆம் திகதி ஒப்பந்தக் கடிதம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவரால் அது ஒக்டோபர் 12 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் ஒக்டோபர் 19 ஆம் திகதி அவர் ஒப்பந்தத்தை ஏற்க கொண்டார் என குறிப்பிட்டு கடிதத்தை வழங்கியிருந்தார்.<br><br>அதற்கேற்ப 20 ஆம் திகதி ஒப்பந்தத்தை நிறைவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதனை அன்றைய தினத்தில் நிறைவு செய்ய இயலாமல் போனது காணப்பட்ட நடைமுறை ரீதியான ஒரு நிலைமைக்கு ஏற்பவே. அதாவது வைத்தியர்கள் தங்கியிருந்த போது திருத்த வேலைகளுக்காக அவர்களுக்கு அறைகளைப் பெற்றுக் கொடுப்பது கடினமாக இருந்தமையே<br><br>மேலும் பெற்றுக் கொள்ளப்பட்ட அறைகளை திருத்த வேண்டி இருப்பது சிற்சில வரையறைகளின் கீழேயே.(ஏனைய அறைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில்) அத்தகைய நிலையில் தாமதங்கள் ஏற்படக் கூடும் என அது வேலைகளை தட்டிக்கழிப்பதாக அமையாது. அத்தகைய நிலைமையில் தாமதத்திற்கான கட்டணங்களை அறவிட முடியாது. |
| | (ச) | பழைய கட்டிடத்தில் உள்ள 2 Hitachi குளிரூட்டி இயந்திர பழுதுபார்த்தலுக்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,250,000 ஆகும். இதற்கான பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையில் ஈடுபடாது 2015 செப்டெம்பர் 28 ஆந் திகதியன்று பழுதுபார்த்தல் வேலை தனியார் நிறுவனம் ஒன்றியம் ஒப்படைக்கப்படிருந்தது. | விலைமனுக் கோரல் தொடர்பிலான வழிகாட்டி கோவையின் 8.9.1 க்கு அமைவாக திருத்த வேலைக்காக அந்த நிறுவனத்தின் விலைமனுவை ஏற்க் கொள்ளப்பட்டதென என்பதை குறிப்பிட்டு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதுடன் ஒப்பந்த உடன்படிக்கைக்கு முன்வர வேண்டுமென 8.9.1 இல் குறிப்பிடப்படவில்லை. |
| | (உ) | பொருட்கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குப் திட்டமிடப்பட்ட செயலமர்வுகள் (Work shop), கட்டிட நிர்மாண வேலைகள் என்பவற்றிக்குத் தேவையான ரூபா 80 மில்லியனுக்கான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், பொருட் கொள்வனவு நடவடிக்கைகளது தாமதம் காரணமாக ஒப்பந்தத்தை வழங்கப்படுத்துவது ஆவது 2016 நவெம்பர் 09 வரை தாமதமாகியிருந்ததுடன் அத் தினத்தன்று ரூபா 96.5 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான கடிதத்தின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் 2017 சனவரி 30 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஏப்ரல் 29 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 செப்டெம்பர் 13 ஆந் திகதியளவிலும் நிதிசார் மற்றும் உருப்படிச் செயலாற்றல் என்பன முறையே ரூபா 27,131,481 மற்றும் 10 முதல் 12 சதவீதம் வரையினதாக இருந்தது. | விலைமனுக் கோரல் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் 2016 நவம்பர் 09 ஆம் திகதி வேலைத்தள கட்டடத்தில் ஒப்பந்தம் இலக்ரோ மெட்டல் ப்ரசிங் நிறுவனத்திற்கு (Electro Metal Pressing (Pvt) Ltd) ஒப்படைக்கப்பட்டது. தற்போதாகும் போது முற்பணத் தொகை வழங்கப்பட்டிருப்பதுடன் நிர்மானிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதாகும் போது நிலம் கொங்கிறிட் இடப்பட்டுள்ளதுடன் தூண்களின் சில பகுதிகள் உயரத்திற்கு கட்டப்பட்டுள்ளது. இதன் நிர்மானிப்புகளில் சில தாமதங்கள் ஏற்பட்டிருப்பதுடன் அது பற்றி குறிப்பிட்டு ஒப்பந்த நிறுவனத்திற்கும் மற்றும் ஆலோசனை நிறுவனத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | (ஊ) | பொருட் கொள்வனவுத் திட்டத்திற்கமைய 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட ஆண்டு தாதியர்களுக்கான விடுதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான ரூபா 100 மில்லியனுக்கான நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பொருட் கொள்வனவுச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு 2016 செப்டெம்பர் ட09 வரை தாமதமாகியதுடன், 2017 பெபரவரி 16 ஆந் திகதியன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2017 ஒக்டோபர் 31 வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்தது. மேலும், வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம் (Mobilization Advanced) ஆக ரூபா 12,945,941 வழங்கப்பட்டிருந்தது. இந் நிர்மாணப்பணி 2018 யூன் 27 திகதியளவில் நிறைவடைய வேண்டிய போதும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கட்டிடத்திற்கான அத்திவாரமேனும் நிறைவேறாதிருந்தது. | விலைமனுக் கோரல் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஆண் தாதியர்களுக்கான தங்குமிடத்தின் ஒப்பந்தத்தை (Electro Mental Presing (Pvt)Ltd) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் அது 455 தினங்களுக்குள் நிறைவு செய்ய வேண்டியதொன்றாகும். ஏற்கனவே அதில் ஒரு பக்கத்தின் மேல் பகுதிக்கான அத்திவாரமிடல் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன் கீழ் பகுதியில் முதலில் மதிலை நிர்மானித்ததன் பின்னர் மண் நிரப்பப்பட வேண்டி இருப்பதனால் அதன் பின்னர் அந்தப் பகுதியில் அத்திவாரத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்படும் என ஆலோசனை நிறுவனம் தெரிவித்தது.<br>இதில் நிர்மானிப்பு நடவடிக்கைகளில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதென நாம் ஒப்பந்த நிறுவனத்திற்கு மற்றும் ஆலோசனை நிறுவனத்திற்கு கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளோம். |
| 4.5 | <u>இனங்காணப்பட்ட இழப்புகள்</u><br><u>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.</u> | | |
| | (அ) | 2012 ஆம் ஆண்டில் ரூபா 4,118,100 செலவில் நரம்பு சத்திரசிகிச்சைக் கூறுக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட 159 சத்திரசிகிச்சைப் பொருட்கள் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று காலாவதியாகியமையால் மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புக்குள்ளானது. முன்னைய ஆண்டுகளது பொருள் நுகர்வுப் போக்கை முறையாக ஆய்வு செய்யலாமலும் தேவையை இனங்காணாமலும் இப் பொருட்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பரீசிலனைகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் போது பொது முயற்சிகளுக்கான கணக்குக் குழு பணிப்பு விடுவித்திருந்த போதும் அவ்வாறான பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பில் விசேட வைத்திய நிபுணர்களிடம் விசாரணை செய்திருப்பதுடன் அது சம்பந்தமாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.(இணைப்பு 3.6(அ)) |
| | (ஆ) | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 களஞ்சியங்கள், 9 வார்ட்டுகள், வைத்தியசாலையின் ஏனைய 4 பிரிவுகள் என்பவற்றில் காலாவதியாகியிருந்த மருந்துப் பெறுமானமும் சத்திர சிகிச்சைப் பொருட் கையிருப்புகளதும் மொத்தக் கிரயம் ரூபா 449,294 ஆகும். 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் அவற்றை முறையாக அழித்து, புத்தகங்களிலிருந்து பதிவுகளை நீக்கியிருக்கவில்லை. | 2016.10.04 ஆம் திகதி வரை காலாவதியான பொருட்களை நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட பாராதீனப்படுத்தல் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாராதீனப்படுத்தல் சபையால் அந்த பொருட்கள் பாராதீனப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான பாராதீனப்படுத்தல் குழுவொன்று இதுவரை நியமிக்கப்பட்டிராததால் பாராதீனப்படுத்துவதற்கு இயலாமல் உள்ளது. தாமதம் இன்றி பாராதீனப்படுத்தல் குழுவொன்றை நியமித்து அந்த பொருட்களை பாராதீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.<br><br>மேலும் அரசாங்க மருந்துக் களஞ்சியங்களில் இருந்து (M.S.D) கொண்டு வரப்படும் சில மருந்துகளின் தரம் தொடர்பிலான சிக்கல்களினால் அனுப்பப்படுகின்ற சுற்று நிருபங்களுக்கு அமைவாக அவை பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. பொதுவாக அவர்களுக்கு பாராதீனப்படுத்துவதற்கு காணப்படும் பொருட்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கும் போது அவை அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் ஆகவே அவற்றை எமது வைத்தியசாலையினால் நியமிக்கப்படும் பாராதீனப்படுத்தல் சபைக்கு பாரம் கொடுத்தல் இயலாது. இதன் காரணமாக உரிய களஞ்சியங்களில் எஞ்சியிருக்கின்றன.<br>சகல மருந்துவகைகளையும் மாற்றிக் கொள்வதற்கு இயலாமல் போன போதிலும் இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவசியமான ஆவணங்கள் முன்னர் இணைக்கப்பட்டுள்ளன. அரசாங்க மருந்துக் களஞ்சியங்களில் மற்றும் ஏனைய வைத்தியசாலைகளில் ஒரே தினம் காலாவதியாகும் தினமாக காணப்படும் போது முயற்சிகள் தோல்வியடைந்தன.<br>(இணைப்பு 3.6(ஆ,இ)) |
| | (இ) | தேவைகளைச் சரிவர இனங்காணாது கதிர் இயக்கப் பிரிவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 190 Micro Bar Enema Kit பெக்கட்டுக்கள் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மெதுவாக நகர்ந்தவாறிருந்தன. அதில் 140 பெக்கட்டுக்கள் 2017 யூலை மாதமளவில் காலாவதியாக இருந்தன. 60 பெக்கட்டுக்கள் இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு 2017 மார்ச்சில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் ரூபா 108,000 கிரயமுடைய 40 பெக்கட்டுக்கள் காலாவதியாகி இருந்தன. | இன்றைய தினமாகும் போது இந்தக் கையிருப்பில் 80 பக்கற்றுக்கள் எஞ்சியிருப்பதுடன் அவற்றில் 40 பக்கற்றுக்கள் 2020 ஆண்டில் காலாவதி காலமாக தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக அந்த இரண்டு வருட காலத்தினுள் அந்த 40 பக்கற்றுக்களையும் அதே காலத்தில் பாவிக்க முடியும்.<br>எஞ்சியிருக்கும் 40 பக்கற்றுக்கள் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் காலாவதியாகியுள்ளன. ஏனைய சகல பக்கற்றுக்களும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் ஆகும் போது பாவிக்கப்பட்டுள்ளன. இந்த 40 பக்கற்றுக்குள் இருக்கும் பேரியம் பவுடர் தவிர்ந்த ஏனைய பிளாஸ்டிக் பகுதிகள் CT பரிசோதனை ஊசி மூலம் மருந்துகளை செலுத்தும் கண்ணாடி குழலுக்காக பயன்படுத்திக் கொள்ள இயலும். ஆகையால் அந்த 40 பக்கற்றுக்களும் வீணாகிப்போகாமல் இருப்பதுடன் அதனால் பாவிக்கப்படும் பிளாஸ்டிக் பகுதிகள் CTக்கு உபயோகத்துக்கு எடுத்துக் கொள்வதன் மூலம் அந்த நட்டத்தின் அதிக பகுதிகளை தீர்த்துக் கொள்ள இயலும். |

| | | | |
|---|---|---|---|
| 4.6 | <u>பதவியணி நிர்வாகம்</u><br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (அ) | 2016 பெப்ரவரி 10 மற்றும் 2017 யூன் 09 ஆந் ஆகிய இணக்கங்களில் நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டங்களில் வைத்தியசாலையின் பணிப்பாளரது பிரதான கணக்காளரதும் பதவிகளில் நிலவிய வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு சுகாதார, போசனை மற்றும் தேசிய வைத்திய அமைச்சு நேரடித் தலையீட்டுடன் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுவிக்கப்பட்டிருந்த போதும், 2017 டிசெம்பர் 31 வரை பணிப்பாளர் மற்றும் பிரதான கணக்காயிவாளர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டில் இரண்டாம் தரம் அடிப்படையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு வருகைதந்து பிரதான கணக்காளர் பதவியில் சேவையாற்றிய அலுவலர் தற்போதாகும் போது மீண்டும் அரச சேவையில் கடமையைப் பொறுப்பேற்றிருப்பதனால் அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது. ஆகையால் பல சந்தர்ப்பங்களில் அந்தப் பதவிக்கு பொதுச் செய்தி பத்திரிகைகளின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் அத்தகைய எவ்வித சந்தர்ப்பத்திலும் தகைமையுள்ள விண்ணப்பத்தாரிகள் எவரும் முன்வந்திருக்காததன் காரணமாக அந்த பதவியை நிரப்புவதற்கு இயலாமல் போனது. தற்போதாகும் போது பிரதான கணக்காளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.<br>2012.09.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சியாண்மை தொடர்பிலான செயற்குழு கூட்டத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு இரண்டாம் தர அடிப்படையில் அரச சேவையில் உள்ள அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருப்பதை அவதானத்திற்கு கொண்டு வருவதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது வைத்தியசாலையில் பணிப்பாளர் பதவியை வகிக்கும் அலுவலரை அந்த பதவிக்காக சுகாதார அமைச்சின் செயலாளரினால் இரண்டாம் தர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இதுவரை அவருடைய கடமைகளை மிகவும் திருப்திகரமாக மற்றும் உயர்ந்த நிலையில் காணப்படுவதுடன் அது பற்றி வைத்தியசாலையின் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முன்னேற்ற அறிக்கைகள் உறுதி செய்கின்றன. ஆகையால் அந்த பதவியில் வெற்றிடம் ஒன்று இல்லை. |
| | (ஆ) | பிரதிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு அதுவரை வைத்தியசாலையில் பணியாற்றவாறிருந்த பேண் வைத்தியர் ஒருவர் 2013 யூலை 08 தொடக்கம் நியமிக்கப்பட்டிருந்தார். பதவிக்குரிய ஆடசேர்ப்பு நடைமுறைகளுக்கமைய, வைத்திய நிர்வாகத்தில் 7 ஆண்டுகால அனுபவம், ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின்படிப்பு மற்றும் 45 வயதுக்குக் குறைவாக இல்லாது இருத்தல் ஆகிய தொகைகளை அப்பதவி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தர் கொண்டிருக்கவில்லை. மேலும், தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.4.1 அம் பிரிவின் பிரகாரம் குறித்த தகைமைகளைப் பெறுவதற்கான பரீட்சை ஒன்றிலோ அல்லது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி அடையாமை காரணமாக தமக்குரிய நிரந்தர பவிக்கான சம்பள அளவுத்திட்டத்தை அதிகரித்தவாறு சித்தியடையாத அவ்வுத்தியோகத்தரை உயர் பதவியில் பதில் கடமையாற்ற நியமிக்கப்படலாகாது எவ்வாறாயினும், வினைத்திறமைகளால் தடைப்பரீட்சையில் சித்தியடையதாலால் 12 ஆண்டுகளாக சம்பள ஏற்றத்தைப் பெறுவதற்கும் தவறியிருந்த அவருக்கு அப்பதவி வழங்கப்பட்டிருந்தது. மேலும், பிறிதொரு பதில் கடமையாற்றுவதற்கான நியமனத்தைப் பெறுவதற்கான கடிதத்தை முறையாகப் பெற்றிராதிருந்தும் 2013 யூலை 08 முதல் 2017 சனவரி 31 வரையான காலப்பகுதியின் போது பதில் கடமையாற்றுவதற்காக ரூபா 1,827,893 வழங்கப்பட்டிருந்தது. | வைத்தியசாலையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்காக பிரதி பணிப்பாளர் பதவியின் கடமை நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானதாகும். இவ்வாறான நிலைமைகளின் அடிப்படையில் நிறுவனத்தின் நிர்வாக தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு 1983 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க விசேட பாராளமன்ற சட்டத்தின் 07 ஆவது பிரிவின் அதிகாரத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் பிரச்சினைக்கு தீர்வு ஒன்று கிடைக்கும் வரை உள்ளக ்நாரியாலயத்தில் உள்ளே சேவை ஆற்றுகின்ற மிகவும் தகமையுடைய அலுவலர் ஒருவர் அந்த பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார். பணிப்பாளர் சபை, சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைவாக இந்த தீர்மானத்தை எடுத்ததுடன் அது தாபன விதிக்கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 13:5 ஊடாகவும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகையால் இந்த நியமனம் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக மட்டுமே மிகவும் தகமையுடைய நபரை நியமித்திருப்பதுடன் அது தாபன விதிக்கோவையின் நியமங்கள் மற்றும் கட்டளைகளுக்கு பங்கம் விளைவிக்க கூடியதும் அல்ல. மேலும் இந்த நியமனம் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் IX ஆவது அத்தியாயத்தின் 118 முதல் 120 வரையான பிரிவுகளையும் தங்களது அவதானத்திற்கு கொண்டு வருகிறேன். அதன் ஊடாகவும் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானம் ஆனது சரி என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. விண்ணப்பப்படிவங்களை கோரி அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பல சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அதற்கு பிரதான காரணம் நிறுவனத்தின் பிரதான பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அரச துறையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை விட உயர்வான நிலையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | காணப்பட்டமையாகும். ஆகையால் இந்த இரண்டு பதவிகளுக்கும் இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் அலுவலர்களை ஆட்சேர்ப்பது மிகவும் கடினமாகும். ஏனெனில் அரசதுறையில் ஓய்வூதிய சம்பளம் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்களையும் இழந்து இந்த நிறுவனத்தில் நிரந்தர பதவியில் இணைந்து கொள்வதற்கு காட்டும் விருப்பமின்மையாகும்.<br>மேற்படிக் காரணங்கள் அடிப்படையில் பிரதிப்பணிப்பாளர் பதவிக்காக இளைய. சுறுசுறுப்பான ஒரு அலுவலரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு. பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பட்டப்படிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடைமுறையில் அடிப்படைகளை சீர்திருத்தம் செய்வதற்காக 2016.06.16 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><u>முன்னர் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடைப்படைகள்</u><br>தகமைகள் - வைத்திய நிர்வாகம் தொடர்பில் ஏழு வருட அனுபவத்தினுடனான ஆராய்ச்சிப்பட்டப்படிப்பை பெற்ற தகமையுடைய வைத்தியர் ஒருவராக இருத்தல்<br>வயது - 45 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும்<br>சம்பள அளவுத்திட்டம் - தரம் S.L 03<br><br><u>யோசனை செய்யப்பட்டிருந்த அடிப்படைகள்</u><br>தகமைகள் - வைத்திய நிர்வாகம் தொடர்பில் குறைந்தது 03 வருடகால அனுபவத்தினுடனான ஆராய்ச்சிப்பட்டப்படிப்பை பெற்ற தகமையுடைய ஒரு வைத்தியராக இருத்தல்<br>வயது - 40 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும்<br>சம்பள அளவுத்திட்டம் - தரம் S.L 03<br>சிரேஷ்ட முகாமைத்துவ தரத்திற்குரிய பதவியென்பதாலும் மற்றும் இதற்கு முன்னர் வைத்தியசாலையின் மிகவும் சிரேஷ்ட மற்றும் அனுபவமுடைய வைத்திய அதிகாரிகளினால் பிரதிப்பணிப்பாளர் பதவியில் கடமையை நிறைவேற்றியிருக்கின்றதாலும் பிரதிப்பணிப்பாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் தகமைகள் மற்றும் அனுபவங்கள் மாற்றமடையக் கூடாதென 2016.06.16 ஆம் திகதி அப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது. (பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 401.07.07)<br>அதன் பின்னர் 2016.07.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டதீர்மான இலக்கம் 402:02.05 ஊடாக பிரதிப்பணிப்பாளர் பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையை பிரதி வைத்திய நிர்வாகத்தரத்திலான அலுவலர்களுக்கு அமைவாக கருத்தில் கொண்டு 07 வருட அனுபவத்துடன் ஆக குறைந்த வயதெல்லை 45 வயது முதல் 40 வயது வரையாக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>2016.08.18 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்ட இலக்கம் 403:02.03 தீர்மானத்தின்படி வயதெல்லை திருத்தம் செய்யப்பட்ட செய்திப் பத்திரிகை விளம்பரமொன்று 2016.10.30 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன் போது ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதற்கும் ஏழு வருட அனுபவம் இருக்காததன் காரணமாக அது தகமையற்றதாக காணப்பட்டது. அதன்பின்னர் 2016.09.22 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்ட தீர்மான இலக்கம் 404:02.01 ஊடாக பிரதிப் பணிப்பாளர் பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனுபவத்தை 07 வருடத்தில் இருந்து 03 வரை குறைக்கப்பட்டது.<br><br>திருத்தம் செய்யப்பட்ட அடிப்படைகளுக்கு அமைவாக 2016.10.30 ஆம் திகதி செய்திப் பத்திரிகை விளம்பரத்தினூடாக அந்தப் பதவிக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்காக நான்கு விண்ணப்பப்படிவங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | கிடைக்கப்பெற்றதுடன் மூன்று விண்ணப்பங்களுக்கு அவை குறுகிய ஆவணப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அந்த மூவரும் 2016.12.29 ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர்.<br>ஆகையால் இந்த பதவிக்கு பணிப்பாளர் சபையின் ஊடாக முறையான நியமனம் ஒன்றை வழங்கியிருந்ததனால் (இணைப்பு 3.7 (ஆ)III) தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 12:2.5 க்கு அமைவாக சம்பளத்தை செலுத்துவதில் எந்த இடையூறுகளும் எழவில்லை. |
| | (இ) | வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவிக்கு முறையான நியமனக் கடிதத்தைப் பெற்றிராத வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் 2015 மார்ச் 04 தொடக்கம் அப்பதவியை பொறுப்பேற்றிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 வரை வைத்தியசாலையின் சகல முகாமைத்துவ மட்டத் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் பங்கேற்றிருந்தார் முறையான நியமனக் கடிதம் இல்லாதிருந்தும் அது கருத்திற் கொள்ளப்படாது பணிப்பாளர் பதவியின் ஆரம்ப சம்பளம் மற்றும் பதவிக்குரிய ஏனைய சகல படிகளையும் வழங்குவதற்குப் பணிப்பாளர் சகல அங்கீகாரம் வழங்கியிருந்தமையால் மேற்படி காலப்பகுதியின்போது அவ்வுத்தியோகத்தருக்குச் சம்பளமும் படியுமாக மொத்தமாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 5,903,431 ஆகும். பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் வைத்திய நிர்வாகத்தில் 7 ஆண்டு கால அனுபவ மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டபின்படிப்பு போன்ற தகைமைகள் பதவியேற்பின் போது அவருக்குமில்லை. | உரிய அலுவலரை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் பதில் கடமையாற்றும் பணிப்பாளராக அமைச்சினால் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்ட கடிதத்தை எனக்கும் அனுப்பியிருந்ததுடன் அதற்கேற்ப உரிய அலுவலர் வேலையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவருடைய தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பில் பரிட்சித்துப் பார்ப்பதற்கு அந்த சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை சுகாதார அமைச்சின் செயலாளரால் செய்யப்பட்ட நியமனம் தொடர்பில் சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் இல்லாததனால் ஆகும்.<br>வைத்தியர் திரு. கமஹே அவர்கள் ஓய்வு பெறுவதற்காக 2014.12.31 ஆம் திகதி வைத்தியசாலையில் இருந்து விலகிச் சென்றிருந்தமையினால் 2015.01.01 ஆம் திகதி முதல் 2015.03.03 ஆம் திகதி வரை வைத்தியசாலையில் பணிப்பாளர் ஒருவர் இல்லாதிருந்ததுடன் பணிப்பாளர் சபையொன்றும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கால எல்லைக்குள் சகல கடமைகளும் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டது பதில் கடமை புரிந்த பிரதிப் பணிப்பாளரினாலேயே ஆகும். 2015.03.02 ஆம் திகதி கௌரவ சுகாதார அமைச்சரினால் புதிய பணிப்பாளர் சபையொன்று. தலைவரொருவர் மற்றும் இரண்டாம் தர சேவை அடிப்படையில் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தனர். அந்த அலுவலரை பதில் கடமையாற்றும் பணிப்பாளராக நியமிக்குமாறு கௌரவ அமைச்சர் அவர்களினால் சுகாதார செயலாளருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் அடிப்படையில் சுகாதார செயலாளரினால் இரண்டாம் தர சேவையடிப்படையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதற்கேற்ப தாபன விதிக்கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 4.2.1 பிரிவுகளின் பிரகாரம் சரியான நியமன அதிகாரியினால் உரிய அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.<br>அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட சேவை நடைமுறை ஒழுங்குகள் தொடர்பிலான 1589/30 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் IX ஆவது அத்தியாயத்தின் 119 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 'ஏதேனும் ஒரு பதவிக்கு உத்தியோகபூர்வமாக உரித்துடைய கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்களை அந்த பதவியில் பதில் கடமை அல்லது கடமையை நிறைவேற்றுகின்ற அரச அலுவலருக்கு அந்த பதில் கடமை அல்லது கடமையை நிறைவேற்றுகின்ற கால எல்லைக்குள் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும் என்ற பிரிவின் பால் தங்களுடைய அவதானத்தை செலுத்துமாறு அறியத்தருகிறேன்.<br>மேலும் உரிய அலுவலர் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் முழுநேர கடமைகளில் ஈடுபடுகின்றமையினால் அந்த பதவிக்குரிய சகல வரப்பிரசாதங்களையும் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அதற்கேற்ப அந்த அலுவலருக்கு கிடைக்க வேண்டிய சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்களை கொடுப்பதில் சிக்கல்கள் இல்லை. |

| | | |
|---|---|---|
| 5.<br>5.1 | கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்<br>கூட்டிணைந்த திட்டம் | |
| | ஐந்து ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அக் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் திட்டம் தயாரிக்கப்படவில்லையெனவும் பின்வரும் அவதானிப்புகளின் மூலம் உறுதியானது. | |
| | (அ) 2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்கென தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 - 2018 இணைந்த திட்ட போது முயற்சியாண்மை தொடர்பிலான செயற்குழு கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் 2016 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தனியார் நிறுவனங்களின் ஊடாக 10 மாதத்திற்கு மேற்பட்ட காலம் வைத்தியசாலையின் வளங்கள், பலங்கள் மற்றும் பலவீனங்களை அறிந்து ஆய்வு செய்து 2017 முதல் 2020 வரை நடைமுறைக்கு சாத்தியமான இணைந்த திட்டத்தை தயார்செய்து பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றிருப்பதுடன் அது தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. |
| | (ஆ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அமுலாக்கப்பட வேண்டிய, வைத்தியர்களுக்கான போசன சாலையை அமைத்தல், இருதய நோயாளர்களுக்கென உயர் தரத்திலான ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல், மற்றும் குழந்தைகளது அவசர சிகிச்சைப்பிரிவின் முன்னேற்றம் போன்ற பணிகள் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணைந்த திட்டத்திற்கு ஏற்புடையதாக எதிர்காலத்தில் தயார் செய்யப்படும் செயற்திட்டங்களை தயார் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கின்றேன். |
| | (இ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாத மத்திய குளிரூட்டி முறைமையை மீண்டும் அமைத்தல், மின் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல், பயணிகளது மின் தூக்கிகைகள் கொள்வனவு செய்தல் போன்ற பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் நாளதுவரையாக்கப்படாது மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்தன. | இணைந்த திட்டத்திற்கு ஏற்புடையதாக எதிர்காலத்தில் தயார் செய்யப்படும் செயற்பாட்டு நடவடிக்கைகளை தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 5.2 | செயல் நவடிக்கைத் திட்டம்<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன. | |
| | (அ) நோக்குடனான ஒவ்வொரு பணிக்குரிய மதிப்பிடப்பட்ட கிரயம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் உள்ளடக்கப்படவில்லை. | நோக்கங்கள் அடங்கிய மற்றும் மதிப்பீடுகள் செய்யப்பட்ட பெறுமதி 2016 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| | (ஆ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், எதிர்பார்த்த இலக்கு மற்றும் நோக்கம் என்பவற்றை அடைவதற்கான செயல் முன்னேற்றத்துடன் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அதன் பொருட்டுக் செலவிடப்பட்ட தொகையையும் இனங்காணும் விதத்தில் காலாண்டுக் செயல் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து அவற்றின் பிரதிகளை 2003 யூன் 02 ஆந் திகதிய பீசு.:12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 4.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த அமைச்சிற்குப் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் அனுப்பி வைத்திருக்கவில்லை. | செயற்றிட்டத்திற்கு அமைவாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை எட்டிக் கொள்ளும் முன்னேற்றம் மற்றும் அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை தொடர்பில் தவனை அடிப்படையில் விபரங்களை வைத்தியசாலையின் தவனை அடிப்படையிலான செயலாற்று நடவடிக்கைகள் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் இந்த அறிக்கைகளின் பிரதிகள் சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதான உள்ளக கணக்காய்வாளர், திட்டமிடல் பிரிவுக்கு, அரச வியாபார திணைக்களத்துக்கு மற்றும் அரச கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உரிய விடயம் தொடர்பிலான செயற்றிட்டத்தின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை உரிய முழுமையான வருடத்திற்காக தயார் செய்து 2017 பெப்ரவரி மாதம் சுகாதார அமைச்சின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| 6. | முறைமைகளும் கட்டுப்பாடுகளும்<br>கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பொது வைத்தியசாலைச் சபையின் தலைவரது வளாகத்திற்குப் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது. | |

| | | |
|---|---|---|
| (அ) | திலையான சொத்துக் கட்டுப்பாடு (i) சகல நிலையான சொத்துக்களையும் நேரடியாக இனங்கண்டு அவற்றின் பெறுமதியை மதிப்பீட்டு பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>(ii) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை உள்ளடக்கிய கணனி அச்சிடல் பதிவேட்டில் கட்டிடத் திருத்துவதற்கான மீளாய்வாண்டுச் செலவினத் தொகையாகிய ரூபா 39,157,304 சேர்த்துக்கொள்ளப்படாமை. | (i) 2015 ஆண்டுதோறும் நிலையான வைப்புகள் மீது ஆய்வொன்றை நடத்தி வைத்தியசாலையின் நிலையான வைப்புக்களின் நிலைத்திருக்கும் தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கனணி முறைமையை உபயோகப்படுத்தி வைத்தியசாலையின் கையிருப்புகளின் நிர்வாக நடவடிக்கைகள் வினைத்திறனான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.<br>(ii) 39 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் 2016 ஆம் ஆண்டில் தவறுதலாக நிலையான வைப்புகளின் அட்டவணையில் குறிப்பிடப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினும் இந்தப் பெறுமதி 2016 இல் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு அறிக்கையிடுதலானது தட்டிக்கழிக்கப்படவில்லை என குறிப்பிடுகிறேன். |
| (ஆ) | கையிருப்புக் கட்டுப்பாடு — மருந்துப் பொருட்கள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்கள் களஞ்சியம் போன்றே உப களஞ்சியங்களது கையிருப்பும் பதிவேடுகளும் நாளது வரையாக்கப்படும் பேணப்படாததுடன், கையிருப்புப் பெறுவனவு, வழங்கல் மற்றும் கையிருப்பு மீதி என்பவற்றைப் பிழையின்றிக் கணக்கிலிடும் விதிமுறையைக் கனணி முறைமையில் அறிமுகஞ் செய்து வைத்தியசாலையால், வைத்தியசாலையின் 5 பிரிவுகளில் உள்ள 350 சத்திர சிகிச்சை பொருட்களது கிரயம் கணனி முறைமையில் உள்ளடக்காமை, கையிருப்புக்களது நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகளில் புள்ளி விபரங்களைப் பென்சிலால் குறித்துக் கொண்டன மற்றும் அவற்றின் பிழையற்ற தன்மையைச் சான்றுறுதிப்படுத்தாமை, பிரதான களஞ்சியப் பொறுப்பாளர் களஞ்சியப் பொறுப்பாளர் களஞ்சியக் கையிருப்புச் சரி, பிழை அறிக்கைகளில் தமது கையெழுத்திட்டிராமை. | கனணி முறைமையை உபயோகித்து வைத்தியசாலையின் கையிருப்பு நிர்வாக நடவடிக்கைகள் வினைத்திறனாக மற்றும் சரியான நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (இ) | பதவியணி நிர்வாகம் — ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, தரப்படுத்தல் மற்றும் சம்பள அளவுத் திட்டம் போன்றவற்றிற்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அவற்றை அங்கீகரித்துக் கொண்டிருக்காமை. | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயார் செய்து முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் அந்த திணைக்களத்தினால் அது தேசிய சம்பளங்கள் மற்றும் பணியாளர் தொகை மதிப்பு ஆணைக்குழுவிடம் பரிந்துரை ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் — ஒப்பந்த நிர்வாகத்தின் பொருட்டு நிரந்தர கண்காணிப்பும் மேற்பார்வையையும் மேற்கொள்ளப்படாமை. | நிரந்தரமாக பரிட்சிப்பு செய்வதற்கு மற்றும் கண்காணிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து ஒப்பந்த நிர்வாகத்தை மிகவும் சிறந்த வினைத்திறனான மற்றும் சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | பொருட்டு கொள்வனவுக் கட்டுப்பாடு — தேவைகளை இனங்கண்டு கொள்வனவுகளை மேற்கொள்ளாமை, நிபந்தனைப் பிரகாரம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. | கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் குறைபாடுகளை குறைத்துக் கொண்டு மிகவும் சிறந்த மற்றும் வினைத்திறனுடன் கொள்வனவு செய்யும் விதிமுறையொன்றை பின்பற்றி செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஊ) | கனணிக் கணக்கீட்டு முறைமை — நாட்குறிப்பு இலக்கம், குறியீடு, விபரம் என்பவற்றை முறைமையில் பத்திரிகை, இரட்டைக் குறிப்புப் பதிவினது விபரத்தை பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிடாமை. | எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

# 6. எதிர்கால தொலைநோக்கு



# 6.1 நிறுவனத்தின் செயற்றிறன் மேம்பாட்டை அதிகரிக்க எதிர்பாரக்கும் இடைக்கால நடைமுறைகள்

| நோக்கங்கள் | செயற்பாடுகள் |
|---|---|
| 1. வைத்தியசா1.லையினுள் நோயாளிகள், பிரமுகர்கள் மற்றும் பணியாட்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | i தாதிகளுக்காக விடுதி ஒன்றினை நிர்மாணித்தல் (நடைமுறையில் உள்ளது )<br>ii கேட்போர் கூடம் ஒன்றுடன் நிர்வாக மற்றும் நிதி கட்டடம் ஒன்றினை நிர்மாணித்தல் (நடைமுறையில் உள்ளது )<br>iii பராமரிப்பு வேலைத்தலத்திற்காக கட்டடத்தினை நிர்மாணித்தல் (நடைமுறையில் உள்ளது )<br>ivஆண் தாதிகளின் விடுதியினை நிர்மாணித்தல் (நடைமுறையில் உள்ளது )<br>v 6 ஆம் மாடி கொடுப்பனவு வாட்தொகுதியினை நிர்மாணித்தல் (அடிப்படை நடவடிக்கை )<br>viபிரதான கட்டத்தில் காணப்படும் கூரையின் எல்லா இடங்களிலும் சூரிய சக்தி பனலினை பொருத்துதல் (நடைமுறையில் உள்ளது ) |
| 2.விரிவுபடுத்துதல் | i. OT கட்டடத் தொகுதியினைப் பொருத்துதல்<br>ii. புதிய வாகன தரிப்பிட வசதிகள்<br>iii. பிரதான விஞ்ஞான கூடத்தின் நிர்வாகத்தினை விஸ்தரித்தல்<br>iv. CSSD பிரிவினை விஸ்தரித்தல்.<br>V .காணப்படும் சுகாதார வசதிகளின் மறுசீரமைப்பு (நடைமுறையில் உள்ளது )<br>Vi.கொடுப்பனவு வாட்தொகுதிக்காக சூரிய சக்தியில் இயங்கும் சுடு நீர் அமைப்பினை நிர்மாணித்தல்.<br>Vii. வெளிநோயாளர் பிரிவின் , சிகிச்சைப் பிரிவின் அம்சங்களை மறுசீரமைத்தல். |
| 3.காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | i.வைத்தியசாலையின் பிரவேசம் மற்றும் பாதுகாப்பு கரும பீடத்தின் பொது தோற்றத்தினை மேம்படுத்துதல்<br>ii. தீயணைப்பு பாதுகாப்பு மற்றும் அடையாள அமைப்பினை மீண்டும் பொருத்துதல்.<br>iii. எம்ஆர்ஐ ஸ்கனர் கொள்வனவு செய்தல் ( கட்டளை இடப்பட்டுள்ளது) மற்றும் ஏனைய வைத்திய உபகரணங்களை கொள்வனவு செய்தல். |
| 4.மனித வள அபிவிருத்தி | i.வைத்தியசாலைக்காக பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினை ஸ்தாபித்தல்.<br><br>Ii.எல்லா தரத்தினை உடைய சேவகர்களையும் பயிற்சிவேலைத்திட்டங்களுக்கு அனுப்புதல்.<br><br>Iiiதகவல் தொழில்நுட்ப மற்றும் பாவனை தொடர்பான அறவினை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

Sri Jayewardenepura General Hospital

Thalapathpitiya,Nugegoda,Sri Lanka

Phone No: +2779041 Fax: +94112778661

E-mail: planningsjgh@gmail.com

srijayewardenepurahospital@gmail,com

Website:www.sjghsrilanka.org